ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions

# 2024

# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව සහ ගිණුම්
## வருடாந்த செயற்றிறன் அறிக்கை மற்றும் கணக்குகள்
## Annual Performance Report & Accounts

විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව
ஓய்வூதியத் திணைக்களம்
Department of Pensions

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை மற்றும் கணக்குகள் - 2024

செலவினத் தலைப்பு இலக்கம் - 253

ஓய்வூதியத் திணைக்களம்

மாளிகாவத்தை

கொழும்பு 10.

# உள்ளடக்கம்

**1. நிறுவனம்சார் விபரக் குறிப்பு**

1.1. அறிமுகம் ....................................................................................................................1

1.2 தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள் .....................................................2

1.3 முக்கிய செயற்பாடுகள் ...............................................................................................3-4

1.4. நிறுவனக்கட்டமைப்பு ..................................................................................................5-6

1.5 திணைக்களத்தின்முக்கிய பிரிவுகள் .................................................................................7

**2. முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு**

விசேட கருத்திட்டம்..........................................................................................9-25

சவால்கள்....................................................................................................25-26

ஓய்வூதியத் திணைக்களத்தின் முன்னோக்கிய பயணம்.........................................26-27

**3. 2024.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை**

3.1 நிதிச் செயலாற்றுகை அறிக்கை.......................................................................29

3.2. நிதி நிலை அறிக்கை....................................................................................30

3.3. காசுப் பாய்ச்சல்அறிக்கை..............................................................................31

3.4. நிதி அறிக்கைகளுக்கானகுறிப்புகள்.................................................................32

3.5. வருவாய் சேகரிப்பில் செயலாற்றுகை.............................................................33

3.6. ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்துவதிலுள்ள செயலாற்றுகை ......................33

3.7. நி.ஒ. 208 இன் பிரகாரம், ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் பிரதிநிதி என்றரீதியில் திணைக்களத்திற்கு / மாவட்ட செயலகத்திற்கு / மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்.................................................................34

3.8. நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதிலுள்ள செயலாற்றுகை..................34

3.9. உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதிக் கணக்குகள்.........................................35-36

3.10. 2024.12.31ஆம் திகதியன்றுமுடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்அரசாங்கத்தின்வருமானக் கணக்குகள் (மாகாண சபைகள் மற்றும் மத்திய அரசாங்க)......................................................................37-44

3.11. ஆசிரியர்களின் விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய நிதிக் கணக்குகள்...............45-47

3.12 அரச சேவைகள் சேமலாப நிதியக்கணக்குகள்...........................................................48-49

3.13. கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை ………........................................50-79

**4. செயலாற்றுகைக் குறிகாட்டிகள்**

4.1. செயலாற்றுகைக் குறிகாட்டிகள் (செயலாற்றுகை அடிப்படையில்).......................81-89

**5. நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதிலுள்ள செயலாற்றுகை**

5.1. அடையாளங் காணப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகள்…..............................91

5.2. நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் சாதைனைகள் மற்றும்

சவால்கள் ..........................................................................................................................91-92

**6. மனிதவள விவரக் குறிப்பு**

6.1. ஆளணி முகாமைத்துவம்...................................................................................................93

6.3. மனிதவள அபிவிருத்தி.................................................................................................93-101

**7. இணக்க அறிக்கை** ........................................................................................................103-110

# 01.
# நிறுவனம்சார் விபரக் குறிப்பு

## 1.1 அறிமுகம்

1970 ஆம் ஆண்டு பொது நிர்வாக அமைச்சின் கீழ் "ஏ" தரம் கொண்ட திணைக்களமாக நிறுவப்பட்ட ஓய்வூதியத் திணைக்களமானது, இலங்கை பொதுத்துறையின் ஓய்வு பெற்ற சமூகத்திற்கு சமூகப் பாதுகாப்பு சலுகைகளை வழங்கும் முன்னணி நிறுவனமாகும்.
இலங்கையில் ஓய்வூதியச் சட்டம் நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பே, அதாவது, 1898 ஆம் ஆண்டு ஜூன் 23 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்த 1898 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, விதவைகள் மற்றும் அனாதைகள் நிதியக் கட்டளைச் சட்டத்தின் படி செயல்படுத்தப்பட்டு வருகிறது. அப்போதிருந்து, அரசாங்க ஊழியர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை முகாமை செய்யும் பணியினைப் பொதுத் திறைசேரி மேற்கொள்கின்றது.

1934 பெப்ரவரி 5 ஆம் திகதி வெளியிடப்பட்டு 1972 மே 5 ஆம் திகதி மீண்டும் திருத்தப்பட்டதுடன் அவ்வப்போது திருத்தப்பட்ட ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பானது, 1898 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதியக் கட்டளைச் சட்டம் மற்றும் 1942 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, பொது சேவை ஊழியர் சேமலாப நிதியக் கட்டளைச் சட்டம் ஆகிய கட்டளைச் சட்டங்களைஅடிப்படையாகக் கொண்டு அந்த நன்மைகள் உரித்தாக்கப்படுவதுடன் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், 1953 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, விதவைகள் மற்றும் அனாதைகள் நிதியச் சட்டம் மற்றும் பிரிவேனாக்கள் மற்றும் உதவிப் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களுக்கான ஓய்வூதிய விதிமுறைகள், 1981 ஆம் ஆண்டின் ஆயுதப்படை ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை விதிமுறைகள், 1970 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, விதவைகள் மற்றும் அனாதைகள் (ஆயுதப் படைகள்) சட்டம் மற்றும் உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதியத் திட்டங்களும் இது தொடர்பில் நடைமுறையில் உள்ளன.

மேற்கண்ட சட்ட விதிகளின்படி குடியிய் ஓய்வூதியங்கள், விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் மற்றும் ஊனமுற்றோர் அனாதைகள் ஓய்வூதியம், ஆயுதப்படை ஓய்வூதியங்கள் மற்றும் பொது சேவை சேமலாப நிதிகள் தொடர்பான அனைத்து கொடுப்பனவுகளையும் அறவீடுகளையும் மேற்கூறிய சட்டவிதிகளுக்கேற்ப ஒழுங்குபடுத்துவதே ஓய்வூதியத் திணைக்களத்தின் முதன்மை செயல்பாடாகும்.

மேலும், டிஜிட்டல் தொழில்நுட்ப உத்திகள் மற்றும் தகவல் தொடர்பாடலை நவீனமயமாக்கல் மற்றும் இற்றைப்படுத்துவதன் மூலம், ஓய்வூதியக் கொடுப்பனவுப் பொறிமுறையை இலகுவாக்க முடிந்ததுடன், 725,000 க்கும் மேற்பட்ட ஓய்வூதியதாரர்கள் மற்றும் அவர்களின் வாரிசுகளின் நன்மைகளை உறுதி செய்யவும், ஓய்வூதியம் செலுத்துவதற்கு அப்பால் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் திருப்தி அடைந்த ஓய்வூதியதாரரை உருவாக்கவும் முடிந்தது. இந்தத் திணைக்களத்திற்கு அரை நூற்றாண்டுக்கும் மேலான வரலாறு உள்ளது.

02/2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கைக்கிணங்க 2024 நிதியாண்டில் ஓய்வூதியத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சமூகப் பாதுகாப்பு நன்மகளை நிர்வகித்தல் மற்றும் உரித்தாக்குதல் செயல்முறை மற்றும் நிதி நடவடிக்கைகளில் நேர்மறையான நிலை குறித்த விவரங்களை உள்ளடக்கி இந்த அறிக்கையானது தயாரிக்கப்பட்டுள்ளது.

## 1.2 தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள்




### தொலைநோக்கு

பொருளாதார மற்றும் சமூக ரீதியில் திருப்தி மிக்கதோர் ஓய்வூதியர் சமுதாயம்




### செயற்பணி

அரச சேவையில் ஓய்வூதியர்களுக்கும் அவர்களது பயனாளிகளுக்கும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிலைபேறான முகாமைத்துவமுறைகளைப் பயன்படுத்தி, தனியார் மற்றும் அரச துறையினர் உள்ளடங்கிய சேவைபெறுநர்களினதும் சேவை வழங்குனர்களினதும் திருப்தியை உயர்மட்டத்தில் உறுதிப்படுத்தி, சட்டரீதியான நலன்களை வழங்குதல்

### குறிக்கோள்கள்

- ஓய்வூதிய பிரமாணக் குறிப்பு, விதவைகள் மற்றும் அனாதைகள் கட்டளைச் சட்டம் மற்றும் விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் சட்டத்தின்படி அரசு ஊழியர்களின் ஓய்வூதிய நலன்களை வழங்கும் செயல்முறையை ஒழுங்குபடுத்துதல் மற்றும் தொடர்புடைய ஏற்பாடுகளை விதித்தல்.
- ஓய்வூதியம் தொடர்பான சட்ட கட்டமைப்புகள், விதிகள் மற்றும் கொள்கைத் தீர்மானங்களின்படி அரச ஊழியர்களின் ஓய்வூதியங்களை வழங்குதல்.
- மாதாந்த ஓய்வூதியப் நலன்களைத் தொடர்ந்தும் செலுத்துதல் மற்றும் மொத்தமாக ஒரே தடவையில் வழங்கப்படும் சலுகைகளை துல்லியமாக செலுத்துதல்.
- பொது சேவை சேமலாப நிதிய முறையை ஒழுங்குபடுத்துதல் மற்றும் சலுகைகளை வழங்குதல்.
- அரசாங்கத்தின் சார்பாக விதவைகள் மற்றும் அனாதைகளின் பங்களிப்புகள் மற்றும் பிற வருமானங்களை சேகரித்தல் மற்றும் நிர்வகித்தல்.
- ஆயுதப்படை ஓய்வூதியங்கள் மற்றும் ஓய்வுக்குப் பிந்தைய சலுகைகளை நிர்வகித்தல்
- செயலில் சேவையில் இருக்கும்போது இறந்த அல்லது ஊனமுற்ற முப்படைகள் மற்றும் பொலிஸ்துறை சேவைகளின் உறுப்பினர்களுக்கு இழப்பீட்டு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குதல்.
- சமூகப் பாதுகாப்பில் உலகளாவிய மற்றும் புத்தாக்கமிக்க போக்குகளைப் கற்பதன் மூலம் நவீன சமூகப் பாதுகாப்பு முறைகள் குறித்த கொள்கை வகுப்பதில் உதவுதல்.
- வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரித்து, அதன் முன்னேற்றம் குறித்து பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக்கூறுதல்.
- தேசிய ஓய்வூதிய தின கொண்டாட்டங்களை நடத்துதல்.

## 1.3 முக்கிய செயற்பாடுகள்

ஓய்வூதியத் திணைக்களத்தின் ஒட்டுமொத்தப் பணிகளும் நான்கு செயல்முறைகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

### 1.3.1 ஓய்வூதியங்கள் மற்றும் ஏனைய நன்மைகளை வழங்குதல்

**I. அரச மற்றும் நீதித்துறை அலுவலர்களின் ஓய்வூதி உரிமைகளை வழங்குதல்**

ஓய்வூதிய பிரமாணக் குறிப்பினடிப்படையில், அரசாங்கஊழியர்கள், நீதித்துறை, பிரிவேனா ஆசிரியர்கள், தனியார் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அட்டவணை "ட" இல் உள்ளடக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடைகளை உரித்தாக்குதல்.

**II. ஆயுதப் படைகளுக்கு ஓய்வூதிய உரிமை வழங்குதல்**

ஆயுதப் படை அலுவலர்கள் மற்றும் பிற பதவிகளுக்கு ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடைகளை வழங்குதல், இழப்பீட்டு ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள், ஊனமுற்றோர் ஓய்வூதியம், நிலையான மாதாந்த கொடுப்பனவுகள் மற்றும் தங்கியிருப்போருக்கான கொடுப்பனவுகளை உரித்தாக்குதல்.

**III. விதவைகள் மற்றும் அனாதைகள் அல்லது தபுதாரர்கள் மற்றும் அனாதைகளுக்கான ஓய்வூதியங்களை வழங்குதல்**

சிவில் நீதிமன்றங்கள் மற்றும் இராணுவ ஊழியர் அல்லது ஓய்வூதியதாரர் இறந்த பின்னர் விதவைகள் அல்லது தபுதாரர்கள் மற்றும் அனாதைகளுக்கான ஓய்வூதியங்களை வழங்கத் தொடங்குதல், பொதுப் பணியில் இருக்கும்போது இறக்கும் அரசு ஊழியர்களுக்கு மரணப் பணிக்கொடை வழங்குதல், அனாதைகளுக்கான ஓய்வூதியங்களை வழங்குதல்.

**IV. அரச சேவை சேமலாப நிதியத்தின் சலுகைகளை உரித்தாக்குதல்**

பொது சேவையில் ஓய்வூதியம் பெறாத நியமனங்களை வைத்திருப்பவர்களுக்கு சேவையின் இறுதிச் சலுகைகளை வழங்குதல்.

### 1.3.2 கொடுப்பனவு ஒழுங்குமுறை

ஓய்வூதியங்கள், விதவைகள், தபுதாரர்கள், அனாதைகள் மற்றும் ஊனமுற்ற ஓய்வூதியங்கள் போன்றவற்றின் மாதாந்தக் கொடுப்பனவுகள், அரச சேவை சேமலாப நிதியத்தின் நிதியின் சலுகை கொடுப்பனவுகள், விதவைகள் மற்றும் அனாதைகள் நிதிகளைத் திரும்பப் பெறுதல், ஓய்வூதியக் கொடுப்பனவுகள், மரணப் பணிக்கொடை கொடுப்பனவுகள், வாரிசுரிமைக் கொடுப்பனவுகள், ஓய்வூதிய உரிமையைப் பெறாமல் சேவையை விட்டு வெளியேறும் ஆயுதப்படை சேவை அதிகாரிகளின் சேவைக் கொடுப்பனவு மற்றும் சிவில் சேவைக் கொடுப்பனவுகளைச் செயலாக்குதல், விசேட இழப்பீட்டு கொடுப்பனவுகள், வெளிநாட்டு ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் போன்றவை துல்லியத்துடன் ஒழுங்குபடுத்தப்படும்.

### 1.3.3 வருவாய்களை ஒழுங்குபடுத்துதல்

மத்திய அரசாங்கம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் சமூகப் பாதுகாப்பு தொடர்பான விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் பங்களிப்புகளின் வருவாய்கள், உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்தின் வருவாய்கள், அரச சேவை சேமலாப நிதியத்தின் வருவாய்கள், ஆசிரியர் விதவைகள் மற்றும் அனாதைகள் நிதியின் பங்களிப்புகளின் வருவாய்கள், கட்டிட வாடகைகள் மற்றும் விடுமுறை விடுதி வருமானத்தை ஒழுங்குபடுத்துதல்.

### 1.3.4 அபிவிருத்தி அணுகுமுறை

அரசாங்கத்தின் கொள்கைக் கட்டமைப்பு மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதை நோக்கமாகக் கொண்ட கொள்கைத் தீர்மானத்தை ஆதரித்தல், சமூகப் பாதுகாப்புக் கொள்கைகள் குறித்து வழக்கமான ஆய்வுகளை நடத்துதல், பொது மற்றும் தனியார் நிறுவனங்களை ஈடுபடுத்துவதன் மூலம் ஓய்வூதியத் திணைக்கள வாடிக்கையாளர்கள் அல்லது சிரேஷ்ட பிரஜைகளுக்கு சிறப்பு சலுகைகளை வழங்குதல் மற்றும் அரசாங்க இலக்குகளை அடையக்கூடிய வகையில் மனித மற்றும் பௌதீக வளங்களைத் தொடர்ந்து மேம்படுத்துதல்.

## 1.4. நிறுவனக்கட்டமைப்பு



**ஓய்வூதியத் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள்- 2024.12.31 திகதியிலுள்ளவாறானது**

| பதவியின் பெயர் | பதவி | பொருந்தும் சேவை | சம்பள திட்டம் | அனுமதிக்கப் பட்டமொத்த எண்ணிக்கை | தற்போதுள்ள ஆளணி | நிரப்பப்பட வேண்டிய அளணி |
|---|---|---|---|---|---|---|
| சிரேஸ்ட தரம் | ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் | SLAS (விசேட) | SL-3-2016 | 1 | 1 | 0 |
| | மேலதிக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் | SLAS ( விசேட ) | SL-3-2016 | 1 | 1 | 0 |
| | மருத்துவ அலுவலர் (ஒப்பந்த அடிப்படை) | முதன்மை தரம் | SL-2-2016 | 1 | 0 | 1 |
| | ஓய்வூதியப் பணிப்பாளர் | SLAS (வகுப்பு I) | SL-1-2016 | 5 | 5 | 0 |
| | பிரதம கணக்காளர் | SLAcS( வகுப்பு I) | SL-1-2016 | 1 | 0 | 1 |
| | பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் | SLAcS( வகுப்பு I) | SL-1-2016 | 1 | 0 | 1 |
| | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் | SLAS( வகுப்பு II or III) | SL-1-2016 | 10 | 9 | 1 |
| | கணக்காளர் | SLAcS( வகுப்பு I) | SL-1-2016 | 1 | 1 | 0 |
| | கணக்காளர் | SLAcS( வகுப்பு II or III) | SL-1-2016 | 9 | 8 | 1 |
| | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் | SLITS( வகுப்பு II or III) | SL-1-2016 | 1 | 1 | 0 |
| | சட்ட அலுவலர் | திணைக் | SL-1-2016 | 1 | 1 | 0 |
| | கணினி மென்பொருள் உருவாக்குநர் (ஒப்பந்த அடிப்படை) | திணைக் | | 3 | 0 | 3 |
| | | | | **35** | **27** | **08** |
| மூன்றாம் நிலை | நிர்வாக உத்தியொகத்தர் | PMAS(அதிவசேட) | MN-7-2016 | 4 | 3 | 1 |
| | மொழிபெயர்ப்பாளர்<br>சிங்களம் - தமிழ் 01<br>சிங்களம் - தமிழ் 01 | TS | MN-6-2016 | 2 | 2 | 0 |
| | தகவல் தொழில் நுட்ப உத்தியோகத்தர் | SLICTS | MN-6-2016 | 5 | 5 | 0 |
| | | | | **11** | **10** | **01** |
| இரண்டாம் நிலை | தொழில் நுட்ப உத்தியோகத்தர் | SLTS | MN-3-2016 | 1 | 0 | 1 |
| | நிதி உதவியாளர் | RS | MN-4-2016 | 1 | 0 | 1 |
| | ஓய்வூதிய அலுவலர் | திணைக் | MN-4-2016 | 186 | 174 | 12* |
| | அபிவிருத்தி உத்தியோகத்தர் | DOS | MN-4-2016 | 598 | 585 | 13 |
| | முகாமைத்துவ சேவைகள் அலுவலர் | MSO | MN-2-2016 | 190 | 149 | 41 |
| | தகவல் தொழில் நுட்ப உத்தியோகத்தர் | SLICTS | MT-1-2016 | 5 | 5 | 0 |
| | ஆவண உதவியாளர் | திணைக் | MN-1-2016 | 119 | 117 | 02* |
| | உதவி மேசை கையாளுபவர் | திணைக் | | 2 | 0 | 2 |
| | | | | **1,102** | **1,030** | **72** |
| ஆரம்ப நிலை | பங்களாப் பாதுகாப்பாளர் | திணைக் | PL-1-2016 | 2 | 1 | 1 |
| | சமையற்காரர்/ தோட்டக்காரர் | திணைக் | PL-2-2016 | 4 | 2 | 2 |
| | சாரதி | DS | PL-3-2016 | 12 | 12 | 0 |
| | மின்னியல் வல்லுநர் | திணைக் | PL-3-2016 | 1 | 0 | 1 |
| | அலுவலக உதவியாளர் | OES | PL-1-2016 | 78 | 61 | 17 |
| | | | | **97** | **76** | **21** |
| | மொத்தம் | | | **1,245** | **1,143** | **102** |

* ஓய்வூதிய அலுவலர்கள் மற்றும் ஆவண உதவியாளர்கள் மீண்டும் பணியமர்த்தப்பட மாட்டார்கள்.

## 1.5 திணைக்களத்தின் முக்கிய பிரிவுகள்

1. பணிப்பாளர் நாயகம் அவர்களின் அலுவலகம்
2. மேலதிகப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் அலுவலகம்
3. பணிப்பாளர் (ஓய்வூதியம்) அலுவலகம்
4. நிர்வாகப் பிரிவு
5. பரவலாக்கப்பட்ட ஓய்வூதியப் பிரிவு
6. மையப்படுத்தப்பட்ட ஓய்வூதியப் பிரிவு
7. சத்கார பியஸ
8. கொள்கை மற்றும் வ பிரிவு
9. ஆயுதந் தாங்கிய சேவைகள் ஓய்வூதியப் பிரிவு
10. வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவு
11. விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியப் பிரிவு
12. கொடுப்பனவுகள் பிரிவு
13. மாதாந்த கொடுப்பனவுப் பிரிவு
14. பணிக்கொடை கொடுப்பனவுப் பிரிவு
15. முரண்பாடுகள் பிரிவு
16. விதவைகள் மற்றும் அனாதைகள் பங்களிப்பு முகாமைத்துவப் பிரிவு
17. வழங்கல் பிரிவு
18. அதிகப்படியான கொடுப்பனவு அறவிடல் பிரிவு
19. அரச சேவை சேமாப நிதி
20. சட்டப் பிரிவு
21. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
22. தகவல் தொழில்நுட்பப் பிரிவு
23. ஊடகப் பிரிவு
24. தபால் பிரிவு
25. 1970 – துரித தொலைபேசி அழைப்புப் பிரிவு

# 02.
# முன்னேற்றம்  மற்றும் முன்னோக்கு

## விசேட திட்டம்

- **பணிக்கொடை கொடுப்பனவுகளை வினைத்திறனாக மேற்கொள்ளல்**

2024 மார்ச் மாதம் வரை, பணிக்கொடை கொடுப்பனவுகள் காசோலைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டன, ஆனால் இப்போது ஸ்லிப் முறை (Slip method) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.எனவே ஓய்வூதியதாரர்கள் தாமதமின்றி தங்கள் சலுகைகளைப் பெற வசதி செய்யப்பட்டுள்ளதுடன் ஓய்வூதியங்கள் தொடங்கப்பட்ட அதே மாதத்தில் பணிக்கொடை கொடுப்பனவுகள் இப்போது மேற்கொள்ளப்படுகின்றன. அதன்படி, 2024 டிசம்பர் 31 நிலவரப்படி 40,926 ஓய்வூதியதாரர்களுக்கு பணிக்கொடை கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

- **விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியங்களுக்கான பங்களிப்பு நிலுவைத் தொகையை அறவிடும்போது தொடர்புடைய வட்டியை எவ்வாறு அறவிடுவது என்பது குறித்த வழிமுறைகளை வழங்குதல்.**

நிலுவையில் உள்ள விதவைகள் மற்றும் அனாதைகளின் பங்களிப்புகளை செலுத்துவதில் அறவிடப்படும் வட்டி வீதம் மற்றும் வட்டி முறை தொடர்பாக எழுந்துள்ள சிக்கல் சூழ்நிலையைத் தீர்க்க, கௌரவ சட்டமா அதிபர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் வழங்கிய அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதலின்படி, 2024.04.02 ஆம் திகதிய ஓய்வூதிய ஆலோசனைக் கடித இல. 01/2024 வெளியிடப்பட்டது.

- **முப்படைகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு ரூ. 5000.00 மாதாந்த கொடுப்பனவை வழங்குதல்**

2024.08.06 திகதிய ஓய்வூதிய அறிவுறுத்தல் கடிதம் இல. 06/2024, பயங்கரவாதச் செயல்களால் ஊனமுற்ற முப்படைகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கும், மரணமடைந்த அதிகாரிகளின் தங்கியிருப்போருக்கும் 55 வயது வரை மாதாந்த கொடுப்பனவை ரூ. 5000.00 இனை செலுத்தும் பொறுப்பு முப்படைகள் மற்றும் பொலிஸ் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- **விதவைகள் மற்றும் அனாதைகள் கொடுப்பனவுகளை வினைத்திறனாக மேற்கொள்ளல்**

DS Portal தரவு முறை மூலம் விதவைகள்/தபுதாரர்கள்/அனாதைகள்/ஊனமுற்ற அனாதைகள் ஓய்வூதிய விண்ணப்பங்களை உள்ளிடுவதற்கான வாய்ப்பை வழங்குவதன் மூலம் விதவைகள் மற்றும் அனாதைகள் கொடுப்பனவுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு 2024.08.01 ஆம் திகதிய ஓய்வூதிய அறிவுறுத்தல் கடிதம் இல. 05/2024 மூலம் ஓய்வூதிய சுற்றறிக்கை 03/2020 இன் விதிகளின்படி, நிகழ்நிலைத் தரவுத்தள அமைப்பின் மூலம் சமர்ப்பிக்க முடியாத விதவைகள்/ தபுதாரர்கள் /அனாதைகள்/ஊனமுற்ற அனாதைகள் ஓய்வூதிய

விண்ணப்பங்களை உள்ளிடுவதற்கான வாய்ப்பை வழங்குவதன் மூலம் விதவைகள் மற்றும் அனாதைகள் கொடுப்பனவுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- **விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அனாதைகளை முறைமையில் பதிவுசெய்தல்**

2024 டிசம்பர் 31 ஆம் திகதிய நிலவரப்படி, விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அனாதைகளை முறைமையில் பதிவு செய்வதற்காக பெறப்பட்ட 36,652 விண்ணப்பங்களுக்கு உறுப்புரிமை இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- **ரூ. 3000/- சிறப்பு இடைக்கால மாதாந்தக் கொடுப்பனவை வழங்குதல்**

2024.07.24 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மான இல. AMAP/24/1453/601/090 மற்றும் 2024.08.12 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மான இல. AMAP/20/1608/605/058 ஆகியவற்றின் படி, பொது சேவையிலிருந்து ஓய்வு பெற்ற அனைத்து ஓய்வூதியதாரர்களுக்கும் 2024 ஒக்டோபர் முதல் ரூ. 3000/- சிறப்பு இடைக்கால மாதாந்த உதவித்தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- **தரவு அமைப்புகளை மேம்படுத்துதல்**

- இராணுவ ஓய்வூதியங்களை திருத்துவதற்கான ஒரு நிகழ்நிலை தகவல் அமைப்பை (பிரிவு 6) உருவாக்குதல், இதன் மூலம் இராணுவ ஓய்வூதியங்களில் திருத்தங்கள் தேவைப்படும்போது அதை மிகவும் துல்லியமாகவும் திறமையாகவும் செய்ய முடியும்.

- பொது நிர்வாக சுற்றறிக்கை 14/2022 இன் படி, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு விடுப்பு எடுத்த அரசு அதிகாரிகளின் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய பங்களிப்புகளுக்கான மாதாந்த அல்லது காலாண்டு பணம் அனுப்புதல்கள் நிகழ்நேரத்தில் புதுப்பிக்கப்படும் வகையில் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய பணம் அனுப்பும் முகாமைத்துவ முறையை மேம்படுத்துதல். இது ஒரு நிகழ்நிலைத் தகவல் அமைப்பு மூலம் மக்கள் வங்கியின் தரவு அமைப்புகளுடன் தொழில்நுட்ப ரீதியாக இணைப்பதன் மூலம் செய்யப்படுகிறது, மேலும் விடுமுறை எடுக்கும் அதிகாரிகள் ஒரு விடுமுறையை முடிக்க, ஒரு விடுமுறையை நீட்டிக்க மற்றும் ஒரு புதிய விடுமுறையில் நுழைய மிகவும் வசதியான முறையில் தகவல் அமைப்பின் புதிய பதிப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

- ஓய்வு பெற்றவர்களுக்கு இலவச புகையிரத அனுமதிப் பத்திரம் பெறுவதற்கும் புகையிரதப் பயணிகள் இருக்கைகளை முன்பதிவு செய்வதற்கும் ஒரு நிகழ்நிலை அமைப்பு 2025 ஆம் ஆண்டின் முதல் மாதத்தில் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இது தானியங்கி தரவு சரிபார்ப்பின் கீழ் சரியான பயனாளிகளை அடையாளம் காணவும், ஓய்வூதியதாரர் இலவச புகையிரத அனுமதிப் பத்திரங்களுக்கான திறமையான கட்டண செயல்முறையை எளிதாக்கவும், பிரயாண அனுமதிச் சீட்டினை அச்சிடுவதற்கான அரச செலவுகளைக் குறைக்க வசதி வழங்கப்பட்டுள்ளதுடன் 22024.12.31 ஆம் திகதிய ஓய்வூதிய சுற்றறிக்கை 02/2024 மூலம் இந்த முறை குறித்து வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

- ஓய்வூதியதாரர் இறப்புகளை திறம்பட அறிந்துகொள்வதற்காக பதிவாளர் நாயகம் திணைக்களத்துடன் இணைந்து ஒரு தகவல் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதுடன் இந்த அமைப்பினை 2025 இல் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

- அரச சேவை சேமலாப நிதியில் (PSPF) பங்களிப்புகளைப் பெறுவதும் சலுகைகளை வழங்குவதும் காசோலைகள் மூலம் நடைபெறுவதுடன் அதனை இலங்கை வங்கியின் தகவல் தொழில்நுட்ப அலகுடன் ஒருங்கிணைப்பதற்கான Online reconciliation மூலம; நிகழ்நிலையில் ணம் அனுப்புதல் மற்றும் பதிவேடுகளை பராமரிப்பதற்கும் முடியுமான - அரச சேவை சேமலாப நிதி (PSPF) செய்முறையானது மீளுருவாக்கம்(Re-engineer) செய்யப்பட்டுள்ளதுடன் 2025 ஜனவரி மாதம் அக்கட்டமைப்பை வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

- விதவைகள் மற்றும் அனாதைகள் பதிவு தகவல் அமைப்பு

அனைத்து அரசு அதிகாரிகள் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்பவர்கள் பற்றிய தகவல்களை உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டுள்ள இந்த தகவல் அமைப்பு, தற்போதுள்ள பதிவு தகவல் அமைப்பிலிருந்து தரவு மற்றும் மேலதிகத் தரவுகளைச் சேர்க்கவும், ஓய்வூதியப் பலன் சுயவிவரமாக (Pension beneficiary profile) ஒரு மெய்நிகர் (Virtual file) கோப்பை உருவாக்கவும் தயாராகி வருகிறது. இந்த தகவல் அமைப்பு QR குறியீட்டைக் கொண்ட அடையாள அட்டையை வழங்குவதாகும், இதனால் அரச அதிகாரிகள் மற்றும் அவர்களின் விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதிய பயனாளிகளின் அடையாளங்களை சரிபார்க்க முடியும்.

- **திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தை மேம்படுத்துதல்**

ஓய்வூதியம் பெற்றவர்கள் தங்கள் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைப் பயன்படுத்தி மூன்று மொழிகளிலும் தங்கள் எதிர்பார்க்கப்படும் ஓய்வூதிய சேவையின் தற்போதைய நிலையை சரிபார்க்கும் வகையில் வலைத்தளம் புதுப்பிக்கப்பட்டுள்ளது, மேலும் இதனை 2025 சனவரி மாதத்தில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

■ **பயிற்சித் திட்டங்களை நடத்துதல்.**

- ஓய்வூதியத் திணைக்களத்தின் ஓய்வூதிய முகாமைத்துவ தரவு அமைப்பு தொடர்பான கடமைகளைச் செய்யும் பல்வேறு அரசு நிறுவனங்களின் விடய அலுவலர்களுக்கும், திணைக்களத்துடன் இணைக்கப்பட்ட பிரதேச செயலகங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கும் ஆன்லைன் முறை மூலம் திணைக்களத்தின் சிரேஷ்ட மற்றும் இரண்டாம் நிலை அதிகாரிகளுக்கு பயிற்சித் திட்டங்கள் திணைக்கள வளாகத்தில் நடத்தப்பட்டுள்ளன. தற்போது, 28 உள்ளக பயிற்சித் திட்டங்கள் மூலம் கிட்டத்தட்ட 4,500 அதிகாரிகள் குழுவிற்கு பயிற்சி நடத்தப்பட்டுள்ளது.

- மேலும், விடயத் தேவைக்கேற்ப, பிற அரச நிறுவனங்களால் நடத்தப்படும் 19 பயிற்சித் திட்டங்களில் இணைய அதிகாரிகளுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது, மேலும் பல்வேறு அரச நிறுவனங்களால் நடத்தப்படும் 24 பயிற்சித் திட்டங்களுக்கான வளங்களும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், 2024.06.05 ஆம் திகதியன்று திணைக்களத்தில் கள ஆய்வு சுற்றுப்பயணத்திற்கு வருகை தந்த திருகோணமலை சமுத்திர மற்றும் கடல்சார் விஞ்ஞான பீடத்தின் அதிகாரிகள் குழுவிற்கு, பொது ஓய்வூதியம் செலுத்தும் செயல்முறை, முப்படைகளைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்போருக்கான ஓய்வூதிய சலுகைகள் மற்றும் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியம் செலுத்தும் செயல்முறை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒரு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.






சமுத்திர மற்றும் கடல்சார் விஞ்ஞான பீடத்தின் அதிகாரிகளுக்காக நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்வு

- **தேசிய ஓய்வூதிய தின கொண்டாட்டம்**

ஒக்டோபர் 08 ஆம் தேதி வரும் தேசிய ஓய்வூதிய தினத்தை முன்னிட்டு, ஓய்வு பெற்ற சமூகத்திற்கு வழங்கப்படும் சேவைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், மூன்று தேசிய பத்திரிகைகளில் பல பக்கங்கள் கொண்ட ஒரு பத்திரிகைத் துணை வெளியீடு வெளியிடப்பட்டது.

**2024 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கை**

| | வெளியிடப்பட்ட திகதி | சுற்றறிக்கையின் இலக்கம் | விடயம் |
|---|---|---|---|
| 01 | 2024.11.12 | 01/2024 | 2025 ஆம் ஆண்டில் ஓய்வூதியம் செலுத்துதல் |
| 02 | 2024.12.31 | 02/2024 | ஓய்வூதியதாரர்களுக்கு இலவச புகையிரத அனுமதிப் பத்திரங்களைப் பெறுதல் மற்றும் புகையிரதப் பயணிகள் இருக்கைகளை நிகழ்நிலையில் முன்பதிவு செய்தல் |
| 03 | 2024.12.31 | 03/2024 | அரச சேவை சேமலாப நிதி திட்டத்தின் கீழ் நிகழ்நிலையில் உறுப்பினர்களைப் பதிவு செய்தல், பங்களிப்புகளை அனுப்புதல் மற்றும் உரிமைகளைப் பெறுதல் |

## 2024 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிவுறுத்தல் கடிதங்கள்

| | வெளியிடப்பட்ட திகதி | சுற்றறிக்கையின் இலக்கம் | விடயம் |
|---|---|---|---|
| 01 | 2024.01.08 | 07/2023 (I) | ஓய்வூதிய ஆயுள் சான்றிதழ் - 2024 |
| 02 | 2024.03.21 | 02/2020 (II) | ஓய்வூதியதாரர்களின் தகவல்களை வெளியிடாமை |
| 03 | 2024.04.02 | 01/2024 | விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அனாதை ஓய்வூதியத்திற்கான பங்களிப்பு நிலுவைத் தொகையை அறவிடும் போது அதற்கு வட்டி அறவிடும் விதம் |
| 04 | 2024.05.29 | 02/2024 | மொபிடெல் மற்றும் டயலொக் தனியார் நிறுவனங்களிடமிருந்து வாங்கப்பட்ட கைபேசிகள் மற்றும் சிம் அட்டைகள் தொடர்பான கொடுப்பனவுகளை ஓய்வூதியதாரர்கள் தங்கள் மாதாந்த ஓய்வூதியத்திலிருந்து கழிக்க பின்பற்ற வேண்டிய முறை |
| 05 | 2024.06.14 | 07/2023 (II) | ஓய்வூதிய ஆயுள் சான்றிதழ் - 2024 |
| 06 | 2024.07.30 | 03/2024 | தொகைமதிப்பு, புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் புள்ளிவிவர ஆய்வாளர் பதவியில் பணியாற்றி 2000.10.04 க்கு முன்பு ஓய்வு பெற்ற அதிகாரிகளின் ஓய்வூதியத்தை 16/2015 மற்றும் 14/2019 ஆம் பொதுநிர்வாக சுற்றறிக்கைகளின்படி திருத்துதல் |
| 07 | 2024.08.01 | 04/2024 | விதவைகள் மற்றும் அனாதை ஓய்வூதிய உரிமைக்காக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு கோப்புகளை சமர்ப்பிப்பதை ஒழுங்குபடுத்துதல் |
| 08 | 2024.08.01 | 05/2024 | ஓய்வூதிய சுற்றறிக்கைகள் 03/2020, ஆன்லைன் தரவுத்தள அமைப்பின் மூலம் சமர்ப்பிக்க முடியாத விதவை/விதவை/அனாதை/ஊனமுற்ற அனாதை ஓய்வூதிய விண்ணப்பங்கள் DS Portal அமைப்பின் மூலம் சமர்ப்பிக்கப்படுதல். |
| 09 | 2024.08.06 | 06/2024 | பயங்கரவாதச் செயல்களால் ஊனமுற்ற முப்படைகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கும், மரணமடைந்த அவ்வதிகாரிகளின் தங்கியிருப்போருக்குக்கும். 55 வயது வரை இழப்பீட்டு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்தும் போது அது தொடர்பில் 5000.00 மாதாந்த கொடுப்பனவை உரித்தாக்குதல் |
| 10 | 2024.10.04 | 07/2024 | பிற சட்ட அமுலாக்கப் பணிகளில் பணியாற்றும்போது மரணமடைந்த பொலிஸ் அதிகாரிகளின் தங்கியிருப்போருக்கும், ஊனம் காரணமாக ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரிகளுக்கும் 55 வயது வரை சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்துதல் |

| | | | |
|---|---|---|---|
| 11 | 2024.10.10 | 01/2024 (I) | விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அனாதைகளுக்கான பங்களிப்பு நிலுவைத் தொகையில் தொடர்புடைய காலத்தின்படி 4% சிறு வட்டி வீதத்தைக் கணக்கிடும்முறை |
| 12 | 2024.11.07 | 08/2024 | ஊனமுற்ற அனாதை ஓய்வூதியம் செலுத்துதல் |
| 13 | 2024.12.09 | 09/2024 | முப்படைகளில் பணியாற்றும் அனைத்து தர மருத்துவ அதிகாரிகள், அனைத்து பல் மருத்துவர்கள் மற்றும் அனைத்து சிறப்பு மருத்துவ அதிகாரிகளின் ஓய்வூதியத்திற்கான ஏற்பாடுகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல் |
| 14 | 2024.12.19 | 10/2024 | ஓய்வூதிய ஆயுள் சான்றிதழ் - 2025 |

- **ஓய்வூதியத்தை செலுத்துதல்**

  - **மாதாந்தம் செலுத்தப்பட்டுள்ள சிவில், இராணுவ விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியங்களின் எண்ணிக்கை**

| மாதம் | சிவில் | | வி&அ. ஓ. | | இராணுவம் | | மொத்த ஓய்வூதிய தாரர்களின் எண்ணிக்கை | மொத்தத் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஓய்வூதிய தாரர்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) | ஓய்வூதிய தாரர்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) | ஓய்வூதிய தாரர்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) | | |
| ஜனவரி | 384,857 | 14,985,438,137 | 187,689 | 5,262,463,835 | 131,924 | 6,027,146,328 | 704,470 | 26,275,048,299 |
| பிப்ரவரி | 386,744 | 15,515,588,603 | 187,852 | 5,299,761,141 | 132,746 | 6,176,732,335 | 707,342 | 26,992,082,079 |
| மார்ச் | 387,909 | 15,344,285,186 | 188,062 | 5,366,163,008 | 133,261 | 6,162,290,818 | 709,232 | 26,872,739,013 |
| ஏப்ரல் | 389,421 | 16,457,882,833 | 188,419 | 5,685,874,554 | 134,175 | 6,584,894,985 | 712,015 | 28,728,652,372 |
| மே | 389,021 | 16,103,722,231 | 188,093 | 5,553,585,049 | 134,397 | 6,448,630,142 | 711,511 | 28,105,937,421 |
| ஜூன் | 389,870 | 16,521,402,629 | 188,095 | 5,604,159,766 | 134,822 | 6,600,037,172 | 712,787 | 28,725,599,567 |
| ஜூலை | 389,307 | 16,576,044,061 | 186,715 | 5,679,519,108 | 134,693 | 6,625,221,701 | 710,715 | 28,880,784,870 |
| ஆகஸ்ட் | 390,969 | 16,722,085,036 | 187,366 | 5,669,878,286 | 135,485 | 6,665,345,499 | 713,820 | 29,057,308,820 |
| செப்டம்பர் | 392,966 | 17,013,185,129 | 187,913 | 6,183,807,294 | 136,468 | 6,796,146,497 | 717,347 | 29,993,138,920 |
| அக்டோபர் | 394,183 | 17,989,222,140 | 188,233 | 6,218,097,078 | 137,193 | 7,201,405,440 | 719,609 | 31,408,724,657 |
| நவம்பர் | 395,177 | 18,115,786,892 | 188,537 | 6,186,676,578 | 137,737 | 7,272,063,317 | 721,451 | 31,574,526,787 |
| டிசம்பர் | 397,182 | 18,493,979,335 | 189,509 | 6,456,073,019 | 138,591 | 7,368,376,229 | 725,282 | 32,318,428,583 |
| **மொத்தம்** | | **199,838,622,211** | | **69,166,058,717** | | **79,928,290,463** | | **348,932,971,390** |

- **வருடாந்த ஓய்வூதியச் செலவினம்**

| வருடம் | செலவு (ரூபா,000) |
|---|---|
| 2020 | 257,833,481 |
| 2021 | 269,827,125 |
| 2022 | 309,066,783 |
| 2023 | 372,364,441 |
| 2024 | 395,720,004 |

- **செயல்படுத்தப்பட்ட புதிய ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை (ஜனவரி - டிசம்பர்)**

| மாதம் | சிவில் | | வி&அ. ஓ. | | இராணுவம் | | மொத்த ஓய்வூதிய தாரர்களின் எண்ணிக்கை | மொத்தத் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஓய்வூதிய தாரர்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) | ஓய்வூதிய தாரர்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) | ஓய்வூதிய தாரர்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) | | |
| ஜனவரி | 793 | 186,953,399 | 583 | 185,754,605 | 309 | 61,397,149 | 1,685 | 434,105,153 |
| பிப்ரவரி | 2,994 | 881,382,263 | 872 | 234,329,842 | 898 | 209,679,299 | 4,764 | 1,325,391,404 |
| மார்ச் | 2,048 | 586,079,387 | 877 | 247,826,529 | 591 | 144,751,487 | 3,516 | 978,657,402 |
| ஏப்ரல் | 2,335 | 651,802,944 | 1,065 | 265,309,311 | 930 | 234,038,797 | 4,330 | 1,151,151,052 |
| மே | 888 | 253,774,071 | 517 | 142,466,536 | 343 | 91,185,753 | 1,748 | 487,426,360 |
| ஜூன் | 2,035 | 641,039,572 | 801 | 190,018,757 | 596 | 169,570,262 | 3,432 | 1,000,628,591 |
| ஜூலை | 2,356 | 685,605,289 | 979 | 281,495,898 | 825 | 230,233,706 | 4,160 | 1,197,334,893 |
| ஆகஸ்ட் | 2,250 | 704,435,285 | 909 | 222,503,758 | 751 | 178,516,648 | 3,910 | 1,105,455,691 |
| செப்டம்பர் | 2,638 | 794,714,971 | 889 | 275,470,740 | 868 | 212,926,079 | 4,395 | 1,283,111,789 |
| அக்டோபர் | 1,962 | 574,789,401 | 808 | 242,389,479 | 712 | 168,012,808 | 3,482 | 985,191,687 |
| நவம்பர் | 1,859 | 593,464,032 | 838 | 202,090,918 | 554 | 154,717,049 | 3,251 | 950,271,999 |
| டிசம்பர் | 2,821 | 892,900,210 | 1,531 | 412,777,336 | 910 | 209,987,919 | 5,262 | 1,515,665,465 |
| **மொத்தம்** | **24,979** | **7,446,940,823** | **10,669** | **2,902,433,709** | **8,287** | **2,065,016,954** | **43,935** | **12,414,391,485** |

- **மாவட்ட அடிப்படையிலான ஓய்வூதியதாரர்களின்எண்ணிக்கை மற்றும் செலவு - 2024 டிசம்பர்**

| மாவட்டம் | ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) | கழித்தல் | தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| கம்பஹா | 91,304 | 3,982,168,799 | 51,869,518 | 3,930,299,281 |
| கொழும்பு | 90,290 | 4,083,323,796 | 44,196,703 | 4,039,127,093 |
| குருநாகல் | 71,183 | 3,236,031,370 | 31,410,586 | 3,204,620,783 |
| காந்தா | 63,349 | 2,869,310,113 | 37,088,419 | 2,832,221,693 |
| களுத்துறை | 46,735 | 2,032,193,021 | 26,108,226 | 2,006,084,795 |
| அனுராதபுரம் | 41,939 | 1,909,009,731 | 37,655,131 | 1,871,354,600 |
| காலி | 40,729 | 1,815,038,826 | 23,655,213 | 1,791,383,613 |
| கேகாலை | 35,149 | 1,575,156,753 | 21,557,139 | 1,553,599,614 |
| பதுளை | 30,221 | 1,346,997,975 | 23,700,300 | 1,323,297,674 |
| மாத்தறை | 29,686 | 1,318,620,435 | 15,976,609 | 1,302,643,826 |
| இரத்தினபுரி | 25,122 | 1,108,552,882 | 14,748,103 | 1,093,804,779 |
| மாத்தளை | 19,682 | 874,963,088 | 12,881,644 | 862,081,444 |
| அம்பாந்தோட்டை | 18,534 | 822,995,930 | 11,696,271 | 811,299,659 |
| புத்தளம் | 16,550 | 727,849,835 | 9,157,973 | 718,691,862 |
| அம்பாறை | 15,656 | 733,238,680 | 10,868,778 | 722,369,902 |
| யாழ்ப்பாணம் | 15,541 | 684,521,518 | 3,482,699 | 681,038,819 |
| மொனராகலை | 13,388 | 576,498,429 | 8,293,741 | 568,204,688 |
| பொலன்னறுவை | 12,985 | 567,041,864 | 7,062,375 | 559,979,489 |
| நுவரெலியா | 12,383 | 535,326,021 | 6,617,013 | 528,709,008 |
| மட்டக்களப்பு | 9,456 | 442,528,639 | 4,259,475 | 438,269,165 |
| திருகோணமலை | 9,403 | 420,875,045 | 4,783,205 | 416,091,840 |
| புலம்பெயர்ந்தவர்கள் | 8,201 | 296,785,190 | 1,254,881 | 295,530,309 |
| வவுனியா | 3,312 | 157,414,700 | 1,884,761 | 155,529,939 |
| மன்னார் | 1,814 | 81,965,449 | 3,438,699 | 78,526,750 |
| கிளிநொச்சி | 1,361 | 58,835,253 | 474,053 | 58,361,200 |
| முல்லைத்தீவு | 1,309 | 61,185,241 | 305,406 | 60,879,835 |
| **மொத்தம்** | **725,282** | **32,318,428,583** | **414,426,922** | **31,904,001,660** |

- **பணிக்கொடை செலுத்துதல் ( ஜனவரி - டிசம்பர்)**

| மாதம் | ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) * |
|---|---|---|
| ஜனவரி | 3,155 | 3,937,198,930 |
| பிப்ரவரி | 2,938 | 3,278,639,559 |
| மார்ச் | 3,263 | 3,666,209,305 |
| ஏப்ரல் | 3,716 | 4,144,107,062 |
| மே | 3,567 | 3,717,688,053 |
| ஜூன் | 2,957 | 3,600,545,253 |
| ஜூலை | 3,474 | 4,105,179,144 |
| ஆகஸ்ட் | 3,722 | 3,978,596,650 |
| செப்டம்பர் | 2,408 | 2,677,718,573 |
| அக்டோபர் | 4,702 | 5,659,541,530 |
| நவம்பர் | 3,097 | 3,530,316,244 |
| டிசம்பர் | 3,927 | 4,154,230,796 |
| **மொத்தம்** | **40,926** | **46,449,971,099** |

* வெளியிடப்பட்ட ஒதுக்கீடுகள்

- **அக்ரஹார காப்புறுதி நிதியத்திற்கு அறவிடல் (ஜனவரி - டிசம்பர்)**

| மாதம் | ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) |
|---|---|---|
| ஜனவரி | 141,322 | 28,751,800 |
| பிப்ரவரி | 144,149 | 31,871,800 |
| மார்ச் | 146,051 | 31,210,000 |
| ஏப்ரல் | 148,225 | 32,067,400 |
| மே | 148,928 | 30,580,200 |
| ஜூன் | 150,778 | 32,255,000 |
| ஜூலை | 152,704 | 32,943,600 |
| ஆகஸ்ட் | 154,857 | 33,321,800 |
| செப்டம்பர் | 157,362 | 34,448,000 |
| அக்டோபர் | 159,207 | 33,802,800 |
| நவம்பர் | 160,888 | 34,250,800 |
| டிசம்பர் | 163,570 | 35,637,200 |
| **மொத்தம்** | - | **391,140,400** |

- ரூபா. 5000 மாதாந்தக் கொடுப்பனவ செலுத்தப்பட்ட ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை

| மாதம் | ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) |
|---|---|---|
| ஜனவரி | 604,097 | 3,016,229,149 |
| பிப்ரவரி | 606,394 | 3,027,732,541 |
| மார்ச் | 607,769 | 3,034,494,423 |
| ஏப்ரல் | 609,919 | 3,045,206,428 |
| மே | 609,688 | 3,044,049,375 |
| ஜூன் | 610,682 | 3,049,005,249 |
| ஜூலை | 610,523 | 3,048,309,362 |
| ஆகஸ்ட் | 613,478 | 3,063,057,394 |
| செப்டம்பர் | 616,879 | 3,080,033,411 |
| அக்டோபர் | 619,040 | 3,090,837,296 |
| நவம்பர் | 620,858 | 3,099,888,111 |
| டிசம்பர் | 624,595 | 3,118,514,173 |
| **மொத்தம்** | - | **36,717,356,913** |

- ரூபா. 3000 விசேட இடைக்கால கொடுப்பனவு செலுத்துதல்

| மாதம் | ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) |
|---|---|---|
| அக்டோபர் | 679,960 | 2,021,163,071 |
| நவம்பர் | 681,822 | 2,026,770,161 |
| டிசம்பர் | 685,155 | 2,038,969,169 |
| **மொத்தம்** | - | **6,086,902,401** |

- ஓய்வூதிய முரண்பாடுகள் மற்றும் திருத்தங்கள் (ஜனவரி -டிசம்பர்)

| மாதம் | ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|
| ஜனவரி | 1023 | 134 |
| பிப்ரவரி | 879 | 116 |
| மார்ச் | 859 | 122 |
| ஏப்ரல் | 875 | 123 |
| மே | 675 | 81 |
| ஜூன் | 970 | 137 |
| ஜூலை | 911 | 129 |
| ஆகஸ்ட் | 1165 | 164 |
| செப்டம்பர் | 1225 | 161 |
| அக்டோபர் | 960 | 134 |
| நவம்பர் | 1,289 | 175 |
| டிசம்பர் | 1,205 | 162 |
| **மொத்தம்** | **12,036** | **1,638** |

- **விதவைகள் மற்றும் அனாதைகள் பங்களிப்புத் தொகையைத் திரும்பப் பெறுதல் (ஜனவரி - டிசம்பர்)**

| மாதம் | செலுத்தப்பட்டஎண்ணிக்கை |
|---|---|
| ஜனவரி | 207 |
| பிப்ரவரி | 508 |
| மார்ச் | 165 |
| ஏப்ரல் | 238 |
| மே | 543 |
| ஜூன் | 445 |
| ஜூலை | 316 |
| ஆகஸ்ட் | 340 |
| செப்டம்பர் | 377 |
| அக்டோபர் | 615 |
| நவம்பர் | 714 |
| டிசம்பர் | 302 |
| **மொத்தம்** | **4,770** |

- **முப்படைகள் மற்றும் பொலிஸ் துறையைச் சேர்ந்த வீரர்கள் பணியில் இருந்தபோது இறந்த அல்லது ஊனமுற்றவர்களுக்கு இழப்பீடு மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்துதல் - டிசம்பர் 2024 வரை.**

| நிறுவனம் | எண்ணிக்கை | 2024 சனவரிமுதல் டிசம்பர் வரை<br>செலுத்தப்பட்ட தொகை ரூபா. மில் * |
|---|---|---|
| இராணுவம் | 32,366 | 39,968 |
| கடற்படை | 1,304 | 1,598 |
| விமானப் படை | 476 | 488 |
| பொலிஸ் | 1,504 | 2,192 |
| நிலையான கொடுப்பனவுகளைச் செலுத்துதல் | 3,538 | 1,320 |
| ரூபா. 5000 கொடுப்பனவைச் செலுத்துதல் | 34,645 | 1,179 |
| **மொத்தம்** | **39,188** | **46,745** |

* வெளியிடப்பட்ட ஒதுக்கீடுகள்

- **விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியப் நன்மைகளை வழங்குதல்**

| மாதம் | விதவைகள் மற்றும் அனாதைகளுக்கான புதிய கொடுப்பனவுகளின் எண்ணிக்கை | கொடுப்பனவு செய்யப்பட்டமரணப் பணிக்கொடைகளின்எண்ணிக்கை |
|---|---|---|
| ஜனவரி | 499 | 117 |
| பிப்ரவரி | 786 | 51 |
| மார்ச் | 777 | 136 |
| ஏப்ரல் | 773 | 89 |
| மே | 458 | 97 |
| ஜூன் | 741 | 124 |
| ஜூலை | 860 | 134 |
| ஆகஸ்ட் | 835 | 92 |
| செப்டம்பர் | 774 | 126 |
| அக்டோபர் | 718 | 130 |
| நவம்பர் | 748 | 100 |
| டிசம்பர் | 1,439 | 191 |
| **மொத்தம்** | **9,408** | **1,387** |

- **ஆயுதப் சேவைகள் பிரிவால் மத்திய தரவு அமைப்பில் சேர்க்கப்பட்டுள்ள ஓய்வூதியங்கள் மற்றும் திருத்தங்கள்**

| ஓய்வூதியத்தின் வகை | செலுத்தப்பட்ட எண்ணிக்கை (ஆயுதப் படை/ விமானப்படை/ கடற்படை) |
|---|---|
| சேவை ஓய்வூதிய கொடுப்பனவுகள் (10/12 ஆண்டுகளுக்குள்) | 100 |
| இராணுவ திருத்தங்கள் | 2,432 |
| ஊனமுற்றோர் சேவை ஓய்வூதிய கொடுப்பனவுகள் | 18 |
| திருத்தங்கள் (55 வயது பூர்த்தியடைதல்) | 1,083 |
| மரணப் பணிக்கொடை | 157 |
| சேவை பணிக்கொடை | 2,104 |
| சார்ந்திருப்போர் கொடுப்பனவுகள் | 230 |
| ஊனமுற்றோர் ஓய்வூதியம் | 8 |
| நிலையான கொடுப்பனவுகள் | 1,477 |
| விசேட இழப்பீடு | 45 |
| மறு சேவை | 382 |
| **மொத்தம்** | **8,086** |

- ஓய்வூதியம் செலுத்திய புலம்பெயர்ந்த ஓய்வு பெற்றவர்களின் எண்ணிக்கை

| மாதம் | ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|
| ஜனவரி | 7,987 | 256,480,531 |
| பிப்ரவரி | 8,079 | 262,483,083 |
| மார்ச் | 8,172 | 274,663,634 |
| ஏப்ரல் | 8,341 | 300,524,694 |
| மே | 8,457 | 275,371,340 |
| ஜூன் | 8,562 | 301,939,594 |
| ஜூலை | 7,506 | 248,294,856 |
| ஆகஸ்ட் | 7,609 | 248,719,077 |
| செப்டம்பர் | 7,802 | 296,505,526 |
| அக்டோபர் | 7,933 | 275,012,550 |
| நவம்பர் | 8,065 | 291,922,464 |
| டிசம்பர் | 8,201 | 296,785,190 |
| **மொத்தம்** | | **3,328,702,539** |

- **சம்பளமும் ஏனைய நிர்வாகச்செலவுகளும்**

| வருடம் | பெறுமதி (ரூபா 000) |
|---|---|
| 2020 | 38,107,393 |
| 2021 | 38,591,300 |
| 2022 | 41,003,000 |
| 2023 | 43,968,727 |
| 2024 | 47,714,819 |

- **அரச சேவை சேமலாப நிதி பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் (ஜனவரி -டிசம்பர்)**

| மாதம் | பெறுவனவுகள் (ரூபா) | கொடுப்பனவுகள் (ரூபா) |
|---|---|---|
| ஜனவரி | 72,846,256 | 40,461,924 |
| பிப்ரவரி | 57,972,018 | 35,820,935 |
| மார்ச் | 69,197,430 | 31,737,220 |
| ஏப்ரல் | 52,421,618 | 49,351,197 |
| மே | 67,942,541 | 42,670,138 |
| ஜூன் | 74,762,280 | 51,460,698 |
| ஜூலை | 73,770,404 | 56,529,710 |
| ஆகஸ்ட் | 78,921,601 | 66,304,132 |
| செப்டம்பர் | 59,655,240 | 44,524,477 |
| அக்டோபர் | 60,810,735 | 45,689,326 |
| நவம்பர் | 40,608,374 | 45,462,053 |
| டிசம்பர் | 59,171,215 | 90,268,943 |
| **மொத்தம்** | **768,079,712** | **600,280,752** |

- **அரச சேவை சேமலாப நிதியில் இணையும் மற்றும் வெளியேறும் புதிய உறுப்பினர்களின் எண்ணிக்கை (ஜனவரி -டிசம்பர்)**

| மாதம் | புதிதாக இணைந்துகொண்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை | வெளியேறிய உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஜனவரி | 419 | 314 |
| பிப்ரவரி | 403 | 300 |
| மார்ச் | 453 | 390 |
| ஏப்ரல் | 239 | 378 |
| மே | 361 | 412 |
| ஜூன் | 340 | 350 |
| ஜூலை | 462 | 334 |
| ஆகஸ்ட் | 292 | 417 |
| செப்டம்பர் | 210 | 390 |
| அக்டோபர் | 343 | 365 |
| நவம்பர் | 397 | 426 |
| டிசம்பர் | 571 | 469 |
| **மொத்தம்** | **4,490** | **4,545** |

- **அறவிடப்பட்ட விதவை/தபுதாரர்கள் பங்களிப்பு நிதியின்அளவு (ஜனவரி - டிசம்பர்)**

| **விபரம்** | சேகரிக்கப்பட்ட வருமானம் (ரூபா. மில்) |
|---|---|
| மத்திய அரசாங்கம் | 27,017 |
| மாகாண சபைகள் | 16,085 |
| ஆசிரியர் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதி | 572 |
| **மொத்தம்** | **43,674** |

- **பொது நிர்வாகச் சுற்றறிக்கை 14/2022 இன் கீழ் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு விடுப்பு எடுத்த அதிகாரிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட விதவை/தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய பங்களிப்புகளின் தொகை.**

| மாதம் | தொகை (ரூபா) |
|---|---|
| ஜனவரி | 13,270,012 |
| பிப்ரவரி | 12,846,564 |
| மார்ச் | 14,089,912 |
| ஏப்ரல் | 15,157,688 |
| மே | 16,803,886 |
| ஜூன் | 14,199,634 |
| ஜூலை | 18,254,754 |
| ஆகஸ்ட் | 18,566,515 |
| செப்டம்பர் | 16,390,857 |
| அக்டோபர் | 18,931,045 |
| நவம்பர் | 18,886,845 |
| டிசம்பர் | 15,802,931 |
| **மொத்தம்** | **193,200,643** |

- **அரசாங்கத்திற்கு வருவாய் ஈட்டுதல்**

சனவரி முதல் டிசம்பர் வரை, ஓய்வூதியத் திணைக்களத்திற்கு சொந்தமான, வாடகை அடிப்படையில் வழங்கப்படும் கட்டடங்கள், விடுமுறை விடுதிகளிலிருந்து கட்டிட வாடகையாக ரூ. 36,397,881,000 மற்றும் அரசாங்க வருவாயாக ரூ. 6,548,500,000 ஈட்டியுள்ளன.

**- மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள் - சட்டப் பிரிவு**

| கோப்புக்கள் மற்றும் கடிதங்களின் வகைகள் | எண்ணிக்கை | கொடுக்கப்பட்ட அவதானிப்புகளின் எண்ணிக்கை | ஆலோசனைகளில் பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை | முடிவுறுத்தப்படவுள்ளவற்றின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| மனித உரிமைகள் புகார்கள் | 96 | 94 | - | 02 |
| மனித உரிமைகள் அழைப்பாணைகள் | 27 | - | 27 | - |
| ஒம்புட்ஸ்மேன் புகார்கள் | 42 | 41 | 02 | 01 |
| உச்ச நீதிமன்ற வழக்குகள் | 04 | 04 | 04 | தீர்ப்பு பெறப்படவில்லை |
| மேல்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள் | 08 | 08 | 07 | தீர்ப்பு பெறப்படவில்லை |
| மாகாண உயர் நீதிமன்றம்/மாவட்ட நீதிமன்றம்/மாஜிஸ்திரேட் நீதிமன்ற வழக்குகள் | 04 | 04 | 01 | தீர்ப்பு பெறப்படவில்லை |
| சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கான கோப்புகள் | 05 | 05 | 03 | 01 |
| கண்காணிப்பிற்காக பிற திணைக்களங்களிலிருந்து பெறப்பட்ட கோப்புகள் | 37 | 27 | | - |
| **மொத்தம்** | **223** | **183** | **44** | **04** |

## - 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் முன்னேற்றம் - கொள்கைப் பிரிவு

| தொடரி லக்கம் | பணிகள் | பூர்த்தி செய்யப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை/சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | அமைய, ஒப்பந்த, சலுகை, பட்டதாரி பயிற்சியாளர், பயிற்சியாளர் மற்றும் முப்படைகளின் சேவை நேரத்திற்கான ஓய்வூதியத்தை கணக்கிடுவதற்கு ஒப்புதல் அளித்தல் | 368 |
| 02 | பாராளுமன்ற குழுக்களுக்கு கண்காணிப்பு/பரிந்துரை அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பித்தல் | |
| | i) பொது மனுக்கள் குழுவில் சமர்ப்பிக்கப்படும் மனுக்கள் தொடர்பான பரிந்துரை அறிக்கைகளை சமர்ப்பித்தல் | 21 |
| | ii) வாய்மொழி பாராளுமன்ற பதில்களுக்காக எதிர்பார்க்கப்படும் கேள்விகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட பதில்களைத் தயாரித்து சமர்ப்பித்தல் | 07 |
| | iii) கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களால் அமைச்சுச்சார் ஆலோசனைக் குழுக்களுக்கு சமர்ப்பிக்கப்படும் முன்மொழிவுகளுக்கான அவதானிப்புகள்/பரிந்துரைகள் அடங்கிய அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பித்தல் | 07 |
| 03 | துறைசார் மேற்பார்வைக் குழுக்களால் குறிப்பிடப்படும் விஷயங்களில் தேவையான நடவடிக்கை எடுத்தல் மற்றும் தொடர்புடைய பரிந்துரைகளைத் தயாரித்து சமர்ப்பித்தல் | 05 |
| 04 | ஓய்வூதியதாரர்களின் பிரச்சினைகள் குறித்து ஓய்வூதியதாரர் சங்கங்களுடன் கலந்துரையாடல்களை நடத்துதல் | 02 |
| 05 | அமைச்சரவை குறிப்பாணைகளுக்கான அவதானிப்புகளைச் சமர்ப்பித்தல் | 10 |
| 06 | ஓய்வூதிய சுற்றறிக்கைகளை வெளியிடுதல் மற்றும் ஆலோசனைக் கடிதங்களை வழங்குதல் | 14 |
| 07 | தனிநபர்கள் மற்றும் பிற நிறுவனங்கள் மற்றும் திணைக்களத்தின் பிற பிரிவுகளிலிருந்து குறிப்பிடப்படும் பிரச்சினைகள் குறித்த கொள்கை முடிவுகளைப் பெறுதல் | 195 |

**- உள்ளகக் கணக்காய்வுகளை நடத்துதல்**

ஓய்வூதியக் கொடுப்பனவுத் தரவு அமைப்பில் உள்ள சிக்கல்கள் மற்றும் ஓய்வூதிய மோசடி மற்றும் முறைகேடுகளைக் குறைக்க உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு 2024 இல் கணக்காய்வுகளை நடத்தியது. அதன்படி, 12 பிரதேச செயலகங்களில் கணக்காய்வுகள் நடத்தப்பட்டன, 84 பிரதேச செயலகங்களில் ஓய்வூதியக் கொடுப்பனவுத் தரவு அமைப்புகள் ஆய்வு செய்யப்பட்டன, 1.5 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள 440 ஓய்வூதியக் கோப்புகள் ஆய்வு செய்யப்பட்டன, 03 சிறப்பு விசாரணைகள் நடத்தப்பட்டன, மேலும் துறைசார் உள்ளகக் கணக்காய்வு மற்றும் சேவைத் தேவையின் அடிப்படையில் பல்வேறு கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- **திணைக்கள அதிகாரிகளின் திறன் மேம்பாடு மற்றும் நலனுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

- திணைக்கள விளையாட்டு சங்கம் திணைக்கள அதிகாரிகளின் நட்புறவை வளர்த்து, நல்ல உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைப் பேணுவதை நோக்கமாகக் கொண்டு நான்காவது முறையாக நட்புரீதியான கிரிக்கெட் போட்டியை ஏற்பாடு செய்தது. மேலும், பொது நிர்வாக அமைச்சின் நலன்புரி சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சாப்ட்பால் கிரிக்கெட் போட்டியில் திணைக்கள கிரிக்கெட் அணி சாம்பியன்ஷிப்பை வென்றது.




**பொது நிர்வாக அமைச்சின் நலன்புரி சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் ஓய்வூதியத் திணைக்கள கிரிக்கெட் அணி சாம்பியன்ஷிப்பை வென்ற தருணம்**

- பொது சேவை வலைப்பந்து சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 2024 ஆண்டு வருடாந்த வலைப்பந்து போட்டிகளில் D தொகுதியில் இரண்டாம் இடத்தைப் பிடிக்கும் வாய்ப்பைப் பெற்றது.







**வருடாந்திர நெட்பால் போட்டியில் இரண்டாம் இடம் (டி வகை)**

- மிகவும் பரபரப்பான பணிச்சூழலில் இருந்து அதிகாரிகளுக்கு சிறிது நிவாரணம் அளிக்கும் நோக்கில், திணைக்கள நலபுரிச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சிங்கள-தமிழ் புத்தாண்டு விழா, திணைக்கள அதிகாரிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கான பாரம்பரிய நாட்டுப்புற விளையாட்டுகளுக்கு முன்னுரிமை அளித்து, களனியில் உள்ள வெதமுல்ல ஓய்வூதிய விடுதியில் நடைபெற்றது.

- நாரஹேன்பிட்ட இரத்தமாற்ற மையத்திற்கு இரத்த தானம் செய்வதற்கு திணைக்கள அதிகாரிகளுக்கு வாய்ப்பை வழங்கும் வகையில், ஓய்வூதிய நலச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்த தான நிகழ்ச்சி, திணைக்கள வளாகத்தில் நடைபெற்றது.




இரத்ததான நிகழ்வில் பங்குபற்றிய அலுவலர்கள் குழு




## பௌதிக மேம்பாடுகள்

- ஓய்வூதியத் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் களனி வெதமுல்ல விடுமுறை விடுதி, ஆண்டுதோறும் ஏராளமான ஓய்வூதியதாரர்கள் மற்றும் அரசு அதிகாரிகளுக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதால், வளாகத்தை மேலும் மேம்படுத்தி ஓய்வூதியதாரர்களுக்கு அதன் நன்மைகளை வழங்கும் நோக்கில் ஏற்கனவே அங்குள்ள பல வீடுகள் புதுப்பிக்கப்பட்டன.

## சவால்கள்

- ஓய்வூதிய விண்ணப்பப் படிவங்களை விடயத்திற்குப் பொறுப்பான அலுவலர்கள் முழுமையாக சமர்ப்பிக்காததால், இணையத்தளம் மூலம் பெறப்பட்ட கணிசமான எண்ணிக்கையிலான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதால், ஓய்வூதியப் பணிகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கு வழக்கமான பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டு, விடயத்திற்குப் பொறுப்பான அலுவலர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

- 2016.01.01 க்குப் பிறகு அரசாங்க சேவையில் நியமனம் பெற்றவர்களுக்குப் பொருந்தக்கூடிய ஓய்வூதிய முறை குறித்து இன்னும் குறிப்பிட்ட முடிவு எடுக்கப்படாததால், அவர்களுக்கு நன்மைகளை வழங்குவதில் சிக்கல் நிலை காணப்படுதல் மற்றும் ஓய்வூதியச் செலவினங்களில் படிப்படியாக அதிகரிப்பு மற்றும் நிதி ஒதுக்கீடுகள் பற்றாக்குறை காணப்படுவதாலும், தேசிய பங்களிப்பு ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்துதல்.

- பொது நிர்வாக சுற்றறிக்கை 25/2014 இன் படி நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட அலுவலர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் திகதிக்குள் 45 வயதைத் தாண்டிய அலுவலர்களுக்கு ஓய்வூதிய உரிமைகளை வழங்குவது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு இதுவரை குறிப்பிட்ட பதில்கள் எதுவும் கிடைக்கப்பெறாமை.

- 55 வயதை பூர்த்தி செய்து மருத்துவ சபைகளுக்கு தங்களை ஆஜர்படுத்திய ஆயுதப்படை உறுப்பினர்களுக்கு ஊனமுற்றோர் ஓய்வூதியம் பெறுவது தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்.

- விடுப்பு எடுக்காமல் சேவைக்கு சமூகமளிக்காத மற்றும் 20% ஆன ஊனமுற்ற ஆயுதப்படை உறுப்பினர்களுக்கு சேவை ஓய்வூதியம் வழங்குவதற்கான சட்ட நிலை தொடர்பான சிக்கல்களைத் தீர்த்தல்.

- ஓய்வூதியதாரர்களின் இறப்புகளை (குறிப்பாக வெளிநாட்டிலுள்ள ஓய்வூதியதாரர்கள்) விதிகளின்படி தெரிவிக்காததால் ஓய்வூதியம் அதிகமாக செலுத்தப்படும் பிரச்சினைக்கு பயனுள்ள தீர்வுகளை முன்மொழிதல்.

## ஓய்வூதியத் திணைக்களத்தின் எதிர்காலப் பயணப் பாதை

1. 1934 பெப்ரவரி 05 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட ஓய்வூதியச் சட்டத்தின் விதிகளைத் திருத்துதல் மற்றும் அதன் பின்னர் அதாவது 2024 ஆம் ஆண்டு வரை வெளியிடப்பட்ட அனைத்து வர்த்தமானி அறிவிப்புகளின் விதிகளையும் இணைத்து ஓய்வூதியச் சட்டத்தை இற்றைப்படுத்தி வெளியிடுதல்.

2. திணைக்களத்தின் உள்ளக செயல்முறைகள் மற்றும் ஓய்வூதிய சேவைகளை மேலும் எளிமைப்படுத்துவதற்காக IPMS திட்டத்தை செயல்படுத்தத் தொடங்குவதன் மூலம் அதன் அபிவிருத்திப் பணிகளை நிறைவு செய்து ஆரம்ப மொடியூல்களின் சோதனை நிலைகளை நிறைவு செய்து பயன்பாட்டிற்காக வெளியிடுதல்.

3. பதிவாளர் நாயகத் திணைக்களத்துடன் இணைந்து ஓய்வூதியதாரர்களின் இறப்புகளை திறம்பட பதிவு செய்வதற்கான முறைகளை அறிமுகப்படுத்துதல். இது ஓய்வூதிய ஆயுள் சான்றிதழ்களை வழங்கும் முறையை மேலும் எளிதாக்கும்.
4. மேம்படுத்தப்பட்ட ஓய்வூதியத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம், ஓய்வூதியதாரர்களுக்கான புகையிரத அனுமதிகளைப் பெறுவதற்கான தகவல் அமைப்பு, விதவைகள் மற்றும் அனாதைகள் திட்டத்தில் பதிவு செய்வதற்கான புதிய தகவல் அமைப்பு

மற்றும் பொது சேவை வருங்கால வைப்பு நிதியைப் பதிவு செய்வதற்கான புதிதாக மறுவடிவமைப்பு செய்யப்பட்ட தகவல் அமைப்பு ஆகியவற்றை வெளியிடுதல்.

5. வாடகை அடிப்படையில் வழங்குவதற்குள்ள திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டடங்களை நிர்ணயிக்கப்பட்ட வாடகையில் அரச நிறுவனங்களுக்கு வழங்குதல்.
6. இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் வழிகாட்டுதலின் கீழ், திணைக்களத்தில் இலஞ்சம் மற்றும் ஊழல் இல்லாத ஒரு நல்ல பொது சேவையை உருவாக்குவதற்கு தொடர்புடைய செயல் திட்டத்தை செயல்படுத்துதல்.
7. திணைக்களம் அடிக்கடி விமர்சிக்கப்படும் ஒரு பகுதியான தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்காத பிரச்சினைக்கு நேர்மறையான பதிலாக வெளி தரப்பினரின் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கும் செயல்முறையை மேலும் நெறிப்படுத்துதல்.
8. Clean Sri Lanka அரசாங்கக் கொள்கைக்கு ஏற்ப சுற்றுச்சூழல், சமூக மற்றும் நெறிமுறை அம்சங்களின் அடிப்படையில் துறையில் அடிப்படை மாற்றங்களைச் செய்தல்.

Chaminda Hettiarachchi
Director General
Department of Pensions
Maligawatta - Colombo 10

**சாமிந்த ஹெட்டியாராச்சி**
ஓய்வூதியப் பணிப்பாளர்நாயகம்

# 03.

# 2024.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயல்திறன்

## 3.1. நிதி செயல்திறன் அறிக்கை

2024.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ஏசிஏ எசுப்

(ரூபா)

| பாதீடு 2024 | | குறிப்பு | உண்மை நிலை 2024 | உண்மை நிலை 2023 | |
|---|---|---|---|---|---|
| - | வருமானப் பெறுகைகள் | | | | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசிஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசிஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசிஏ-1 |
| 46,000,000,000 | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | 43,088,901,684 | 36,258,424,820 | ஏசிஏ-1 |
| 46,000,000.000 | மொத்த வருமானப் பெறுகைகள் (அ) | | 43,088,901,684 | 36,258,424,820 | |
| | வருமானம் பெறுகைகள் | | - | - | |
| | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 384,901,000,000 | 365,816,860,000 | ஏசிஏ-3 |
| | வைப்புகள் | | 105,881,351 | 65,687,256 | ஏசிஏ-4 |
| | முற்பணக் கணக்குகள் | | 61,476,724 | 63,208,428 | ஏசிஏ-5 |
| | ஏனைய பெறுகைகள்(8098+8186) | | 65,474,688,639 | 89,136,644,228 | |
| | மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ) | | 450,543,046,714 | 455,082,399,912 | |
| | மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ=(அ)+(ஆ) | | 493,631,948,398 | 491,340,824,732 | |
| | திறைசேரிக்கான அனுப்பீடு(ஈ) | | - | - | |
| | தேறிய வருமானம் அல்லாத கிடைப்பனவு உ- (இ)-(ஈ) | | 493,631,948,398 | 491,340,824,732 | |
| | கழிக்குக : செலவினம் | | | | |
| | மீண்டுவரும் செலவினம் | | - | - | ஏசிஏ-2(ii) |
| 827,700,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 812,952,187 | 714,460,372 | ஏசிஏ-2(ii) |
| 142,825,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 113,887,542 | 105,699,705 | ஏசிஏ-2(ii) |
| 444,412,357,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 442,456,442,101 | 415,471,260,072 | ஏசிஏ-2(ii) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | ஏசிஏ-2(ii) |
| 168,000.00 | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | 167,178 | - | ஏசிஏ-2(ii) |
| 445,383,050,000 | மொத்த மீண்டுவரும் செலவினம் (ஈ) | | 443,383,449,009 | 416,291,420,149 | |
| | மூலதனம் செலவினம் | | | | |
| 9,500,000 | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 7,388,233 | 10,346,529 | ஏசிஏ-2(ii) |
| 6,500,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 6,284,985 | 5,628,664 | ஏசிஏ-2(ii) |
| | மூலதன மாற்றல்கள் | 12 | - | | ஏசிஏ-2(ii) |
| | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | ஏசிஏ-2(ii) |
| 2,000,000 | திறன் அபிவிருத்தி | 14 | 1,646,717 | 1,689,229 | ஏசிஏ-2(ii) |
| 72,000,000 | பிற மூலதனச் செயவு | 15 | 36,054,972 | 24,083,934 | ஏசிஏ-2(ii) |
| 90,000,000 | மொத்த மூலதனம் செலவினம் (உ) | | 51,374,907 | 41,748,356 | |
| | வைப்புக் கொடுப்பனவுகள் | | 5.069,967 | 34,926,964 | ஏசிஏ-4 |
| | முற்பணக் கொடுப்பனவுகள் | | 67,188,910 | 53,825,902 | ஏசிஏ-5 |
| | ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்(8098,8186) | | 64,932,132,008 | 88,698,414,289 | |
| | மொத்த பிரதான பேரேட்டுச் செலவினம் | | 65,004,390,884 | 88,787,167,155 | |
| 445,473,050,000 | மொத்த செலவினம் எ = (ஈ+உ+ஊ) | | 508,439,214,801 | 505,120,335,660 | |
| | டிசம்பர் 31ல் உள்ளவாறான முற்பண மீதி ஏ=(இ-எ) | | (14,807,266,403) | (13,779,510,928) | |
| | பணிமுற்பண இணக்க அறிக்கையின் படிமீதி | | (14,807,266,403) | 13,779,510,928 | ஏசிஏ-7 |
| | டிசம்பர் 31ல் உள்ளவாறான பணி முற்பணமீதி | | - | - | ஏசிஏ-3 |

1

## 3.2. நிதி நிலை அறிக்கை

ஏசீஏ - பீ

2024 டிசம்பர் 31ல் உள்ளவாறான
நிதி நிலைமை அறிக்கை

| | குறிப்பு | உண்மை நிலை 2024 ரூபா | உண்மை நிலை 2023 ரூபா |
|---|---|---|---|
| **நிதி அல்லாத சொத்துக்கள்** | | | |
IV. மத்திய மற்றும் தென் மாகாணங்களில் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் இரண்டு காசோலைகள் 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் மாற்றப்பட்டிருக்கையில் குறித்த ரூபா.மில்லியன் 183.6 பெறுமதியிலான தொகை மீளாய்விற்கான ஆண்டின் நிலுவை வருமானமாக அடையாளம் காணப்படவில்லை

V. 2015 ஆம் ஆண்டு யூலை 20 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் 07 ஆம் பந்தி பிரகாரம் வருமானம் கணக்கு கொடுக்கும் அலுவலருக்கு உரியதான, வருமான குறியீடுகளின் பொருட்டு மாதாந்த அறிக்கைகள் அடுத்து வரும் மாதத்தில் 10 ஆம் திகதிக்கு முன்னர் அரச நிதி கொள்கையின் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமாயினும், மாதாந்த செயலாற்றுகை அறிக்கை 05 – 33 நாட்கள் தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

VI. மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக வருமான மதிப்பீடு ரூபா.மில்லியன் 17,000 ம் மற்றும் சேகரிக்கப்பட்ட தேறிய வருமானம் ரூபா.மில்லியன் 16,076.1 ம் காணப்பட்டதுடன், சேகரிக்கப்பட்ட தேறிய வருமானம் குறைவடைதல் வருமான மதிப்பீட்டில் 5.43% ம் அதன் பெறுமதி ரூபா.மில்லியன் 923.8 ம் ஆகியது. 2024 சனவரி 10 ஆம் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 03/2024 இன் படி 2024 ஏப்ரல் தொடக்கம் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய தொகை 8% வரை அதிகரிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்திலயே இவ்வாறு மதிப்பிடப்பட்ட வருமானம் சேகரிப்பதற்கு இயலாதிருந்துள்ளது.

(இ) கட்டிடங்களின் வாடகை

I. ஓய்வூதிய திணைக்களத்திற்கு சொந்தமான கட்டிடங்களை வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட 12 நிறுவனங்களிடமிருந்து 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகை வருமானம் ரூபா.9,405,597 ஆகும்.

II. ஓய்வூதிய திணைக்களத்து வளாகத்தில் பராமரிக்கப்படுகின்ற இலங்கை வங்கி தானியங்கி டேலர் இயந்திரம் செயற்பாடற்ற நிலையில் மூடப்பட்டிருந்ததுடன், இயந்திரம் அகற்றப்படாமையால் 2023 ஒக்டோபர் 01 ஆம் திகதி தொடக்கம் உடன்படிக்கை மேற்கொள்ளுதல் அல்லது வாடகை அறவிடல் மேற்கொள்ளப்படவில்லை.

III. சம்பத் வங்கியிடம் வாடகை அடிப்படையில் பொது செயலகத்தின் வளாகத்தில் தாபிக்கப்பட்டிருந்த, தானியங்கி டேலர் இயந்திரம் பொருட்டு குத்தகை உடன்படிக்கை 2024 செப்தெம்பர் 30 ஆம் திகதி

முடிவடைந்திருந்த போதிலும் 2025 மார்ச் 31 ஆம் திகதியிலும் புதிய உடன்படிக்கை மேற்கொள்ளாது மாதாந்த வாடகை அறவிடப்பட்டு பராமரிக்கப்பட்டிருந்தது.

IV. மாளிகாவத்தை பொது செயலக வளாகத்தில் வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு முடியுமான 03 இடங்களை, நீண்ட காலமாக வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு முயற்சி எடுக்காமை காரணமாக வருடாந்தம் ரூபா.3,984,000 ஆன வருமானம் அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெறவில்லை.

### 3.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள்

2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் பொறுப்புகள் ரூபா.264,903 குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 3.3 பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலர்/கணக்கீட்டு அலுவலரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுப்படுத்தல்கள்

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 38 ஆவது

பிரிவின் ஏற்பாடுகளின் படி கணக்கு கொடுக்கும் அலுவலரால், திணைக்களத்தின் நிதிக்

கட்டுப்பாடுக்காக பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றது என்பதற்கு சான்றுப்படுத்தல் வேண்டுமென்பதுடன், அந்த முறையின் பயன் தொடரப்பாக அவ்வப்போது மீளாய்வுகளை மேற்கொண்டு அதன்படி முறைமைகளை பயனுள்ளதாக கொண்டுச் செல்வதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். ஆயினும் குறித்த மீளாய்வுகள் எழுத்து மூலமாக மேற்கொண்டு அதன் பிரதிகளை கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பித்தல் வேண்டுமாயினும், அத்தகைய மீளாய்வுகளை மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான சான்றுகளை கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை

### 3.4 சட்டங்கள் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்காமை

மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு விபரிக்கப்படுகிறது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை | பெறுமதி ரூபா | இணங்காமை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி 237 (அ) | 852,989 | ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை பிரகாரம் திருப்திகரமாக வேலை நிறைவேற்றப்பட்டுள்ளது அல்லது வழங்கப்பட்டுள்ளது மற்றும் பரிந்துரைக்கப்பட்ட கொடுப்பனவுகள் அவற்றுக்கு ஒழுங்கமைவானது என்பதற்கு சான்றிதழ் இணைக்கப்படுதல் வேண்டுமாயினும், 04 சந்தர்ப்பங்களில் பொருட்கள் கிடைக்கப்பெற்றது என்பதற்கு உறுதிப்படுத்திக் கொள்ளாது அதாவது பொருட்கள் கிடைக்கப்பெறுவதற்கு மன்னர் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2010 திசெம்பர் 16 ஆம் திகதி 13/2010 ஆம் இலக்க மற்றும் 2013 செப்தெம்பர் 20 ஆம் திகதிய 03/2013 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | 2,668,686 | மீண்டும் விவாகமாகும் விதவைக்கு, விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளில் 50% உரித்தாகிய போதும், மீள விவாகத்தின் பின்னரும் முழுமையான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்கியுள்ளதால் பானந்துரை, மஹர மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | | | கலேவல பிரதேச செயலகங்களில் 06 ஓய்வூதிய பெறுநர்களிடம் ஓய்வூதியம் மற்றும் கொடுப்பனவுகள் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது |
| (இ) | 2011 யூன் 30 ஆம் திகதிய 5/2011 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | 275,625 | வெளிநாடுகளுக்கு செல்கின்ற ஓய்வூதியம் பெறுநர்களுக்கு வாழ்க்கைச் செலவுப் படியாக ரூபா.2000 ம் செலுத்தப்படுதல் வேண்டுமாயினும், ரூபா. 11,025 ஆக கொடுப்பனவு செய்துள்ளமையால் கருவலகஸ்வெவ, ஆரச்சிகட்டுவ மற்றும் ஆணமடுவ பிரதேச செயலகங்களில் 07 ஓய்வூதியப் பெறுநர்கள் பொருட்டு வாழ்க்கைச் செலவுப் படி மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2014 சனவரி 10 ஆம் திகதிய 1/2014 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை மற்றும் 2010 செப்தெம்பர் 07 ஆம் திகதிய 8/2010 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | 11,078,250 | அரசாங்க அலுவலர் ஒருவர் பெறுகின்ற ரூபா.7,800 ஆன வாழ்க்கைச் செலவு படி விஞ்சி ஓய்வுபெறுநர் ஒருவருக்கு வாழக்கைச் செலவு படி செலுத்தப்படுதலாகாது ஆயினும்,<br>(1) சார்ந்து வாழ்பவர்களுக்கு தரைப்படை சம்பளத்துடன், வாழ்க்கைச் செலவு படி செலுத்தப்படுதலாகாது என்பதுடன், தரவு முறைமைக்கமைவாக 20 சந்தர்ப்பங்களில் மாவத்தகம, பூஜாபிட்டிய, கனேவத்தை, மஹர, மாஸ்பொத்த மற்றும் பானந்துரை பிரதேச பிரதேச செயகத்தில் 21 சந்தர்ப்பங்களில் அவ்வாறு கொடுப்பனவு செய்துள்ளமையால் வாழக்கைச் செலவு படி மேலதகிமாக செலுத்தப்பட்டிருந்தது.<br>(2) |
| | | 139,850 | (11) வாழக்கைச் செலவு படியுடன் அரசாங்கத்தின் சம்பளம் பெறுவதாயின், அவ்வாறு சம்பளம் பெறுகின்ற காலப் பகுதிதியில், ஓய்வூதிய சம்பளத்திற்கு வாழக்கைச் செலவு படி கிடைக்கப்பெறாவிடினும், அவ்வாறு வாழக்கைச் செலவு படி செலுத்தியதன் காரணமாக கிழக்கு நுவரகம் பிரதேசம், அதுரலிய, வலஸ்முல்ல மற்றும் வீரகெட்டிய பிரதேச செயலகங்களில் 03 சந்தர்ப்பங்களில் வாழ்க்கைச் செலவு படி மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. |
| | | 975,806 | (111) வாழக்கைச் செலவு படி ரூபா.7800 வரை பெற்றுக்கொள்வதற்கு முடியுமாயினும், குண்டசாலை, தமன, பூஜாபிட்டிய, கனேவத்தை, மஹர, மாஸ்பொத்தை, கலேவல, மாவத்தகம, வெலிமட, பானந்துரை மற்றும் புத்தளம் ஆகிய பிதேச செயலகங்களில் 66 ஓய்வூதியம் பெறுநர்கள் பொருட்டு வாழக்கைச் செலவுப் படி குறைவாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | 2016 ஏப்ரல் 27 ஆம் திகதி 03/2016 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | 980,000 | (1) 2016 சனவரி 01 ஆம் திகதியின் பின்னர் ஓய்வூதியம் பெறுநர்களுக்கு இடைக்கால படி கிடைக்கப்பெறாது விடினும், 04 ஓய்வூதியம் |

| | | | |
|---|---|---|---|
| | | | பெறுநர்கள் பொருட்டு அவ்வாறு செலுத்தாமை காரணமாக மாஸ்பொத்த, பானந்துரை, வலஸ்முல்ல- வீரகெட்டிய ஆகிய பிரதேச செயலகங்களில் இடைக்காலப் படி மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) | | 2,911,500 | பல ஓய்வூதியங்களை இணைத்து பெறுகின்ற சந்தர்ப்பங்களில் மாதாந்தம் செலுத்தப்படுகின்ற இடைக்கால படியை, இணைந்த ஓய்வூதியம் பொருட்டு மட்டும் செலுத்தப்படல் வேண்டுமாயினும், மாவத்தகம, வெலிமட, குண்டசாலை பூஜாபிட்டிய, வலஸ்முல்ல, வீரகெட்டிய, கலேவல ஆகிய பிரதேச செயலகங்களில் மற்றும் தரவு முறைமைகள் மூலம் அடையாளம் காணப்பட்ட 14 ஓய்வு பெறுநர்கள் பொருட்டு இடைக்கால படி மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது |
| (எ) | 2018 யூலை 17 ஆம் திகதி 9/2008 ஆம் இலக்க (திருத்தம் செய்யப்பட்ட ii) ஓய்வூதிய சுற்றறிக்கை | | நடவடிக்கை சேவைகளின் ஓய்வூதியம் (இலக்கம் - 59 மற்றும் இயலாமை ஓய்வூதியம் (இலக்கம் 06 ) இணைத்து செலுத்துப்படுதல் வேண்டுமாயினும், பூஜாபிட்டிய, தமன, கலேவல ஆகிய பிரதேச செயலகங்களில் 38 ஓய்வூதியம் பெறுநர்கள் பொருட்டு அவ்வாறு பணியாற்றப்படவில்லை. |
| ஐ | 2019 யூன் 11 ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | | (i) 2019 வரவு செலவு திட்டத்தின் படி 2017 சனவரி 01 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்ற அரசாங்க அலுவலர்களுக்கு அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 3/2016 இன் படி ஓய்வூதியம் சீராக்கல் 2019 யூலை 01 ஆம் திகதி தொடக்கம் மேற் கொள்ளுதல் வேண்டுமாயினும், மஹர, மாஸ்பொத்த, தமன, பூஜாபிட்டிய, கலேவல, ஆகிய பிரதேச செயலகங்களில் 61 ஓய்வூதியம் பெறுநர்கள் பொருட்டு ஓய்வூதியம் தொடர்பான திருத்தங்களை மேற்கொள்ளப்படவில்லை. |
| | | 963,100 | (ii) எவரேனுமொரு நபர் விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத்துடன், சார்ந்து வாழும் கொடுப்பனவு பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தில், குறித்த விதவைகள் ஓய்வ"தியம், ஓய்வூதிய சுற்றறிக்கை 01/2019 பிரகாரம், திருத்தம் செய்த பின்னர் சார்ந்து வாழும் கொடுப்பனவு பொருட்டு செலுத்தப்படும் இடைக்கால படியை நிறுத்தபபடுதல் வேண்டுமாயினும் கிழக்கு நுவரகம்பளாத்த, பெல்மடுள்ள, வெலிமட, பூஜாபிட்டிய, வலஸ்முல்ல-வீரகெட்டிய ஆகிய பிரதேச செயலகங்களில் 09 ஓய்வு |

| | | | |
|---|---|---|---|
| | | | பெறுநர்களுக்க அவ்வாறு நிறுத்தப்படாது, சார்ந்து வாழும் கொடுப்பனவு பொருட்டு இடைக்கால கொடுப்பனவு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஓ) | | 2,675,000 | (iii) 2019 யூன் மாதம் 11 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை பிரகாரம், சம்பள திருத்தம் செய்த பின்னர் ஓய்வூதிய சம்பளத்துடன் செலுத்தப்படுகின்ற இடைக்கால கொடுப்பனவு நிறுத்தப்படுதல் வேண்டுமாயினும் மஹர, தமன, பானந்துரை, கலேவல ஆகிய பிரதேச செயலகங்களில் 14 சந்தர்ப்பங்களில் அவ்வாறு நிறுத்தப்படாது கொடுப்பனவுகளை மேற்கொண்டதன் காரணமாக இடைக்கால படி மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஔ) | 2019 யூலை 26 ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்க திருத்தம் 11 ஓய்வூதிய சுற்றறிக்கை | 4,538,038 | முப்படையால் செலுத்தப்படும் வயது 55 வரை சம்பளம் பெறுகின்ற ஓய்வூதியம் பெறுநர்கள் மற்றும் தங்கி வாழ்பவர்களுக்கு சம்பள மாற்றியமைப்பு ஏற்புடையதாகது என்று அறிவித்து இருக்கையில், தரவு முறைமை பிரகாரம் தரைப்படை சம்பளம் தங்கி வாழ்பவர்கள் 06 பேர்களினதும் மாவத்தகம, வெலிமட, மஹர, பானந்துரை ஆகிய பிரதேச செயலகங்களில் பத்து பேர்களின் ஓய்வூதியம் திருத்தம் செய்து கொடுப்பனவுகளை மேற்கொண்டமையால் ஓய்வூதியம் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. |
| | 2022 சனவரி 20 ஆம் திகதிய 01/2022 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை (1) பந்தி 2 | 1,200,000 | வெலிமட, பூஜாபிட்டி, கனேவத்தை, மாஸ்பொத்தை பிரதேச செயலகங்களில் 20 ஓய்வூதியம் பெறுநர்கள் பொருட்டு, அவர்களுக்கு உரியதான ரூபா.5000 ம் கொடுப்பனவு செலுத்தப்படாமை காரணமாக அந்தக் கொடுப்பனவு குறைவாக செலுத்தப்பட்டிருந்தது. |
| | (ii) 2(i) பந்தி | 180,000 | எவரேனும் நபரொருவர் பல ஓய்வூதியங்களை பெறுகின்ற போது, நபரொருவருக்கு மாதமொன்றுக்கு ஒரு படி மட்டும் உரித்தாவதடன், பல ஓய்வூதியங்களுக்காக ரூபா.5000 கொடுப்பனவு மேலதிகமாக செலுத்தப்பட்ட 01 சந்தர்ப்பம் பானந்துரை பிரதேச செயலகத்தில் அவதானிக்கப்பட்டது |
| | (iii) 2(iii) பந்தி | 915,000 | மரணமடைந்த முப்படையின் அலுவலர்கள் பொருட்டு அவர்களின் 55 வயது வரை சம்பளம் உரித்துடைய சார்ந்து வாழ்பவர்களுக்கு ஓய்வூதியத்துடன் ரூபா.5,000 ம் பறுெமதியான விசேட கொடுப்பனவு உரித்தற்றதாகும் என்று குறிப்பிடப்படினும், தரவு முறைமையின் படி சாரந்து வாழும் 06 பேர்கள் பொருட்டும், |

| | | | |
|---|---|---|---|
| | | | மாவத்தகம, மஹர பிரதேச செயலகங்களில் சாரந்து வாழும் 04 பேர்கள் பொருட்டும் சேவை சம்பளத்துடன், கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், விசேட படி மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. |

அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு

(அ) 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கில் தனிப்பட்ட மீதியின் மொத்தம் ரூபா.167,676,744 ஆக காணப்பட்டதுடன், அதில் ஒரு ஆண்டுக்கும் குறைந்த கடன் மீதி ரூபா.1,559,825 ஆகும். குறித்த மீதிகள் மாகாண சபைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற இரண்டு அலுவலர்களிடம் அறவிடப்பட வேண்டிய கடன் மீதி 611,203 ம், பணி தடை செய்யப்பட்டுள்ள மூன்று அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா.622,320 ம், பதவி விலகிச் சென்றுள்ள இரண்டு அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா.326,302 என்ற வகையிலும் ஆகும். 1-3 ஆண்டுகளுக்கிடையில் அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா.142,920 ஆகியதுடன், பதவி விலகிச் சென்றுள்ள அலுவலரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை கடன் தொகையும் காணப்பட்டது

(ஆ) 3-5 ஆண்டுகளுக்கிடையில் அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா239,812 ஆவதுடன், குறித்த கடன் மீதி பணித் தடை செய்யப்பட்டுள்ள அலுவலரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவையாகும். 5-10 ஆண்டுகளுக்கிடையில் பணித்தடை செய்யப்பட்டுள்ள அலுவலரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா.153,509 ஆகும். 10-20 ஆண்டுகளுக்கிடையில் அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா.305,220 ஆனதுடன், அதில் பதவி விலகிச் சென்றுள்ள அலுவலரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை ரூபா.130,728 ம் பணித்தடை செய்த அலுவலரிடமிரந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா.174,492 ம் ஆகும்.

### 3.6 வைப்புக்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இரண்டு வருடங்களைத் தாண்டிய ரூபா. 4,965,310 தொகை வைப்புக்கள், நிதி ஒழுங்குவிதி 571 (3) இற்கு அமைய பயன்படுத்தவோ அல்லது அரச வருமானத்தில் சேர்க்கவோ இல்லாமல் பொது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டு உள்ளது அவதானிக்கப்பட்டது.

(ஆ) தனியார் தொலைபேசி நிறுவனம் மற்றும் திணைக்களம் என்பவற்றிற்கு இடையில் நிலவும் 2023 மார்ச் 01 ஆம் திகதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைய ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டிய நிதி என்ற வகையில் 2024 மே மாதம் 08 ஆம் திகதி தொலைபேசி நிறுவனத்திடம் இருந்து ரூபா. 5,000,000 தொகைப் பணம் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்று இருந்ததுடன் 2024 மே 29 ஆம் திகதி பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டு இருந்தது. உரிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 4.8 ஆம் பந்தியின் இணைப்பு 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களுக்காக இந்தப் பணத்தைப் பயன்படுத்த முடியும் எனக் குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும் கணக்காய்வு செய்யப்பட்ட தினமாகிய 2024 மார்ச் 31 ஆம் திகதி வரை இந்தப் பணம் பயன்படுத்தப்படாது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டு இருந்தது.

### 3.7 வங்கிக் கணக்குகளை நடைமுறைப்படுத்தல்.

உள்ளூராட்சி சேவை விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் வங்கிக் கணக்கு மற்றும் உள்ளூராட்சி சேவை விதவைகள் தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் வங்கிக் கணக்குகள் என்பன கடந்த பல வருடங்களாக செயலிழந்த கணக்குகளாக நிலவி வருவதுடன் அவற்றை மூடி விடுவதற்கோ அல்லது அது தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடிவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டோ இருக்கவில்லை.

4. **செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 பெறுகைகள்**

வருடாந்த பெறுகைகள் திட்டத்திற்கு அமைய 85 டெஸ்க்டொப் கணினிகளையும் 10 மொனிடர்களையும் 2024 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் 2024 யூன் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டு இருந்த போதிலும், 2024 நவெம்பர் 22 ஆம் திகதிய பெறுகைகள் திட்டத்தில் மீண்டும் திருத்தங்களை மேற்கொண்டு 20 மொனிட்டர்கள் மற்றும் 06 மொனிட்டர்களைக் கொள்வனவு செய்தமையின் காரணமாக 253-1-2-2509 செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் ஷரூபா. 11,091,000 தொகை எஞ்சிக் காணப்பட்டது.

4.2 **நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்**

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

4.2.1 **நட்ட இழப்பு ஆவணம்**

நிதிக் கூற்றுக்களுக்கு அமைய மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியாகும் போது தொடர்ந்தும் அறவிட்டுக் கொள்ளக் கூடிய மேலதிகமாக செலுத்தப்பட்ட ஓய்வூதியத்தின் பெறுமதி ரூபா. 1119 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. இந்த மீதி 10 வருட காலங்களுக்கும் மேற்பட்ட காலம் தொடக்கம் நிலவி வரும் ரூபா. 3.1 மில்லியன் தொகையினையும் 5 தொடக்கம் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக நிலவி வரும் ரூபா. 47.3 மில்லியன் தொகையினையும் 5 வருடங்களுக்கும் குறைவான காலம் ஒன்றிற்கு உரிய ரூபா. 1,068 மில்லியன் தொகையினையும் உள்ளடக்கி இருந்தது.

(அ) நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பான ஆவணத்தில் 10 வருடங்களுக்கும் அதிகமான நட்டங்களின் பெறுமதி ரூபா. 3.1 மில்லியன் தொகையில் ரூபா. 2.3 மில்லியன் தொகை மரணமடைந்த நபர்களுக்காக மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகை ஆகும் என்பதுடன் அவற்றை மீண்டும் அறவிட்டுக் கொள்ள முடியாத நிலைமை ஒன்று காணப்பட்ட போதிலும் நிதி ஒழுங்குவிதிகளுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளாது 10 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக நிதிக் கூற்றுக்களில் மீதி ஒன்றாக எடுத்தக் காட்டப்பட்டு இருந்தது.

(ஆ) நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பான ஆவணத்தில் ஓய்வூதியத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் அறவீடுகளின் கீழ் 2024 ஆம் ஆண்டில் அறவிட்டுக் கொள்ளப்பட்ட பெறுமதிகளாக 2023 ஆம் ஆண்டின் இறுதியான மீதி மற்றும் 2024 ஆம் ஆண்டின் இறுதியான மீதி என்பவற்றிற்கு இடையிலான வேறுபாடு குறிப்பிடப்பட்டு இருந்தது. அதற்கு அமைய 2023 டிசம்பர் 31 ஆம் திகதியன்று அறவிடப்பட்டு வந்த மீதி ஒன்றுடனான ஓய்வூதியர் ஒருவர் 2024 ஆம் ஆண்டில் மரணித்து விட்டால் அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தப் பெறுமதி 2024 வரவுகள் என்ற வகையில் அடையாளம் காணப்படுகின்றது. அதற்கு அமைய குருணாகல் மாவட்டத்தில் மரணமடைந்த ஓய்வூதியர்கள் 06 பேர்களிடம் இருந்து தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா. 662,960 தொகை மீதி ஒன்றை 2024 ஆம் ஆண்டின் வரவுகளாக அடையாளம் காண்பதன் மூலம் நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பான ஆவணத்தில் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியன்று அறவிடப்பட உள்ள மீதி மேற்படி பெறுமதியில் இருந்து குறைவாகக் குறிப்பிடப்பட்டு இருந்தது என்பது மாதிரி கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது வெளிக்கொண்டு வரப்பட்டது.

(இ) ஓய்வூதியத் திணைக்களத்தின் அறிக்கைகளுக்கு அமைய நிலையான கொடுப்பனவுகளின் பயனாளிகள் 43 பேர் மரணமடைந்தமையினால் மேலதிகமாகச் செலுத்தப்பட்டு இருந்த அறவிடப்பட முடியாதுள்ள ரூபா. 7,151,395 தொகை நட்ட இழப்புக்கள் தொடர்பான ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை.

(ஈ) தற்காலிக கோப்பு ஒன்றின் மூலம் கம்பஹா பிரதேச செயலகம் ஊடாகவும், நிலையான கோப்பு ஒன்றின் கீழ் மஹர பிரதேச செயலகம் ஊடாகவும் ஒரே ஓய்வூதியருக்கு 1991 ஆம் ஆண்டு முதல் 2016 பெப்ரவரி மாதம் வரை 25 வருடங்கள் ஓய்வூதியம் செலுத்தப்பட்டு இருந்தது. அதற்கு அமைய கம்பஹா பிரதேச செயலகத்தின் ஊடாக ரூபா. 1,872,587 தொகைப் பணம் தற்காலிகக் கோப்பின் கீழ் ஓய்வூதியம் மேலதிகமாக செலுத்தப்பட்டு இருந்ததுடன் ஓய்வூதியத் திணைக்களத்தினால் 2016 ஏப்பிறல் முதல் ஓய்வூதியத்தினைச் செலுத்துதல் இடைநிறுத்தப்பட்டு உள்ளதுடன் 2021 மார்ச் 25 ஆம் திகதி அவர் மரணமடைந்து உள்ளார். அப்போதாகும் போது நிறுத்தி வைக்கப்பட்ட ஓய்வூதியத்தின் மூலம் ஈடுசெய்யப்பட்டு இருந்த நட்டம் ரூபா. 1,577,343 தொகை ஆகக் காணப்பட்டதுடன் தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியுள்ள தொகை ரூபா. 295,044 தொகை ஆகும். இந்த நட்டத்தினை அறவிட்டுக் கொள்ளும் முறை தொடர்பாக தெளிவான தீர்மானம் ஒன்றுக்கு வந்திருக்கவில்லை என்பதுடன் நிதி ஒழுங்குவிதி 110 இன் கீழ் நட்ட இழப்பு ஆவணத்தில் இந்த நட்ட இழப்பு உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை.

(உ) கம்பஹா பிரதேச செயலகத்திற்கு ஓய்வூதியர் ஒருவரின் மணரம் தொடர்பில் அறிக்கையிடப்படாமையின் காரணமாக 29 மாத காலத்திற்கு ரூபா. 582,423 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டு இருந்தது. அதற்கு உரிய ஆரம்பப் புலனாய்வு அறிக்கைக்கு அமைய கம்பஹா பிரதேச செயலகத்தின் ஓய்வூதியப் பிரிவில் கடமைகளை மேற்கொண்ட உத்தியோகத்தர்கள் உயிர் வாழ்தல் சான்றிதழ்களைப் பரீட்சிக்கும் செயற்பாடு பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக வெளித் தரப்பினர்களுக்கு பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இடமளிக்கப்பட்டு இருந்தது என்பது அவதானிக்கப்பட்டு இருந்த போதிலும் உத்தியோகத்தர்களுக்கு அறிவுருத்தல் செய்து கடிதம் ஒன்றினை வழங்குவதற்கு மாத்திரம் பரிந்துரை செய்யப்பட்டு இருந்ததுடன் கணக்காளர்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையினால் அரசிற்கு ஏற்பட்ட இழப்பு தொடர்பில் மேற்படி உத்தியோகத்தர்களுக்கு தாபனவிதிக் கோவையின் சுருக்கமான ஒழுங்காற்று நடைமுறை விதிகளுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டு இருந்த போதிலும் அது தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

மேலும் நிதி ஒழுங்குவிதி 110 இன் கீழ் நட்ட இழப்புக்கள் தொடர்பான ஆவணத்தில் இந்த நட்ட இழப்பு உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் மேலதிகமாகச் செலுத்தியதனை அறவிட்டுக் கொள்ளல் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் முன்வைக்கப்பட்டு இருக்கவில்லை.

### 4.2.2 இழப்புக்களை அறவிட்டுக் கொள்ளல்

நட்ட இழப்புக்கள் தொடர்பான ஆவணத்தில் குறிப்பிடப்பட்டு இருந்த ஓய்வூதியத் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மற்றும் நிருவாகப் பிரிவு என்பவற்றினால் வெளிக்கொண்டு வரப்பட்ட நிதி முறைகேடுகளின் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியன்று அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா. 44,299,996 தொகை ஆகும் என்பதுடன் அது தொடர்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மதுகம பிரதேச செயலகத்திற்கு உரிய வகையில் 2021 ஆம் ஆண்டில் வெளிக்கொண்டு வரப்பட்டு இருந்த ரூபா. 7,022,668 தொகை நிதி மோசடி தொடர்பில் 2024 மார்ச் மாதம் ஆகும் போதும் நி.ஒ. 104 இன் பிரகாரம் விசாரணைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) கம்பஹா பிரதேச செயலகத்தில் மரணமடைந்த பெண் ஓய்வூதியர் ஒருவருக்கு மரணித்ததன் பின்னர் 55 மாதங்கள் ஓய்வூதியம் வழங்கப்பட்டதன் மூலம் ரூபா 2,696,303 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டு இருந்ததுடன் அதற்காக நி.ஒ. 104 இன் பிரகாரம் விசாரணைகள் நடாத்தப்பட்டு இருக்கவில்லை. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பப் புலனாய்விற்கு அமைய ஒரு உத்தியோகத்தருக்கு குற்றச்சாட்டுப் பத்திரம் வழங்கப்பட்டு இருந்ததுடன் அதற்காக நடாத்தப்பட்ட முறையான ஒழுக்காற்று விசாரணையில் இருந்து அவர் நிரபராதி என விடுவிக்கப்பட்டு இருந்த போதிலும் ஏனைய உத்தியோகத்தர்களுக்குசுருக்கமான ஒழுக்காற்று நடைமுறைக்கு அமைய விடுதலைக்கான விடயங்களைக் கொருமாறு மேற்கொள்ளப்பட்ட பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. அதற்கு அமைய இழப்புக்களை அறவிட்டுக்கொள்ளும் முறை தொடர்பாக தீர்மானம் ஒன்றிற்கு வந்திருக்கவில்லை.

(இ) கேகாலை மாவட்டச் செயலகத்தின் முன்னாள் ஓய்வூதிய உத்தியோகத்தர் ஒருவர் கேகாலை மாவட்ட செயலகத்தில் சேவையில் ஈடுபட்டு இருக்கும் போது ஓய்வூதியம் தொடர்பான கணினி முறைமையில் தரவுகளை தந்திரோபாயமாக மாற்றி ஓய்வூதியர்கள் அல்லாத நபர்கள் மூவரின் தனிப்பட்ட வங்கிக் கணக்குகளுக்கு அரச நிதியினை மோசடி செய்து வைப்புச் செய்து 2010 யூன் 10 முதல் 2011 யூன் 09 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ரூபா. 6,381,550 தொகைப் பணத்தினை மோசடி செய்து இருந்ததுடன் இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முறையான ஒழுக்காற்று விசாரணைக்கு அமைய உத்தியோகத்தர் சேவையிலிருந்து நீக்கப்பட்டு இருந்தார். அவ்வாறெனினும், நி.ஒ. 104 (4) இன் கீழ் நட்ட இழப்பு அறிக்கை 2019 ஆகஸ்ட் 21 ஆம் திகதி விசாரணைகள் சபையினால் வழங்கப்பட்டு இருந்த போதிலும், அறிக்கையின் 10 ஆம் பந்தியில் உத்தியோகத்தரின் தனிப்பட்ட அசையாத மற்றும் அசையும் சொத்துக்கள் ஃ ஆதனங்களின் மூலம் அறவிட்டுக்கொள்ளல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும் இதுவரை இழப்பு அறவிடப்பட்டு இருக்கவில்லை.

(ஈ) கெல்நேவ பிரதேச செயலகத்தின் ஓய்வூதிய உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்டு உள்ள நிதி முறைகேடு ரூபா. 1,666,762 தொகை ஆவதுடன் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியன்று அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா. 205,402 தொகை ஆகக் காணப்பட்டது. 2012 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்ட இந்த மோசடி தொடர்பில் நி.ஒ. 104 விசாரணை ஒன்றினையும் மற்றும் முறையான ஒழுக்காற்று விசாரணை ஒன்றினையும் நடாத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(உ) பொல்கஹவெலஃ பண்டாரகம பிரதேச செயலகத்தில் 2014 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்ட ரூபா. 5,049,611 தொகை நட்டத்தினையும், குருவிட்ட பிரதேச செயலகத்தில் 2014 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்ட ரூபா. 5,215,589 தொகை நட்டத்தினையும் நட்ட இழப்புக்கள் தொடர்பான ஆவணத்தில் குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியன்று அறவிட்டுக்கொள்ளல் தொடர்பில் முன்னேற்றம் ஒன்று காணப்படவில்லை என்பதுடன் நி.ஒ. விசாரணை மற்றும் ஒழுக்காற்று விசாரணை என்பன நடாத்தப்பட்டு இருக்கவில்லை.

4.3 **முகாமைத்துவப் பலவீனங்கள்**

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

4.3.1 முனைப்பான சேவையில் ஈடுபட்டு இருக்கும் போது மரணமடைந்து அல்லது அங்கவீன நிலைமைக்கு உட்பட்ட முப்படைகள் மற்றும் பொலிஸ் சேவை உறுப்பினர்களுக்கு இழப்பீட்டுச் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்துதல்.

4.3.1.1 **இராணுவ இழப்பீட்டுச் சம்பளங்களைச் செலுத்தும் செயற்பாட்டின் பலவீனங்கள்**

(அ) இராணுவ சேவையில் ஈடுபட்டு உள்ளவர்களையும் ஓய்வு பெறச் செய்யும் பொதுவான வழிமுறைக்கு அமைய அதாவது ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 2.17 ஆம் பிரிவின் மூலம் ஓய்வுபெறச் செய்து ஓய்வூதியத்தைச் செலுத்துதல் ஆரம்பிக்கப்படுவதுடன் பணிபுரியும் உரிய ஊழியருக்கு இராணுவ மருத்துவச் சபையினால் சேவைக்குப் பொருத்தமற்றவர் எனத் தீர்மானித்து இராணுவத் தளபதி அவர்களினால் பரிந்துரை செய்யப்பட்டு இருப்பின் அங்கவீன நிலைக்கு உரிய ஓய்வூதியம் ஒன்றும் செலுத்தப்படும். உரிய ஓய்வூதியரின் அங்கவீன நிலை ஏற்பட்ட தினம் மற்றும் மருத்துவ சபையிடம் முன்வைக்கப்பட்ட திகதி என்பவற்றிற்கு இடையில் நீண்டகால இடைவெளி ஒன்று கடந்து இருந்ததுடன் அங்கவீன நிலைமைக்கு உட்பட்ட காலப்பகுதியிலேயே மருத்துவ சபையிடம் முன்வைத்து அங்கவீன நிலைமையினை அடையாளம் காண்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அடிப்படைச் சம்பளங்கள், வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகள், இடைக்காலக் கொடுப்பனவுகள் மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவுகள் ஆகிய சகலதும் மேலதிகமாகச் செலுத்த வேண்டி ஏற்படும். அதற்கு அமைய கலேவெல பிரதேச செயலகத்தில் ரூபா. 11,433,021 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டு இருந்தது.

(ஆ) இராணுவ அங்கவீனர் சம்பளங்களை மேலதிகமாகச் செலுத்துதல்

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள சந்தர்ப்பங்களில் இரணுவ அங்கவீனர் சம்பளங்கள் மேலதிகமாகச் செலுத்தப்பட்டு இருந்தது.

(ஐ) கலேவெல பிரதேச செயலகத்தின் 59-1176493 ஆம் ஓய்வூதிய இலக்கத்தினைக் கொண்ட ஓய்வூதியருக்கு 6-59 இணைக்காமையின் காரணமாக அங்கவீனர் சம்பளம் ரூபா. 194,496 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டு இருந்ததுடன் அவர் 2022 மார்ச் 7 ஆம் திகதி முதல் காணாமல் சென்றமையின் காரணமாக மேற்படி மிகையாகச் செலுத்திய 2024 டிசம்பர் வரையும் அறவிட்டுக் கொள்வதற்கு அல்லது உரிய குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கை ஒன்றினை மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஐஐ) 2013 ஒக்டோபர் 10 ஆம் திகதிய அங்கவீனர் ஓய்வூதிய அளிப்புப் பத்திரத்திற்கு அமைய மஹர பிரதேச செயலகத்தில் 3-1153570 ஆம் ஓய்வூதிய இலக்கத்தினைக் கொண்ட ஆயுதப் படைகளுக்குரிய ஓய்வூதியத்திற்கு உரித்தான அங்கவீனர் ஓய்வூதியம் 2015 ஆகஸ்ட் 20 ஆம் திகதி இடைநிறுத்தப்படுதல் வேண்டும் எனினும் அவ்வாறு நிறுத்தப்படாமல் கணக்காய்வு செய்யப்பட்ட தினம் வரை ரூபா. 471,332 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டு இருந்தது.

(ஐஐஐ) மாவத்தகம பிரதேச செயலகத்தின் இராணுவ ஓய்வூதிய இலக்கம் 3-1168861 உரித்தான ஓய்வூதியர் 2015 டிசம்பர் 12 ஆம் திகதி முதல் இராணுவ சேவையில் இருந்து ஓய்வு பெற்று 2016 மே 09 ஆம் திகதி முதல் இராணுவப் படையின் ஊடாக சம்பளம் மற்றும் கொடுப்பனவு என்பவற்றினைப் பெற்றுக் கொள்வதுடன் 2018 யூலை 19 ஆம் திகதி முதல் அங்கவீனர் ஓய்வூதியம் முனைப்பாக்கப்பட்டமையினால் அடிப்படை ஓய்வூதியத்தில் திருத்தம் செய்யப்பட்டு இருந்த போதிலும் மேற்படி திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படாமையின் காரணமாக பணிக்கொடைக் கொடுப்பனவு ரூபா. 128,124.00 தெகையும் 2016 மே 09 ஆம் திகதி முதல் 2024 மே 10 ஆம் திகதி வரை அடிப்படை ஓய்வூதியம் ரூபா. 517,834.50 தொகையும் மேலதிகமாகச் செலுத்தப்பட்டு இருந்தது.

(ஐஏ) மாவத்தகம பிரதேச செயலகத்தின் 3-1327628 ஆம் இராணுவ ஓய்வூதிய இலக்கத்தினைக் கொண்ட ஓய்வூதியர் 2018.01.19 ஆம் திகதி முதல் ஓய்வு பெற்று இருந்ததுடன் ஓய்வூதியமானது, அங்கவீனர் ஓய்வூதியத்துடன் 2018.01.19 ஆம் திகதி முதல் திருத்தம் செய்யப்பட்டு இருந்த போதிலும், திருத்தம் செய்யப்பட்ட ஓய்வூதியத்தை வழங்காது ஆரம்ப ஓய்வூதியத்தை செலுத்தியமையின் காரணமாக பணிக்கொடைத் தொகை ரூபா. 130,154 தொகையும் ஓய்வூதியம் ரூபா. 99,638 தொகையும், வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா. 28,200 தொகையும் மேலதிகமாகச் செலுத்தப்பட்டு இருந்தது.

#### 4.3.1.2 **நிலையான கொடுப்பனவுகளைச் செலுத்துதல்**

யுத்த நிலைமைகள் நிலவிய காலகட்டத்தில் மரணமடைந்த முப்படைகள் மற்றும் விஷேட படையணிகள் உட்பட பொலிஸ் உறுப்பினர்களின் தங்கி வாழ்பவர்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் ஆழுனு.்.1.்.2021 மற்றும் 2021 மே 18 ஆம் திகதிய சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய ஓய்வூதியத் திணைக்களம் நிலையான மாதாந்தக் கொடுப்பனவு ஒன்றினைச் செலுத்துவதுடன் அது தொடர்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பாணந்துறைப் பிரதேச செயலகத்தின் தரவு முறைமையினைப் பரீட்சிக்கும் போது நிலையான கொடுப்பனவு உரித்தான இராணுவ வீரர்களின் தங்கி வாழ்பவர்கள் 05 பேர் நிலையான கொடுப்பனவினைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட போதிலும் நிலையான கொடுப்பனவினைச் செலுத்துவதற்கு உரிய எந்தவொரு தகவலும் ஓய்வூதியக் கோப்புக்களில் உள்ளடக்கப்படாமையின் காரணமாக செலுத்தப்பட்ட நிலையான கொடுப்பனவின் பெறுமதியின் சீரான தன்மை மற்றும் நிலையான கொடுப்பனவு என்பவற்றினைப் பெற்றுக் கொள்ளவுள்ள உரிமை ஆகியவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இயலாமல் சென்றது.

(ஆ) ஓய்வூதியத் திணைக்களத்தினால் கணக்காய்விடம் முன்வைக்கப்பட்டு இருந்த தகவல்களுக்கு அமைய நிலையான கொடுப்பனவினைப் பெறும் பயனாளிகள் மரணமடைந்து இருந்த போதிலும் அது தொடர்பில் அறிக்கையிடப்படாமையின்

காரணமாக 2025 மே மாதம் ஆகும் போது ரூபா. 3,884,706 தொகையினை அறவிட்டுக் கொள்வதற்கு இயலாமல் சென்றிருந்தது.

4.3.1.3 **ஆயுதப் படைகள் ஓய்வூதியம் மற்றும் பின் பயன் தொகைகளின் முகாமைத்துவம்**

(அ) கலேவெல பிரதேச செயலகத்தில் 3-1146072 ஆம் ஓய்வூதிய இலக்கத்தினைக் கொண்ட ஓய்வூதியர் 2012 ஒக்டோபர் 09 ஆம் திகதி சேவையில் இருந்து ஓய்வுபெற்று இருந்ததுடன் 2012 ஒக்டோபர் 09 ஆம் திகதி சேவையில் இருந்து ஓய்வு பெற்று இருந்ததுடன் 2012 ஒக்டோபர் 09 முதல் 2022 ஒக்டோபர் 09 வரை இராணுவப் படைகள் ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடைகள் கோவையின் 18 (1) (அ) இன் கீழ் சேவைக் காலத்திற்கு அமைய மாற்றத்திற்குப் பின்னர் மாதாந்தச் சம்பளம் ரூபா. 21,514 தொகை செலுத்தப்படுதல் வேண்டும் எனினும் மாற்றம் செய்யப்படுவதற்கு முன்னரான மாதாந்த சம்பளம் ஆகிய ரூபா. 24,632 தொகை ஆரம்பம் முதல் செலுத்தப்பட்டமையின் காரணமாக 2024 டிசம்பர் வரை ரூபா. 374,162 தொகை ஓய்வூதியம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டு இருந்தது.

(ஆ) கலேவெல பிரதேச செயலகத்தில் 40-3057 ஆம் ஓய்வூதிய இலக்கத்தினைக் கொண்ட விதவை இராணுவ ஓய்வூதியரின் வாழ்க்கைத் துணையின் வயது 55 வருடங்கள் 2021 யூலை 27 ஆம் திகதி பூர்த்தி அடைந்ததன் பின்னர் மாற்றம் செய்யப்பட்ட ஓய்வூதியம் 2022 ஏப்பிறல் 08 ஆம் திகதி முதல் தாபிக்கப்பட்டு இருந்த போதிலும் வயது பூர்த்தி அடைந்த 2021 யூலை 21 முதல் 2022 ஏப்பிறல் 07 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு உரிய வகையில் நிலுவைச் சம்பளங்களை கணிப்பிட்டுச் செலுத்தி இருக்காமையின் காரணமாக ரூபா. 270,515 தொகை ஓய்வூதியம் மற்றும் ஷரூபா. 24,675 தொகை வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகள் என்ற வகையில் மொத்தம் ரூபா. 295,190 தொகை குறைவாகச் செலுத்தப்பட்டு இருந்தது.

(இ) கலேவெல பிரதேச செயலகத்தில் 41-2016532 ஆம் ஓய்வூதிய இலக்கத்தினைக் கொண்ட ஓய்வூதியருக்கு இராணுவ அனாதைகள் சம்பளம் ஒன்று செலுத்தப்படுவதுடன் அவர் 2016 ஏப்பிறல் 15 ஆம் திகதி மீண்டும் திருமணம் முடித்து இருந்ததுடன் 2024 டிசம்பர் ஆகும் போது இராணுவ வீரருக்கு 2000 செப்தெம்பர் 20 மற்றும் 2004 மே 25 ஆகிய தினங்களில் பிறந்த அனாதைப் பிள்ளைகள் இருவர் இருந்த போதிலும் மேற்படி இரண்டு பிள்ளைகளுமே வயது 18 வருடங்கள் பூர்த்தி அடைதல் முறையே 2018 ஆம் ஆண்டில் மற்றும் 2022 ஆம் ஆண்டு முதல் ஆகும் எனினும் உரிய ஓய்வூதியத்தை பிள்ளைகளுக்கு உரித்தாக்கி வழங்காமல் 2025 சனவரி மாதம் வரை விதவை மனைவிக்கு வழங்கி வந்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) மஹர, கனேவத்த மற்றும் பாணந்துறை பிரதேச செயலகங்களுக்கு உரிய வகையில் 05 இராணுவ ஓய்வூதியர்களின் ஓய்வூதியத் திருத்தங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாமையின் காரணமாக ஒரு ஓய்வூதியரின் ஓய்வூதியம் ரூபா. 178,769 தொகை குறைவாகவும், 04 ஓய்வூதியர்களின் ஓய்வூதியம் ரூபா. 1,275,557 தொகை அதிகமாகவும் செலுத்தப்பட்டு இருந்தது.

(உ) பாணந்துறை பிரதேச செயலகத்தில் 4-37014 (370920770எ) ஆம் ஓய்வூதிய இலக்கத்தினைக் கொண்ட தங்கிவாழ்வோர் கொடுப்பனவிற்கு உரிய கோப்பிற்கு அமைய மேலதிகமாகச் செலுத்தப்பட்டு இருந்த ரூபா. 310,100 தொகை ஆகிய இடைக்காலக் கொடுப்பனவு மற்றும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு என்பவற்றை அறவிட்டுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஊ) பாணந்துறை பிரதேச செயலகத்தில் மீண்டும் திருமணம் முடித்த 40-981702 ஆம் இலக்க ஆயுதப் படை விதவை ஓய்வூதியக் கோப்பில் உள்ளடக்கப்பட்டு இருந்த 2015 யூன் 11 ஆம் திகதிய அளிப்புப் பத்திரத்திற்கு அமைய செலுத்தப்பட வேண்டிய மாதாந்த ஏனைய கொடுப்பனவு ரூபா. 1,750 தொகை ஆகக் காணப்பட்ட போதிலும் 2012 டிசம்பர் 19 ஆம் திகதி முதல் கணக்காய்வு செய்யப்பட்ட திகதி வரை மாதாந்தம் ஷரூபா. 4,250 வீதம் செலுத்தப்பட்டு இருந்தமையின் காரணமாக ரூபா. 504,000 தொகை அதிகமாகச் செலுத்தப்பட்டு இருந்தது.

(எ) மஹர பிரதேச செயலகத்தில் 03 ஓய்வூதியர்களுக்காக இராணுவ விதவை ஓய்வூதியம் 01.∴2019 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றுநிருபத்திற்கு அமைய திருத்தம் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

4.3.2 **அரச ஊழியர்களுக்கான ஓய்வூதியப் பயன் தொகைகள் மற்றும் விதவைகள் மற்றும் அனாதைகள் மற்றும் தபுதாரர் மற்றும் அனாதைகள் பயன்தொகைகளை உரித்தாக்கிக் கொடுத்தல்**

(அ) பாணந்துறை பிரதேச செயலகத்தில் 21-9000030 (645050207எ) ஆம் ஓய்வூதிய இலக்கத்திற்கு உரிய அடிப்படைச் சம்பளம் மற்றும் இடைக்காலக் கொடுப்பனவு என்பன முறையே ரூபா. 6,286 தொகை மற்றும் ரூபா. 2,875 தொகை என்ற வகையில் நிலவுதல் மற்றும் இந்த ஓய்வூதியத்துடன் இணைந்த வகையில் (பகிர்ந்து வழங்கப்படும் ஓய்வூதியம்) நொச்சியாகம பிரதேச செயலகத்தின் ஊடாக 2020 ஜனவரி மாதம் வரை செலுத்தப்பட்ட 23-9000029 (937890656எ) ஆம் ஓய்வூதிய இலக்கத்திற்கு உரிய அடிப்படைச் சம்பளம் மற்றும் இடைக்காலக் கொடுப்பனவு என்பன முறையே ரூபா. 5,373 தொகை மற்றும் ரூபா. 1,750 தொகை என்ற வகையில் வேறு பெறுமானம் ஒன்று நிலவுதல் தொடர்பான காரணங்களை கணக்காய்விற்கு வெளிப்படுத்திக்கொள்ள முடியாமல் சென்றது. மேலும் 23-9000029 ஆம் ஓய்வூதியத்திற்கு உரிமை கோரிய அனாதையின் வயது 2020 சனவரி மாதம் பூர்த்தி அடைந்து இருந்த போதிலும் மேற்படி பகுதியினை 21-9000030 ஆம் இலக்க ஓய்வூதியத்தில் சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) பாணந்துறை பிரதேச செயலகத்தில் 2013 செப்தெம்பர் 20 ஆம் திகதிய மற்றும் 3.∴2013 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் மீண்டும் திருமணம் முடித்த விதவைகளுக்கு இடைக்காலக் கொடுப்பனவில் இருந்து நூற்றிற்கு 50 தொகையினைச் செலுத்துதல் வேண்டும் எனினும் 22-1000004 ஆம் ஓய்வூதிய இலக்க விதவைக்கு 2014 டிசம்பர் மாதம் முதல் 2020 ஒக்டோபர் மாதம் வரை முழுமையான இடைக்காலக் கொடுப்பனவினைச் செலுத்தியதன் காரணமாக இடைக்காலக் கொடுப்பனவு ரூபா.122,250 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டு இருந்தது.

(இ) ஓய்வூதியர்களின் இறப்பினை கிராம உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்தாமை, உயிர் வாழ்தல் சான்றிதழினை முன்வைக்காமை போன்ற பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்ட பாணந்துறை பிரதேச செயலகத்தின் ஓய்வூதியர்கள் 10 பேரின் ஓய்வூதியங்களை வழங்குதல் இடைநிறுத்தப்பட்டு 35 – 107 மாதங்களுக்கு இடைப்பட்ட காலம் ஒன்று கடந்து உள்ள போதிலும் மேலதிக கொடுப்பனவு ஒன்று மேற்கொள்ளப்பட்டு உள்ளதா என்பதனை அல்லது கொடுப்பனவுகளை இடைநிறுத்துவதற்கு உரிய சரியான காரணம் தொடர்பில் பின்னாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஈ) வயது 18 வருடங்கள் கடந்துள்ள பாணந்துறை பிரதேச செயலகத்தில் அனாதைகள் 04 பேரினதும், மஹர பிரதேச செயலகத்தில் அனாதைகள் 03 பேரினதும் ஓய்வூதியங்கள் நேரடியாக அனாதைகளுக்கு செலுத்தப்படாமல் நம்பிக்கைப் பொறுப்பின் கீழ் செலுத்தப்பட்டு வருவது தொடர்பில் அவதானிக்கப்பட்டது.

(உ) பாணந்துறை பிரதேச செயலகத்தின் ஓய்வூதியர்கள் 11 பேரிற்காக ஒரே நபரிற்காக செலுத்தப்படும் விதவைகள் ஓய்வூதியம் மற்றும் தங்கி வாழ்வதற்கான கொடுப்பனவுகள் ∴ இழப்பீட்டு ஓய்வூதியம் ஆகிய இரண்டு சம்பள வகைகளுக்குமாக வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு செலுத்தப்பட்டு இருந்தது.

(ஊ) மாஸ்பொத பிரதேச செயலகத்தில் ஒரே நபரிற்காக செலுத்தப்படும் 1- 885548 மற்றும் 21-2184749 (435130569ஏ) ஆம் இலக்க 02 ஓய்வூதிங்களுக்காக வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகள் முறையே மாதாந்தம் ரூபா. 6,025 தொகை மற்றும் ரூபா. 2,000 தொகை என்ற வகையில் செலுத்தப்படுவது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் வேறுபட்ட பெறுமானங்களைச் செலுத்துவதற்கான காரணங்கள் வெளிக்கொண்டு வரப்படவில்லை.

(எ) 2022 -2024 காலப் பகுதிக்குள் ஆணையிரவு, ஆரச்சிகட்டுவ மற்றும் புத்தளம் பிரதேச செயலகங்களுக்கு ஓய்வூதியர்கள் 10 பேரின் இறப்பு தொடர்பில் உரிய முறையில் அறிக்கையிடப்படாமையின் காரணமாக ரூபா. 387,783 தொகை ஓய்வூதியம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டு இருந்தது.

## 5. நிலையான அபிவிருத்தி

### 5.1 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடையாளம் காணல்

2020 ஆம் ஆண்டில் நிறைவேற்றிக் கொள்வதற்கு இலக்காகக் கொள்ளப்பட்டுள்ள நிலையான அபிவிருத்திக்கான இலக்குகளின் கீழ் ஓய்வூதியத் திணைக்களத்தினால் ஒரு இலக்கு மாத்திரம் அடையாளம் காணப்பட்டு இருந்தது. மேற்படி இலக்கு தொடர்பிலும் தெளிவான இலக்குகள் தாபிக்கப்படவில்லை என்பதுடன் அடிப்படைத் தரவுகள் மற்றும் முன்னேற்றம் என்பவற்றை அளவிட்டுப் பார்க்கும் குறிகாட்டிகள் முறையான வகையில் தாபிக்கப்பட்டு இருக்கவில்லை. நிலையான அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்துவதற்காக நிறுவனத்தின் கடமைப்பொறுப்புடன் தொடர்பான ஆர்வம் காட்டும் தரப்பினர்கள் கூட அடையாளம் கண்டிருக்கவில்லை.

**எம்.எம். டி சொய்ஸா**
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாளர் நாயகம் சார்பில்.

LSW/E/LGPF/02/25/01 2025 மே மாதம் ………. திகதி

ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம்
ஓய்வூதிய திணைக்களம்

**உள ஓய்வூதிய நிதியத்தின் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்டத்துடனான அத்துடன் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 11(1) ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை.**

---

## 1. நிதிக் கூற்றுகள்

### 1.1. அபிப்பிராயம் மறுத்தல்

உள ஓய்வூதிய நிதியத்தின் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று, அத்துடன் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்கு ஏற்புடையதான தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகளைக் கொண்டமைந்த, 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் உள்;ராட்சி சேவை கட்டளைச் சட்டத்தில் (264 ஆம் அதிகாரம்) 62 ஆவது பிரிவு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154 (3) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் பிரகாரம் என்து பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பில் 154(6) உறுப்புரை பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படும்.

நிதியத்தின் நிதிக் கூற்றுகள் தொடர்பாக நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. அபிப்பிராயம் மறுப்பதற்கான அடிப்படை பகுதியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக் கூற்றுகள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமற்றதும் பொருத்தமற்றதுமென நம்புகின்றேன்

### 1.2. அபிப்பிராயம் மறுப்பதற்கான அடிப்படை

(அ) இலங்கை பொது கணக்கீட்டு நியம இலக்கம் 01 பிரகாரம் நிதியத்தால் திரண்ட அடிப்படையில் கணக்கு வைக்கப்படுதல் வேண்டுமாயினும், மீளாய்விற்கான ஆண்டில்முன்னரான ஆண்டுக்கு ஏற்புடையதாக மற்றும் மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக கிடைக்கப் பெற்றிருந்த ரூபா.73,002,313 ஆன உதவு தொகை பண அடிப்படையில் கணக்கு
வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) திறைசேரி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி 2024 ஆம் ஆண்டில் ஓய்வூதியம் பெறுநர்கள் பொருட்டு

ரூபா.913,923,665 ஆன உதவு தொகை செலுத்தப்பட்டிருந்தது. உள்;ராட்சி நிறுவனங்களில் ஆண்டின் உதவு தொகை கிடைக்கப்பெறல் ரூபா.73,002,313 ஆகியதுடன், ஓய்வூதிய நிதியத்தில் கொடுப்பனவாக அந்த தொகை உதவு தொகை கிடைக்கப்பெறுதலுக்கு எதிராக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்விற்கான ஆண்டில் ஒட்டு மொத்த கிடைக்கப்பெறல் ரூபா.73இ002இ313 இல் ரூபா.14இ732இ111கடந்த ஆண்டில் கிடைக்கப்பெறுதல் ஆயினும், குறித்த பெறுமதி, பற்றாக்குறை திரண்ட நிதியத்திற்கு மாற்றல்களாக வருமான செலவினக் கணக்கில் சீராக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிதிக் கூற்றுகள் படி 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் 164 உள்;ராட்சி நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய உதவு தொகை ரூபா.856,093,490 ஆயினும், உள்;ராட்சி நிறுவனங்களின் நிதிக் கூற்றுகளின் படி செலுத்தப்பட வேண்டிய உதவு தொகை ரூபா.156,162,270 ஐ குறைவாக காண்பிக்கப்படுதல் காரணமாக 7பா.699,931,220 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(உ) நிதிக் கூற்றுகளின் படி 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் 33 உள்;ராட்சி நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய உதவு தொகை ரூபா.101,640,065 ஆக இருப்பினும், உள்;ராட்சி நிறுவனங்களின் நிதிக் கூற்றுகளுக்கமைவாக செலுத்தப்பட வேண்டிய உதவு தொகை ரூபா.107,596,345 என்று அதிகமாக காண்பிக்கப்படுதல் காரணமாக ரூபா.5,956,280 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதிக் கூற்றுகள் பிரகாரம், 303 உள்;ராட்சி நிறுவனங்களிடமிருந்து ரூாப.1,053,748,746 ஆன கிடைக்கப்பெற வேண்டிய உதவு தொகையில் 62 உள்;ராட்சி நிறுவனங்களுக்கு ஏற்புடையதாக ரூபா. 429,754,794 ஆன கிடைக்கப்பெற வேண்டிய உதவு தொகை பொருட்டு மீதிகளை உறுதிப்படுத்தல் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை.

மேற் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஐந்தொகை, வருமான செலவினக் கணக்கு மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள பொருண்மையான உருப்படிகள் மாற்று முறைகளின் மூலம் உறுதிப்படுத்தவதற்கு அல்லது ஒப்பாய்வு செய்வதற்கு எனக்கு முடியவில்லை. இதன் காரணமாக ஐந்தொகை, வருமான செலவினக் கணக்கு மற்றம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் பெறுமதி அல்லது உருப்படிகளில் பதிவு செய்த அல்லது பதிவு செய்யாத பெறுமதிகள் அல்லது பரிமாற்றங்கள் தொடர்பில் ஏதேனும் பொருத்தப்பாடுகள் மேற்கொள்ளுதல் தேவையானதா என்பது தொடர்பில் எனக்கு தீர்மானிப்பதற்கு முடியவில்லை.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கையின் கணக்காய்வு நியமங்களுக்கமைவாக நடாத்தப்படுகின்ற கணக்காய்வின் அடிப்படையில் நிதியத்தின் நிதிக் கூற்றுகள் தொடர்பாக கணக்காய்வாளரின் அறிக்கை வெளியிடல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் அபிப்பிராயம் மறுப்பதற்கான அடிப்படை பகுதியில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் காரணமாக இந்த நிதிக் கூற்றுகள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் பொருட்டு என்னால் போதுமானதும் பொருத்தமானதும் சாட்சிகளை பெற்றுக்கொள்வதற்கு முடியவில்லை.

2. 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில 6 (1) (ஈ) (III) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி நிதியத்தின் நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் ஒத்துள்ளது.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு இணங்காமை

அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 07/2016 இன் படி 2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட இலக்கம் 425 மற்றும் 426 மூலம் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமைக்கமைவாக அனைத்து நியதிச் சட்ட மற்றும் நியதிச்சட்டம் அல்லாத நிதியங்களை பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்துவதை சான்றுப்படுத்துவதற்காக பொது திறைசேரியால் 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆம் திகதி விசேட குழு நியமனம் செய்யப்பட்டதுடன், அந்தக் குழுவால் இந்த நிதியத்திற்கு ஏற்புடையதான சட்டங்களை திருத்தம் செய்து முடிவிடுதல் வேண்டுமென பிரேரணை செய்து இருப்பினும், அது தொடர்பான தீர்மானம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும் அந்த அறிக்கையில் நிலுவை உதவு தொகை ஏற்புடைய நிறுவனங்களிடமிருந்து விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்ட பரிந்துரைகளும் செயற்படுத்தப்படவில்லை.

**3.2 கிடைக்கப்பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

(அ)நிதிக் கூற்றுகளின் படி 303 உள்@ராட்சி நிறுவனங்களிடமிருந்து 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் கிடைக்கப்பெற வேண்டிய மொத்த உதவு தொகை மீதி ரூபா.1,053,748,746 ஆகியதுடன், குறித்த உதவு தொகை மீதியில் 74 நிறுவனங்களிடமிருந்து காலாண்டு ரீதியாக பெற்றுக்கொள்ள வேண்டிய ரூபா.283,979,179 ஆன மீதியை மீளாய்விற்கான ஆண்டில் பெற்றுக்கொள்வதற்கு நிதியம் தவறியிருந்தது.

(ஆ) நிதிக் கூற்றுகளின் படி 50 உள்@ராட்சி நிறுவனங்களிடமிருந்து 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் கிடைக்கப்பெற வேண்டிய உதவு தொகை ரூபா.988,462,216 ஆயினும் உள்@ராட்சி நிறுவனங்களின் நிதிக் கூற்றுகளில் செலுத்தப்பட வேண்டிய உதவு தொகை இல்லையென அவதானிக்கப்பட்டது.

(இ) நிதிக் கூற்றுகளின் படி 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் 05 உள்@ராட்சி நிறுவனங்களிடமிருது கிடைக்கப்பெற வேண்டி உதவு தொகை மீதி இல்லையென்றாலும், உரிய உள்@ராட்சி நிறுவனங்களின் நிதிக் கூற்றுகள் பிரகாரம் மொத்தம் ரூபா.538,508 ஆன செலுத்தப்பட வேண்டிய உதவு தொகை மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**3.3 முகாமைத்துவ செய்றபாடுகள்**

(அ) கிடைக்கப்பெறல் மற்றும் கொடுப்பனவு சாராம்சத்தில் முன்னரான ஆண்டின் கிடைக்கப்பெறுதலும் அடங்கலாக ஒட்டு மொத்தமாக கிடைக்கப்பெறுதல் உள்ளடக்கப்படினும் வகைப்படுத்தாது மீளாய்விற்கான ஆண்டின் கிடைக்கப்பெறல் மற்றும் கொடுப்பனவாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) உள்@ராட்சி ஓய்வூதிய நிதியத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் உறுப்பினர்களின் பெயர் அட்டவணை பராமரிக்கப்படினும், குறித்த பெயர் அட்டவணையில் மரணிக்கும் ஓய்வூதியதாரர்களின் பெயர்களை நீக்கப்பட்டு உறுப்பினர்களின் பெயர் அட்டவணை பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஜீ.எச்.டீ.தர்மபால
கணக்காய்வாளர் அதிபதி

எல்எஸ்டப்/ஈ/டீசர்ஸ்/02/25/15 2025 மே மாதம் ………. திகதி

ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம்
ஓய்வூதிய திணைக்களம்

**ஆசிரியர் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்டத்துடனான அத்துடன் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 11(1) ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை.**

---

**1. நிதிக் கூற்றுகள்**

**1.1. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ஆசிரியர் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு அத்துடன் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்கு ஏற்புடையதான தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுகளைக் கொண்டமைந்த, 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 1953 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய கட்டளைச் சட்டத்தில் 5 மற்றும் 9 ஆவது பிரிவு பிரகாரம், விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளில் 6(1) பிரிவு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154 (3) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் பிரகாரம் என்து பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பில் 154(6) உறுப்புரை பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்களைத் தவிர்ந்த, நிதியத்தின் நிதிக் கூற்றுகள் ஊடாக 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2. முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கொழும்பு கல்வி வலயத்தின் மீளாய்விற்கான ஆண்டின் ஏப்ரல் மாதம் பொருட்டான உதவு தொகை ஆண்டின் நிதிக் கூற்றுகளில் கைவிடப்பட்டிருந்தமையால் வருமான செலவின கணக்கில் ஆண்டுக்கு ஏற்புடையதான உதவு தொகை ரூபா.4,035,793 ஆல் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் கிடைக்கப்பெற வேண்டிய உதவு தொகை மீதியில் கழுத்துறை கல்வி வலயத்திற்கு ஏற்புடையதாக திசெம்பர் மாதம் பொருட்டு கிடைக்கப்பெற வேண்டிய வருமானம் இரண்டு தடவையில் குறிப்பிடப்பட்டமையால்

ஐந்தொகையில் கிடைக்கப்பெற வேண்டிய உதவு தொகை மீதி ரூபா.122,104 ஆல் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2024 ஆம் ஆண்டில் கேரி கல்லூரியில் ஆகஸ்ட் மாதம் பொருட்டு உதவு தொகை கிடைக்கப்பெறவில்லை என்பதுடன், 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் குறித்த உதவு தொகை கணக்கிடப்பட்டு கிடைக்கப்பெற வேண்டிய உதவு தொகை மீதியில் உள்ளடக்கப்படவில்லை.

(ஈ) விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய உதவு தொகை 8% வரை அதிகரிக்கப்பட்டிருப்பினும், களுத்துறை கல்வி வலயத்தில் ஒரு மகளிர் கல்லூரியில் 2024 ஏப்ரல் மாதம் தொடக்கம் திசெம்பர் வரையிலும், மற்றுமொரு கல்லூரியில் 2024 ஏப்ரல் தொடக்கம் செப்தெம்பர் வரையிலும், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திற்கு உதவு தொகை 6% ஆன பங்களிப்பு மட்டும் வழங்கப்பட்டிருந்தது. அதனால் இரண்டு கல்லூரிகளுக்கு ஏற்புடையதாக நிலுவை உதவு தொகையின் பெறுமதி ரூபா347,375 ஆகியதுடன், 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் கிடைக்கப்பெற வேண்டிய உதவு தொகை நிலுவையின் பொருட்டு சீராக்கப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்-கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்தின் ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கும் தரப்புகளை தொடர்பு கொள்கின்றேன்.

**2. ஏனைய சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை**

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில 6 (1) (ஈ) (III) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி நிதியத்தின் நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் ஒத்துள்ளது.
- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**3. தொழில்பாட்டு மீளாய்வுகள்**

3.1 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் தொடர் | இணங்காமை |
|---|---|
| 1953 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய சட்டம்<br>(i) கட்டளை இலக்கம் 4 | ஆசிரியர் விதவைகள் உதவு தொகை நிதியம் கட்டியெழுப்பி அதன் மூலம் ஆசிரியர் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய சம்பளம் செலுத்தப்படுதல் வேண்டுமாயினும், உதவு தொகை சேகரித்தல் மற்றும் கொடுப்பனவு செய்வதற்காக நிதியம் பொருட்டு புறம்பாக வங்கி கணக்கு பராமரிக்கப்படாது ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் வங்கி கணக்கிற்கு உதவு தொகை திரட்டியிருந்ததுடன், ஓய்வூதிய திணைக்களத்து செலவு விடயத்தின் கீழ் செலுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (ii) கட்டளை இலக்கம் 9 (அ) | ஒவ்வொரு உதவு தொகை செலுத்துவதற்கு தகுதி பெற்ற மற்றும் உதவு தொகை செலுத்துபவர்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கிய ஆவணம் பராமரிக்கப்படவில்லை. |

**3.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

(அ) உறுப்பினர்களின் பெயர், பாடசாலை, உள்ளடக்கிய ஆவணம் பராமரிக்கப்படாமை காரணமாக நிதியத்திற்கு வருடாந்தம் உண்மையாகவே கிடைக்கப்பெற வேண்டிய தொகை, கிடைக்கப்பெற்ற தொகை மற்றும் நிலுவை தொகை, நிதியத்தின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை, மீளாய்விற்கான ஆண்டில் புதிய உறுப்பினர் உரிமை பெற்றுக்கொண்ட எண்ணிக்கை மற்றும் நிதியத்தில் உறுப்பினர் உரிமை பெற்றுக்கொண்டதிலிருந்து விலகிய எண்ணிக்கை தொடர்பான தகவல்களை சரியாக அடையாளம் காணுவதற்கு முடியவில்லை.

(ஆ) நிதியத்தின் நோக்கங்களை திரட்டிய நிதியத்தில் 253 ஆம் இலக்க ஒதுக்கீட்டு தலைப்பில் நிறைவேற்றப்படுவதால் இந்த நிதியம் தேவைப்படாவிட்டாலும், நிதியத்திற்கான சட்டம் திருத்தம் செய்வதற்கு முன்மொழிந்திருப்பினும், குறித்த முன்மொழிவு இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

(இ) உதவு தொகை மற்றும் ஏனைய வருமானம் சேகரிப்பு அத்தடன் உதவு தொகை மீள செலுத்தவதற்காக இறுதி கணக்கில் திறைசேரி பிரதி செயலளாரின் கணக்கு பராமரிக்கப்படினும், 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதி கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா.3,792,866,171 ஆன திறைசேரி செயலாளரின் மீதி பெயரளவிலான நிலுவையாவதுடன், அது தொடர்பாக கணக்கு குறிப்புகளிலும் காண்பிக்கப்பட்டிருந்தது.

ஜீ.எச்.டி.தர்மபால
கணக்காய்வாளர் அதிபதி (ப.க)

ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம்,
ஓய்வூதியத் திணைக்களம்.

**2024 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான பொது சேவை வருங்கால வைப்பு நிதியத்தின் நிதி அறிக்கைகள் மற்றும் பிற சட்ட மற்றும் ஒழுங்கு முறை தேவைகள் குறித்த 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய தணிகைகள் சட்டத்தின் பிரிவு 11 (1) இன் படி கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.**

## 1. நிதி அறிக்கைகள்

### 1.1 மறுப்பு

2024 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான பொது சேவை வருங்கால வைப்பு நிதியத்தின் நிதி அறிக்கைகள், டிசம்பர் 31 2024 நிலவரப்படி நிதி நிலை அறிக்கை மற்றும் அன்றைய தினம் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயல்திறன் அறிக்கை, பங்கு மாற்றங்களின் அறிக்கை மற்றும் அன்றைய தினம் முடிவடைந்த ஆண்டிற்கான பணப்புழக்கங்களின் அறிக்கை மற்றும் நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள், குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள் பற்றிய தகவல்கள் உட்பட இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பிரிவு 154(3) உடன் இணைந்து படிக்கப்பட்ட1942ஆம் ஆண்டின் 18 ஆம் எண் (அத்தியாயம் 621) பொது சேவை வருங்கால வைப்பு நிதி கட்டளைச் சட்டத்தின் பிரிவு 24(1) இன் விதிகளின்படி எனது வழிகாட்டுதலின் கீழ் தணிக்கை செய்யப்பட்டன. அரசியலமைப்பின் பிரிவு 154(6) இன் படி எனது அறிக்கை விரைவில் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்.

நிதியத்தின் நிதிநிலை அறிக்கைகள் குறித்து நான் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. கருத்துக்கான அடிப்படைப் பிரிவில் விவாதிக்கப்பட்ட விசயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதி நிலை அறிக்கைகள் குறித்த தணிக்கைக் கருத்துக்கான அடிப்படையை வழங்குவதற்குப் போதுமான பொருத்தமான தணிக்கைச் சான்றுகளை என்னால் பெற முடியவில்லை.

### 1.2 மறுப்புக்கான அடிப்படை

(அ) நிதி நிலை அறிக்கைளில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா.221,002,161 அரசாங்க பங்களிப்புக்களைச் சரி பார்க்கதொடர்புடைய அட்டவணைகள் தணிக்கைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) கட்டாய பங்களிப்புக் கணக்கில் ரூபா 39,823,,808,149 மற்றும் அரச பங்களிப்புக் கணக்கில் ரூபா 61,194,695,013 இருப்புத் தொகையின் துல்லியம் உறுதிப்படுத்தப்படவில்லை. ஏனெனில் தனிப்பட்ட இருப்பு அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. இது ஒவ்வொரு பங்களிப்பாளருக்கும் ஏற்ப பிரிக்கப்படலாம்.

(இ) பயனாளிகளின் தகவல்களைக் கொண்ட அட்டவணைகள் தணிக்கைக்கு சமர்ப்பிக்கப்படாததால், தன்னார்வ பங்களிப்புக் கணக்கில் உள்ள 61,535,259 இருப்பின் துல்லியத்தை சரிபார்க்க முடியவில்லை.

(ஈ) 1989 ஆம் ஆண்டு முதல் முன்னெடுக்கப்பட்ட சமரசக் கணக்கில் 5,644,476 மீதி அடையாளம் காணப்படாத மீதியாகக் காட்டப்பட்டிருந்தாலும், அந்த மீதியை குறிப்பாக அடையாளம் காண தொடர்புடைய கணக்குகளில் தேவையான மாற்றங்கள் எதுவும் செய்யப்படவில்லை.

(உ) வழங்கப்பட்ட நிதி நிலை அறிக்கைளில் காட்டப்பட்டுள்ளவாறு. 2024 டிசம்பர் 31ம் திகதிக்கு ரூபா.43,650,259,791 திறைசேரிப் பத்திரங்களுக்குக் கிடைத்த வட்டி வருமானம் ரூபா.1,309,507,797 குறைத்து மதிப்பிடப்பட்டிருந்தது.

(ஊ) மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் இரண்டு நிலையான வைப்புத் தொகைகள் தொடர்பான வட்டி வருமானம் ரூபா.27,669,000 க்கு அதிகமாக காட்டப்பட்டிருந்தது.

மேலே விவரிக்கப்பட்டுள்ளபடி. நிதி நிலை அறிக்கை, நிதி செயல்திறன் அறிக்கை பங்குகளில் ஏற்படும் மாற்றங்களின் அறிக்கை மற்றும் பணப்புழக்கங்களின் அறிக்கை ஆகியவற்றில் சேர்க்கப்பட்டுள்ள அளவுசார் உருப்படிகளை மாற்று வழிகளில் உறுதிப்படுத்தவோ அல்லது சரிபார்க்கவோ முடியவில்லை. இதன் விளைவாக நிதி நிலை அறிக்கை நிதி செயல்திறன் அறிக்கை, பங்குகளில் ஏற்படும மாற்றங்களின் அறிக்கை மற்றும் பணப்பழக்கங்களின் அறிக்கை ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்ட அல்லது தெரிவிக்கப்படாத தொகைகள் அல்லது உருப்படிகளில் ஏதேனும் சரிசெய்தல் செய்யப்பட வேண்டுமா என்பதை என்னால் தீர்மானிக்க முடியவில்லை.

### 1.3 நிதி நிலை அறிக்கைகளுக்கான முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் செய்பவர்களின் பொறுப்புக்கள்

இந்த நிதி நிலை அறிக்கைகளை இலங்கைபொதுத் துறை கணக்கியல் தர நிலைகளின்படி தயாரித்து நியாயமாக வழங்குவதற்கும் , மோசடி அல்லது பிழை காரணமாக ஏற்படக்கூடிய குறிப்பிடத்தக்க தவறான கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதற்குத் தேவையான உள் கட்டுப்பாட்டைத் தீர்மாணிப்பதற்கும் நிர்வாகம் பொறுப்பாகும்.

நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதில். நிதியின் தொடர்ச்சியான நிறுவனமாகத் தொடரும் திறனை மதிப்பிடுவதற்கும்,தொடர்ச்சியான கணக்கியல் அடிப்படையில் கணக்கீடு செய்வதற்கும் நிர்வாகம் நிதியைக் கலைக்க விரும்பினால் அல்லது செயல்பாடுகளை நிறுத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்பதைத் தவிர, நிதியின் தொடர்ச்சியான நிறுவனமாகத் தொடரும் திறன் தொடர்பான ஏதேனும் விடயங்களை வெளிப்படுத்துவதும் நிர்வாகத்தின் பொறுப்பாகவுள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயல்முறையை மதிப்பாய்வு செய்யும் பொறுப்பு நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்களிடமே உள்ளது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய தணிக்கைகள் சட்டத்தின் துணைப்பிரிவு 16(1) இன்படி, நிதியத்தின் வருடாந்த மற்றும் இடைக்கால நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு ஏதுவாக,

அதன் வருமானம்,செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குறித்த முறையான புத்தகங்கள் மற்றும் பதிவுகள் பராமரிக்க வேண்டும்.

### 1.4 நிதி நிலை அறிக்கைகளின் கணக்காய்வுகளுக்கு கணக்காய்வாளரே பொறுப்பு

இலங்கை கணக்காய்வு தரநிலைகளின் படி நடத்தப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் நிதியத்தின் நிதி அறிக்கைகள் குறித்த கணக்காய்வாளர் அறிக்கயை வெளியிடுவது எனது பொறுப்பு. இருப்பினும், கருத்து மறுப்புக்கான அடிப்படைப் பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக இந்த நிதி நிலை அறிக்கைகள் குறித்த கணக்காய்வு கருத்துக்கான அடிப் படையை வழங்க போதுமான பொருத்தமான கணக்காய்வு ஆதாரங்களை என்னால் பெற முடியவில்லை.

### 2. பல்வேறு சட்ட மற்றும் ஒழுங்கு முறை தேவைகள் குறித்த அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகள் தொடர்பாக சிறப்பு விதிகள்.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வாளர் சட்டத்தின் பிரிவு 6(1) ஈ (iv) இன் படி நிதியத்தின் நிதிநிலை அறிக்கைகள் முன்னைய ஆண்டுகளுடன் ஒத்துப்போகின்றன.
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1)
- ஈ (iv) இன் தேவைகளுக்கிணங்க எனது அறிக்கையில் உள்ள கருத்து மறுப்புக்கான அடிப்படையின் பிரிவுகள் (அ) முதல் (உ) வரை குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்களைத் தவிர முந்தைய ஆண்டில் நான் செய்த பரிந்துரைகள் வழங்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

### 3. செயல்பாட்டு மதிப்பாய்வு

3.1 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கு இணங்காதது

1942 ஆம் ஆண்டு பொது சேவை வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தின் பிரிவு 25 இன் படி, ஓய்வூதிய இயக்குநர் ஒவ்வொரு பங்களிப்பாளருக்கும் அந்தத் தேதியில் நிதியில்அவரது வரவில் உள்ள மொத்தப் பணத்தைத் தெரிவிக்க வேண்டும். ஆனால் அந்தத் தேவையை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

பங்களிப்பாளர்களிடையே ரூபா.13,278,434,296 ஆகிய வட்டி வருமானப் பகிர்வுக்கான விகிதம் ஆரம்ப மாதாந்த ஒதுக்கீட்டு மதிப்பின் சராசரி மதிப்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது. மேலும் வட்டி வருமானம் பங்களிப்பாளர்களிடையே முழுமையாகப் பகிரப்படவில்லை என்பது கவனிக்கப்பட்டது. மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் பங்களிப்பாளர்களிடை யே பகிர்ந்தளிக்கப்படாமல் ரூபா.5,074,001,808 ஆகிய வட்டி வருமானம் பொது இருப்புக்கு மாற்றப்பட்டது.

**ஜீ.எச்.தர்மபால**
கணக்காய்வாளர் நாயகம் (ப)

# 04.
# செயல்திறன் குறிகாட்டிகள்

## 4.1. நிறுவனத்தின் செயல்திறன் குறிகாட்டிகள் (செயல் திட்டத்தின் அடிப்படையில்)

| செயற்பாடு | துணை செயல்பாடுகள் | செயல்திறன் | மதிப்பிடப்பட்ட தொகை | உண்மையான வெளியீடு எதிர்பார்க்கப்படும் வெளியீட்டின் சதவீதமாக (%) | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 100%-90% | 75%-89% | 50%-74% | 49% இற்கும் கீழ் |
| புதிய ஓய்வூதிய கொடையளிப்பு | ஓய்வூதியம் கொடையளிப்பு - பரவலாக்கப்பட்ட | 2024 ஆம் ஆண்டில் ஓய்வூதிய கொடையளிக்கப்பட்ட ஓய்வூதியர்களின் எண்ணிக்கை | 30,000 | 102.7% | - | - | - |
| | ஓய்வூதியத்தை கொடையளிப்பு - மையப்படுத்தப்பட்ட | | 2,400 | - | 75% | - | - |
| | கொடையளிப்பு - விதவைகள் மற்றும் | | 9,000 | 104.53% | - | - | - |
| திருத்தப்பட்ட கொடுப்பனவுகள் | ஓய்வூதியம் கொடையளிப்பு - பரவலாக்கப்பட்ட | திருத்தப்பட்ட ஓய்வூதிய கொடுப்பனவுகளின் எண்ணிக்கை | 3,600 | - | - | - | 47.17% |
| | ஓய்வூதியத்தை கொடையளிப்பு - மையப்படுத்தப்பட்ட | | 780 | - | - | - | 35.77% |
| பணிக்கொடை மற்றும் பிற கொடுப்பனவுகள் | மரணப் பணிக் கொடை | செலுத்தப்பட்ட மரணக் கிராஜுவிட்டி விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 1,250 | 110.96% | - | - | - |
| | ஊனமுற்றோர் ஓய்வூதியம் | மாற்றுத்திறனாளிகள் செலுத்திய ஓய்வூதியத்தின் எண்ணிக்கை | 10,000 | - | 80.36% | - | - |
| | சத்கார பியச | நேர்காணலுக்கு அழைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | 30,000 | 109.93% | - | - | - |

## செயல்திறன் குறிகாட்டிகள்

| செயற்பாடு | துணை செயல்பாடுகள் | செயல்திறன் | மதிப்பிடப்பட்ட தொகை | உண்மையான வெளியீடு எதிர்பார்க்கப்படும் வெளியீட்டின் சதவீதமாக (%) | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 100%-90% | 75%-89% | 50%-74% | 49% இற்கும் கீழ் |
| மாதாந்த ஓய்வூதியங்கள் | மாதாந்த (குடியியல்) ஓய்வூதியங்கள் | மாதாந்தம் பயன் பெற்ற ஓய்வூதியர்களின் எண்ணிக்கை | 515,214 *12 | 99.88% (நிதி முன்னேற்றம்) | - | - | - |
| | பணிக்கொடை மற்றும் கடன் தவணை செலுத்துதல் | மாதாந்தம் பயன் பெற்ற ஓய்வூதியர்களின் எண்ணிக்கை | - | 99.29% (நிதி முன்னேற்றம்) | - | - | - |
| சமூக நலன் | முப்படை மற்றும் காவல் துறை | மாதாந்தம் பயன் பெற்ற ஓய்வூதியர்களின் எண்ணிக்கை | 41,126* 12 | 99.67% (நிதி முன்னேற்றம்) | - | - | - |
| விதவைகள் மற்றும்அனாதைகள் ஓய்வூதியம் | விதவைகள் மற்றும்அனாதைகள் ஓய்வூதியம் கொடுப்பனவு | மாதாந்தம் பயன் பெற்ற ஓய்வூதியர்களின் எண்ணிக்கை | 187,492 *12 | 96.9% | - | - | - |
| புகையிரத ஆணைச் சீட்டு | ஓய்வூதியர்களுக்கு புகையிரத ஆணைச் சீட்டு வழங்குதல் | மாதாந்தம் பயன் பெற்ற ஓய்வூதியர்களின் எண்ணிக்கை | - | - | - | 60.65 % | - |
| வெளிநாட்டு ஓய்வூதிய கொடுப்பனவு | குடியியல் ஓய்வூதியங்களை வெளிநாட்டு குடியியல் ஓய்வூதியமாக மாற்றுதல் | ஓய்வூதியர்கள் மற்றும் விதவைகளின் எண்ணிக்கை | 450 | - | - | 62% | - |
| | விதவை ஓய்வூதியத்தை வெளிநாட்டு விதவை ஓய்வூதியமாக மாற்றுதல் | | 180 | - | - | 51% | - |
| | படையினர் ஓய்வூதியங்களை வெளிநாட்டு படையினர் ஓய்வூதியமாக மாற்றுதல் | | 200 | - | 80% | - | - |

| செயற்பாடு | துணை செயல்பாடுகள் | செயல்திறன் | மதிப்பிடப்பட்ட தொகை | உண்மையான வெளியீடு எதிர்பார்க்கப்படும் வெளியீட்டின் சதவீதமாக (%) | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 100%-90% | 75%-89% | 50%-74% | 49% இற்கும் கீழ் |
| வெளிநாட்டு ஓய்வூதிய கொடுப்பனவு | வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்களிற்கு புதிய விதவை ஓய்வூதியத்தை ஆரம்பித்தல் | ஓய்வூதியர்கள் மற்றும் விதவைகளின் எண்ணிக்கை | 120 | - | - | 60% | - |
| செலுத்த வேண்டிய ஓய்வூதிய நிலுவைகள் (வெளிநாட்டு ஓய்வூதியர்களுக்கு | சுற்றறிக்கை எண். 14/2019 குறைக்கப்படாத ஓய்வூதியங்களில் ஈடுபடுங்கள் | மாதந்தோறும் சலுகைகளைப் பெற்ற ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை | 180 | - | - | - | 30% |
| செலுத்த வேண்டிய ஓய்வூதிய நிலுவைகள் | சிறப்புக் குழுவின் ஒப்புதலின் பேரில் SLR-களுக்கு இடையிலான மதிப்புக்கு 750,000 - 1,500,000 வரை நிலுவைத் தொகை செலுத்தப்பட வேண்டும். | மாதந்தோறும் சலுகைகளைப் பெற்ற ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை | 150 | - | 76% | - | - |
| | SLR-களுக்கு மேல் மதிப்புள்ள நிலுவைத் தொகை செலுத்தப்பட வேண்டும். சிறப்புக் குழுவின் ஒப்புதலின் பேரில் 1,500,000/=. | மாதந்தோறும் சலுகைகளைப் பெற்ற ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை | 90 | - | - | - | 32.22% |
| இலங்கை வெளிநாட்டு ஓய்வூதியர்களின் வருடாந்த உயிர்வாழ் சான்றிதழைப் இற்றைப்படுத்தல் | 2024 க்கு வழங்கப்பட்ட செல்லுபடியாகும் உயிர்வாழ் சான்றிதழ்களுடன் வருடாந்த உயிர்வாழ் சான்றிதழ்களைப் இற்றைப்படுத்தல் | | 8,000 | 103% | - | - | - |

## செயல்திறன் குறிகாட்டிகள்

| செயற்பாடு | துணை செயல்பாடுகள் | செயல்திறன் | மதிப்பிடப்பட்ட தொகை | உண்மையான வெளியீடு எதிர்பார்க்கப்படும் வெளியீட்டின் சதவீதமாக (%) | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 100%-90% | 75%-89% | 50%-74% | 49% இற்கும் கீழ் |
| டோல் கடிதங்களை வழங்குதல் | | | 200 | 98% | - | - | - |
| ரயில்வே வாரண்டுகளை வழங்குதல் (வெளிநாட்டு ஓய்வூதியதாரர்கள்) | | | 200 | - | - | - | 32% |
| தரவு அமைப்பில் மாற்றங்கள் (இறப்புகள், DS-க்கு மாற்றுதல், நிலை மாற்றங்கள், முதலியன... | | | 480 | - | 88.75% | - | - |
| ஓய்வூதிய நிலுவைத் தொகையை வழங்குதல் | குடியியல்<br>முப்படை<br>முரண்பாடுகள் | ஓய்வூதியர்களின் எண்ணிக்கை | 8,500 | 141.6% | - | - | - |
| விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான பங்களிப்புகளின் வருமானம் (வருமான சேகரிப்பு) | மத்திய அரசு | மாதந்த வருமானம் | 29,000* | - | 84.84% | - | - |
| | மாகாண சபைகள் | மாதந்த வருமானம் | 17,000* | 94.6% | - | - | - |
| | ஆசிரியர்களின் விதவைகள் மற்றும் ஆதரவற்றோர் ஓய்வூதியம் | மாதந்த வருமானம் | 427* | 122.25% | - | - | - |
| விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதிக்கு செய்யப்பட்ட பங்களிப்புகளின் மீள்ளிப்பு | சிவில் | பயனாளிகளின் எண்ணிக்கை | 1,300 | 130.15% | - | - | - |
| | ஆயுத படைகள் | பயனாளிகளின் எண்ணிக்கை | 1,200 | 250% | - | - | - |
| | ஆசிரியர்களின் விதவைகள் மற்றும் ஆதரவற்றோர் ஓய்வூதியம் | பயனாளிகளின் எண்ணிக்கை | 35 | 174.29% | - | - | - |
| | பொது 29 | பயனாளிகளின் எண்ணிக்கை | 30 | - | - | 56.67 % | - |

| செயற்பாடு | துணை செயல்பாடுகள் | செயல்திறன் | மதிப்பிடப்பட்ட தொகை | உண்மையான வெளியீடு எதிர்பார்க்கப்படும் வெளியீட்டின் சதவீதமாக (%) | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 100%-90% | 75%-89% | 50%-74% | 49% இற்கும் கீழ் |
| பொது சேவைகள் வருங்கால வைப்பு நிதியம் | பொ.சே. வை.நி அங்கத்தவர்கள் எண்ணிக்கை | புதிய அங்கத்தவர்கள் எண்ணிக்கை - வருடாந்தம் | 11,520 | - | - | - | 38.98% |
| | பங்களிப்பு செலுத்துதல் | பயனாளிகளின் எண்ணிக்கை | 5,400 | - | 84.17% | - | - |
| | பெறப்பட்ட பங்களிப்புகள் | மாதாந்த பங்களிப்பு 8% மற்றும் 12% | 1,480* | - | - | 51.89 % | - |
| | முதலீடு | வருடத்தில் செய்யப்பட்ட புதிய முதலீடுகள் | 12,000* | - | 87.35% | - | - |
| மனித வள அபிவிருத்தி | திறன் அபிவிருத்தி | பயிற்சித் திட்டத்தின்படி பயிற்சித் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் | 27 | 103.7% | - | - | - |
| வன்பொருள் மேம்பாட்டு நடவடிக்கைகள் | வன்பொருள் வாங்குதல் | கணணி | 100 | - | - | - | 66% |
| | | வருடி | 50 | 104% | - | - | - |
| | | அச்சுப் பொறி | 50 | 100% | - | - | - |
| சேவை உடன்படிக்கை | அஞ்சல் சேவையக மேம்படுத்தல் | சேவை ஒப்பந்தம் | 01 | 100% | - | - | - |
| | ஃபயர்வால் மேம்படுத்தல் | சேவை ஒப்பந்தம் | 01 | 100% | - | - | - |
| | ஆவண முகாமைத்துவ முறைமை | சேவை ஒப்பந்தம் | 01 | 100% | - | - | - |

## செயல்திறன் குறிகாட்டிகள்

| செயற்பாடு | துணை செயல்பாடுகள் | செயல்திறன் | மதிப்பிடப்பட்ட தொகை | உண்மையான வெளியீடு எதிர்பார்க்கப்படும் வெளியீட்டின் சதவீதமாக (%) | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 100%-90% | 75%-89% | 50%-74% | 49% இற்கும் கீழ் |
| மென்பொருள் மேம்பாடு | ஓய்வூதிய விண்ணப்பம் மற்றும் கொடுப்பனவு மேலாண்மை தொகுதியை மறுசீரமைத்தல் | - | - | - | - | - | 28% |
| முறைமை பாதுகாப்பு | சான்றிதழ் | சேவை ஒப்பந்தம் | 01 | 100% | - | - | - |
| மறுவாழ்வு மற்றும் மேம்பாடு மூலதன சொத்துகளின் | அலுவலக சூழலின் மேம்பாடு | 2024 ஆம் ஆண்டுக்குள் அனைத்து திட்டங்களையும் நிறைவு செய்தல் | | 100% | - | - | - |
| | விடுமுறை விடுதி சூழல் மேம்பாடு | | | - | - | - | - |
| | வாகனங்கள் | | | | | | 20% |
| | தோட்டம், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | | | 100% | - | - | - |
| மூலதன சொத்துகளின் பெற்று கொள்வது | மரச்சாமான்கள் அலுவலக உபகரணங்கள் | | தேவையானபடி | 100% | | | |
| | தோட்டம், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | | தேவையானபடி | 100% | | | |
| | குத்தகைக்கு எடுத்த வாகனங்கள் | | 01 | 100% | | | |
| உள்துறை கணக்காய்வு | ஆண்டு கணக்காய்வு திட்டத்தை தயாரித்தல் | | 01 | 100% | - | - | - |
| | கணக்காய்வு மேலாண்மை குழுவை நடத்தல் | | 04 | 100% | - | - | - |
| | பிரதேச செயலக அலுவலகத்தின் தணிக்கை ஆய்வு | - | 06 | 200% | - | - | - |

| செயற்பாடு | துணை செயல்பாடுகள் | செயல்திறன் | மதிப்பிடப்பட்ட தொகை | உண்மையான வெளியீடு எதிர்பார்க்கப்படும் வெளியீட்டின் சதவீதமாக (%) | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 100%-90% | 75%-89% | 50%-74% | 49% இற்கும் கீழ் |
| உள்துறை கணக்காய்வு | 1.5 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள ஓய்வூதிய கோப்புகள் | - | 300 | 147% | - | - | - |
| | சிறப்பு விசாரணைகள் | (தேவையானபடி) | 04 | - | 75% | - | - |
| | ஓய்வூதியத் துறையின் உள் துறைகளை தணிக்கை செய்தல். | - | 06 | - | - | 67% | - |
| | மைய தரவுத்தளத்தின் மதிப்பாய்வு | - | 100 | - | 84% | - | - |
| | பிற தணிக்கை பணிகள் | - | 200 | - | 75% | - | - |
| கொள்கை மற்றும் விசாரணை | ஓய்வூதியத்தை கணக்கிடும் நோக்கத்திற்காக தற்காலிக, மாற்று, தற்காலிக, ஒப்பந்த, சலுகை அடிப்படையில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் பட்டதாரி பயிற்சியாளர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் முப்படை அதிகாரிகளின் சேவை காலத்தைப் பயன்படுத்த ஒப்புதல். | அங்கீகரிக்கப்பட்ட கோப்புகளின் எண்ணிக்கை | 480 | - | 76.67% | - | - |
| கொள்கை & விசாரணை | பொது மனுக்கள் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களுடன் தொடர்புடைய பரிந்துரைகளின் அறிக்கைகள் அனுப்புதல் | சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | 48 | 100% | - | - | - |

## செயல்திறன் குறிகாட்டிகள்

| செயற்பாடு | துணை செயல்பாடுகள் | செயல்திறன் | மதிப்பிடப்பட்ட தொகை | உண்மையான வெளியீடு எதிர்பார்க்கப்படும் வெளியீட்டின் சதவீதமாக (%) | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 100%-90% | 75%-89% | 50%-74% | 49% இற்கும் கீழ் |
| கொள்கை & விசாரணை | பாராளுமன்றத்தில் வாய்மொழியாக பதிலளிக்க சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்களைத் தயாரித்து சமர்ப்பித்தல் | | 24 | 100% | - | - | - |
| | அருச்சிய உறுப்பினர்களால் அமைச்சரவை ஆலோசனைக்குழுக்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளுக்கு உரிய கவனிக்கத்தக்க குறிப்பு/பரிந்துரைகளை உள்ளடக்கிய அறிக்கைகளைத் தயாரித்தல் | அனுப்பப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | 12 | 100% | - | - | - |
| | திறந்த மற்றும் பொறுப்புள்ள ஆட்சி தொடர்பாக துறைபோதி மேற்பார்வை குழுவால் குறிப்பிடப்பட்ட விஷயங்களில் நடவடிக்கை எடுத்து, தொடர்புடைய பரிந்துரைகளை சமர்ப்பித்தல் | குறிப்பிடப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | 24 | 100% | - | - | - |
| | பணியிழப்பாளர்களின் சங்கங்களுடன் அவர்களது பிரச்சனைகள் தொடர்பாக கலந்துரையாடல்கள் நடத்துதல் | நடத்திய கூட்டங்களின் எண்ணிக்கை (ஒரு காலாண்டிற்கு ஒரு கூட்டம்) | 04 | - | - | 50% | - |

| செயற்பாடு | துணை செயல்பாடுகள் | செயல்திறன் | மதிப்பிடப்பட்ட தொகை | உண்மையான வெளியீடு எதிர்பார்க்கப்படும் வெளியீட்டின் சதவீதமாக (%) | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 100%-90% | 75%-89% | 50%-74% | 49% இற்கும் கீழ் |
| கொள்கை & விசாரணை | அமைச்சரவை நினைவாக்கக் குறிப்புகளுக்கு பரிந்துரைகளை சமர்ப்பித்தல் | குறிப்பிடப்பட்ட கண்காணிப்புகளின் எண்ணிக்கை | 12 | 100% | - | - | - |
| | ஓய்வூதியச் சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டி கடிதங்களை வெளியிடுதல் | வெளியிடப்பட்ட ஓய்வூதியச் சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டி கடிதங்களின் எண்ணிக்கை | 24 | 100% | - | - | - |
| | துறையின் பிரிவுகளுக்கு தனிநபர்கள் மற்றும் பிற நிறுவனங்கள் சமர்ப்பித்த விஷயங்களின் மீது கொள்கை முடிவுகள் எடுக்கும் செயல்முறை | அனுப்பப்பட்ட முடிவுகளின் எண்ணிக்கை | 240 | 81% | - | - | - |

** பெறப்படும் வருமான

# 05.
# நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதில் செயல்திறன்

## 5.1. நிலைபேறான வளர்ச்சி இலக்குகள் அடையாளம் காணப்பட்டுள்ளன

| குறிக்கோள்/ இலக்கு | குறிக்கோள் | சாதனை குறியீடு | இன்றுவரை சாதனைகளின் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50%-74% | 75%-100% |
| எல்லா இடங்களிலும் அதன் அனைத்து வடிவங்களிலும் வறுமையை முடிவுக்குக் கொண்டுவருதல் | 1.3. 2030 க்குள், அனைவருக்கும் சமமான மற்றும் நிலையான சமூகப் பாதுகாப்பு அமைப்பு மற்றும் நடவடிக்கைகளை நிறுவி மேம்படுத்தல். | 1.3.1.f.i. பாலினத்தின் மூலம் அரசு ஓய்வூதியம் பெறும் முதியவரின் விகிதம் | | | |

2024 ஆம் ஆண்டில், 725,282 ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது மேலும் இது தொடர்புடைய பாலின விகிதம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

பெண் – 49.2%

ஆண் – 50.8%

## 5.2. நிலைபேறான வளர்ச்சி இலக்குகளை அடைவதில் சாதனைகள் மற்றும் சவால்கள்

நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் வழங்குவதற்கான முன்மொழிவுகளைக் கொண்ட 'அனைவருக்கும் ஓய்வூதியம்' என்ற முன்மொழிவுகளின் தொகுப்பு, கொள்கை முடிவுகளை எடுப்பதற்கு பொறுப்பான நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது மற்றும் அது அரசாங்க கொள்கைகளின் அடிப்படையிலும் தீர்மானிக்கப்படுகிறது.

ஓய்வூதிய பிரமாணக் குறிப்பில், விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய கட்டளைச் சட்டம், சட்ட கட்டமைப்புகள், விதிகள் மற்றும் கொள்கை முடிவுகளின்படி ஓய்வூதியம் பெறும் முதியோர்களின் (பாலினத்தின் அடிப்படையில்) விகிதம், அரச சேவையில் ஆட்சேர்ப்புக்கான கொள்கைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.

அரசாங்க ஓய்வூதியம் பெறும் முதியோர்களின் பாலின விகிதத்தை ஓய்வூதியத் திணைக்களத்தின் பொறுப்பாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் (1.3.1.f.i) ஓய்வூதியத் திணைக்களத்தால் தனியாக நிர்வகிக்க முடியாது என்பது வலியுறுத்தப்படுகிறது. அரை-அரசு நிறுவனங்கள் ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி போன்ற ஓய்வூதியத்திற்குப் பிந்தைய நன்மை திட்டங்களைக் கொண்டுள்ளன, மேலும் தற்காலிக மற்றும் சுய ஊழியர்களுக்கு

ஓய்வூதியத் திட்டங்களை அறிமுகப்படுத்த முன்மொழியப்பட்டால், அதனுடன் இணைக்கப்பட்ட அனைத்து தரப்பினரின் பங்களிப்பையும் பெற பரிந்துரைக்கப்படுகிறது. குறிப்பாக தொழிலாளர் துறை, சமூக சேவைகள் அமைச்சகம் மற்றும் விவசாயக் காப்பீட்டு சபை போன்ற நிறுவனங்கள் அந்தத் துறைகளுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளன. எனவே, இதுபோன்ற வேறு எந்த நிறுவனங்களின் தலையீடும் இல்லாமல் ஓய்வூதியத் திணைக்களத்தினூடாக மட்டும் இலக்குகள், தரவுகள் மற்றும் முன்னேற்றக் குறியீடுகளை அளவிடுவது பொருத்தமற்றதாகும்.

# 06.

# மனிதவள விவரக் குறிப்பு

## 6.1 ஆளணி முகாமைத்துவம்

| | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | தற்போதுள்ளஆளணி | வெற்றிடங்கள் (மிகை) |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 35 | 27 | 08 |
| மூன்றாம் நிலை | 11 | 10 | 01 |
| இரண்டாம் நிலை | 1,102 | 1,030 | 72 |
| ஆரம்ப நிலை | 97 | 76 | 21 |
| **மொத்தம்** | **1,245** | **1,143** | **102** |

## 6.3. மனிதவள அபிவிருத்தி

| நிகழ்ச்சியின் பெயர் | பயிற்றப்பட்ட ஆளணியினரின் எண்ணிக்கை | பயிற்சிநெறியின் காலஎல்லை | மொத்த முதலீடு | | நிகழ்ச்சியின் தன்மை (உள்நாட்டு/ வெளிநாட்டு) |
|---|---|---|---|---|---|
| | | | உள்நாட்டு | வெளி நாட்டு | |
| பரவலாக்கப்பட்ட ஓய்வூதிய விண்ணப்பத்தை சரியாக சமர்ப்பிப்பது குறித்து அரச நிறுவனங்களின் விடய அலுவலர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான பயிற்சித் திட்டம் | 197 | மு.ப.9.30 – பி.ப 12.30 | நிகழ்நிலை | | உள்நாட்டு |
| ஓய்வூதிய விண்ணப்பத்தை சரியாக சமர்ப்பிப்பது குறித்து அரச நிறுவனங்களின் விடய அலுவலர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான பயிற்சித் திட்டம் | 745 | மு.ப.9.30 – பி.ப 12.30 | நிகழ்நிலை | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓய்வூதியத் திணைக்களத்தின் பணியாளர் அலுவலர்களுக்கு கடிதப் பரிமாற்றல்களைக் கையாள்வது குறித்து ஒரு நாள் பயிற்சித் திட்டம். | 21 | ½ நாள் மு.ப 9.00 பி.ப 3.00 | 14,400/= ஓய்வூதியத் திணைக்களம் | | உள்நாட்டு |
| ஓய்வூதியத் திணைக்களத்தின் இரண்டாம் நிலை அலுவலர்களுக்கு Microsoft Word பயிற்சித் திட்டத்தை நடத்துதல். | 99 | 02 நாட்கள் | 3600.00 ஓய்வூதியத் திணைக்களம் | | |
| மரணப் பணிக்கொடை வழங்குவது தொடர்பாக அரசதுறை விடய அலுவலர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பயிற்சித் திட்டம் | 497 | 02 மணி மு.ப.10.00 – பி.ப 12.00 | நிகழ்நிலை | | |
| ஓய்வூதியத் திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்ப அமைப்புகளை அணுகுவதில் ஏற்படும் சிக்கல்கள் குறித்து திணைக்கள தகவல் தொழில்நுட்பப் பிரிவோடு கலந்துரையாடுவதற்கான நிகழ்நிலை அமர்வு | 154 | மு.ப 9.30 - பி.ப 12.30 | நிகழ்நிலை | | |
| பங்களிப்புகளைத் திரும்பப் பெறும் விடயம் குறித்து அரச நிறுவனங்களின் துறைசார் அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த பயிற்சித் திட்டம் | 853 | மு.ப 9.30 - பி.ப 1.00 | நிகழ்நிலை | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பரவலாக்கப்பட்ட ஓய்வூதிய விண்ணப்பத்தை சரியாகச் சமர்ப்பிப்பது குறித்து அரச நிறுவனங்களின் துறைசார் அலுவல்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த பயிற்சித் திட்டம் (தமிழ் மொழி பயிற்சி) | 114 | மு.ப 9.30 - பி.ப 12.30 | நிகழ்நிலை | | உள்நாட்டு |
| அனுராதபுரம் மாவட்டத்தின் பதவிய, ஶ்ரீ புர, வெலிஓய பிரதேச செயலகங்களில் ஓய்வூதியத் திணைக்களத்தின் துறைசார் அதிகாரிகள் மற்றும் புதிய துறைசார் அதிகாரிகளுக்கு ஓய்வூதியம் செலுத்துவது குறித்து பயிற்சித் திட்டத்தை நடத்துதல் | 40 | 02 நாட்கள் | அநுராதபுர மாவட்ட செயலகம் | | |
| மையப்படுத்தப்பட்ட ஓய்வூதிய விண்ணப்பத்தை சரியாகச் சமர்ப்பிப்பது குறித்து அரச நிறுவனங்களின் துறைசார் அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த பயிற்சித் திட்டம் (தமிழ் மொழி பயிற்சி) | 263 | மு.ப 9.30 - பி.ப 12.30 | நிகழ்நிலை | | |
| விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியம் வழங்குவதில் ஏற்படும் சிக்கல்கள் குறித்து பிரதேச செயலக அதிகாரிகளுடன் கலந்துரையாட நிகழ்நிலை அமர்வு | 285 | மு.ப 9.30 - பி.ப 12.30 | நிகழ்நிலை | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வெளிநாட்டு ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பான பிரச்சினைகள் கலந்துரையாடுவது குறித்து நிகழ்நிலை அமர்வு | 235 | மு.ப 9.00 - பி.ப 12.00 | நிகழ்நிலை | | உள்நாட்டு |
| இராணுவ ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பான பிரச்சினைகள் குறித்து கலந்துரையாட நிகழ்நிலை அமர்வு | 266 | மு.ப 9.00 - பி.ப 12.00 | நிகழ்நிலை | | |
| **DS Portal** மற்றும் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பான பயிற்சித் திட்டம் | 153 | மு.ப 9.30 - பி.ப 1.30 | நிகழ்நிலை | | |
| ஓய்வூதியத் திணைக்களத்தின் இரண்டாம் நிலை அதிகாரிகளுக்கான150 மணிநேர தமிழ் பாடநெறி | 74 | 150 மணிநேரம் | 37,500.00 (இறுதி 50 மணிநேரங்களுக்காக) | | |
| ஓய்வூதியத் திணைக்களத்தின் ஆரம்ப நிலை அதிகாரிகளுக்கான 100 மணிநேர தமிழ் பாடநெறி | 11 | 100 மணிநேரம் | 31,730.76 கடற்றொழில் நீரியல்வளங்கள் திணைக்களம் | | |
| ஓய்வூதியத் திணைக்களத்தின் சிரேஷ்ட நிலை அதிகாரிகளுக்கான 200 மணிநேர தமிழ் பாடநெறி | 02 | 200 மணிநேரம் | ஓய்வூதியத் திணைக்களம் | | |
| திறந்த மற்றும் பொறுப்புணர்வுள்ள அரசாங்கத்திற்கான அரசு அதிகாரிகளின் பொறுப்பு குறித்த பயிற்சித் திட்டம் திறந்த மற்றும் பொறுப்புணர்வுள்ள அரசாங்கத்திற்கான அரசு அதிகாரிகளின் பொறுப்பு குறித்த | 67 | மு.ப 10.30 – பி.ப 12.30 | 2400.00 ஓய்வூதியத் திணைக்களம் | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொது நிர்வாக சுற்றறிக்கை 27/2023 ஐ செயல்படுத்துவது குறித்த அமர்வு மற்றும் அரச அதிகாரிகள் கடமை தவறியதால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நிவாரணம் வழங்குதல். | | | | | |
| திறந்த மற்றும் பொறுப்புணர்வுள்ள அரசாங்கத்திற்கான அரசு அதிகாரிகளின் பொறுப்பு குறித்த பயிற்சித் திட்டத்தில், பொறுப்பான கடமைகளைச் செய்வதற்கான ஓய்வூதிய அனுகூலங்கள் குறித்த அமர்வு | 60 | மு.ப 9.30 – பி.ப 1.00 | ஓய்வூதியத் திணைக்களம் | | உள்நாட்டு |
| மேற்கூறிய திட்டத்தில், இலஞ்சம் மற்றும் ஊழல் இல்லாத பொது சேவையை உருவாக்குவது குறித்த அமர்வு | 60 | மு.ப 11.00 - பி.ப 12.30 | ஓய்வூதியத் திணைக்களம் | | |
| திறந்த மற்றும் பொறுப்புணர்வுள்ள அரசாங்கத்திற்கான அரசு அதிகாரிகளின் பொறுப்பு குறித்த பயிற்சித் திட்டத்தில், திறமையான மற்றும் பயனுள்ள சேவைகளை வழங்குவதிலும் பொறுப்பான பொது சேவையைப் பாதுகாப்பதிலும் அரசு அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் மற்றும் பொறுப்புணர்வு மிக்க அரச சேவையைப் பாதுகாத்தல் | 52 | மு.ப 9.30 - பி.ப 12.30 | 46,740.00 ஓய்வூதியத் திணைக்களம் (உபசரிப்புச் செலவு உட்பட) | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓய்வூதியத் திணைக்களத்தின் கீழ் உள்ள இரண்டாம் நிலை அதிகாரிகளுக்கான சுய ஊக்குவிப்பு மற்றும் தனிப்பட்ட அபிவிருத்திப் பயிற்சி | 95 | பி.ப 12.30 – பிப. 3.30 | 62,420.00 ஓய்வூதியத் திணைக்களம் (உபசரிப்புச் செலவு உட்பட) | | |
| திறமையான மற்றும் பயனுள்ள சேவைகளை வழங்குவதிலும் பொறுப்பான பொது சேவையைப் பாதுகாப்பதிலும் பொது அதிகாரிகள் கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் மற்றும் பொறுப்பு வாய்ந்த அரச சேவைக்காக அவற்றைப் பாதுகாத்தல் | 10 | 01 | 9,240.00 ஓய்வூதியத் திணைக்களம் (உபசரிப்புச் செலவு உட்பட) | | |
| ஓய்வூதியத் திணைக்களத்தைச் சேர்ந்த இரண்டாம் நிலை அதிகாரிகளுக்கான சுய ஊக்குவிப்பு மற்றும் தனிப்பட்ட அபிவிருத்திப் பயிற்சி | 72 | 01 நாள் | 130,000.00 ஓய்வூதியத் திணைக்களம் | | உள்நாட்டு |
| ஓட்டுநர்களுக்கான ஓட்டுநர் திறன் மற்றும் அணுகுமுறைகளை வளர்ப்பது குறித்த பயிற்சித் திட்டம் | 206 | 01 நாள் | நிகழ்நிலை | | |
| ஓய்வூதியத் திணைக்களத்தின் கீழ் உள்ள இரண்டாம் நிலை அதிகாரிகளுக்கான நிதி விதிமுறைகள் குறித்த பயிற்சித் திட்டம் | 16 | 01 நாள் | 15,360.00 ஓய்வூதியத் திணைக்களம் (உபசரிப்புச் செலவு உட்பட) | | |
| விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியம் வழங்குவது தொடர்பான பிரச்சினைகள் | 10 | 01 நாள் | 75,000.00 தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம் | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| குறித்து கலந்துரையாடும் பயிற்சித் திட்டம் | | | | | |
| **கல்விப் பாடநெறிகளுக்கு** | | | | | |
| திருமதி. துலக்ஷி ஜனகன் சார்பாக பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் (CIMA) 2024 வருடாந்த உறுப்பாண்மைக் கட்டணத்தை மீள்நிரப்புதல் | 01 | | 144,173.90 | | உள்நாட்டு |
| திருமதி டபிள்யூ.சி.எல். அல்விஸின் சர்வதேச உறவுகள் தொடர்பான முதுகலை படிப்புக்கான மீதமுள்ள தொகையை செலுத்துதல். | 01 | 02 வருடங்கள் | 9,120.00 மீதித் தொகை | | |
| திருமதி அனோமா பிரியங்க கலந்து கொண்ட Microsoft Excel குறித்த பயிற்சி பட்டறைக்கான கட்டணம். | 01 | 02 நாட்கள் | 16,500.00 | | |
| திருமதி டி.ஏ.ஏ. சந்தமாலி கலந்து கொண்ட Microsoft Excel குறித்த பயிற்சி பட்டறைக்கான கட்டணம். | 01 | 02 நாட்கள் | 16,500.00 | | உள்நாட்டு |

### பிற நிறுவனங்கள் நடத்தும் பயிற்சித் திட்டங்களில் பங்கேற்றல்

| நிகழ்ச்சியின் பெயர் | பயிற்றப்பட்ட ஆளணியினரின் எண்ணிக்கை | பயிற்சிநெறியின் காலஎல்லை | மொத்த முதலீடு | | நிகழ்ச்சியின்தன்மை (உள்நாட்டு/ வெளிநாட்டு) |
|---|---|---|---|---|---|
| | | | உள்நாட்டு | வெளி நாட்டு | |
| அரசாங்கப் பெறுகை நடைமுறைகள் | 2 | 02 நாட்கள் | 26,000.00 SDFL கேட்போர் கூடம் | | உள்நாட்டு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தனிப்பட்ட கோப்பைப் பராமரித்தல் | 1 | 02 நாட்கள் | 13.000.00 SDFL கேட்போர் கூடம் | | |
| இலஞ்சம் அல்லது ஊழல் ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்படும் நேர்மை அதிகாரிகளுக்கான பயிற்சித் திட்டம் | 1 | 01 நாள் | பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிஅமைச்சு | | |
| இலஞ்சம் அல்லது ஊழல் ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்படும் ஊழல் எதிர்ப்பு பயிற்சியாளர்களுக்கான பயிற்சித் திட்டம் | 1 | 03 நாட்கள் | பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிஅமைச்சு | | |
| அரசு ஊழியர்களுக்கான சம்பள ஏற்பாடுகள் குறித்த செயலமர்வு | 1 | 01 நாள் | 7,500.00 தொலைக் கல்வி நிறுவகம் | | |
| காயத் தடுப்பு மற்றும் அடிப்படை முதலுதவி குறித்த ஆலோசனைச் செயலமர்வு (சுகாதார அமைச்சு) | 1 | 01 நாள் | இலங்கை மன்ற நிறுவகம் | | உள்நாட்டு |
| நிர்வாக அதிகாரிகளின் பொறுப்புகள் மற்றும் கடமைகள் | 1 | 02 நாட்கள் | 13,000.00 SDFL கேட்போர் கூடம் | | |
| அரசு அதிகாரிகளின் முற்பண "B" கணக்கைத் தயாரித்தல். | 2 | 01 நாள் | 14,000.00 SDFL கேட்போர் கூடம் | | |
| பொது கணக்கீட்டு நடைமுறை மற்றும் முடிவுக் கணக்குகளைத் தயாரித்தல் குறித்த இரண்டு நாள் செயலமர்வு | 2 | 02 நாட்கள் | 26,000.00 SDFL கேட்போர் கூடம் | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அரசாங்க அதிகாரிகளின் சம்பளம் தயாரித்தல் | 1 | 01 நாள் | 5,000.00 தேசிய தொழிலாளர் கற்கைகள் நிறுவகம் | | |
| அமைச்சரவை குறிப்பாணைகளைத் தயாரித்தல் | 1 | 01 நாள் | 7,000.00 SDFL கேட்போர் கூடம் | | |
| Government Payroll | 2 | 03 நாட்கள் | 42,000.00 SDFL கேட்போர் கூடம் | | |
| வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பு மற்றும் சொத்துக்களை அகற்றல் | 1 | 02 நாட்கள் | 13,000.00 SDFL கேட்போர் கூடம் | | |
| தனிப்பட்ட கோப்புகள் தொடர்பான பயிற்சித் திட்டம் | 1 | 02 நாட்கள் | 13,000.00 SDFL கேட்போர் கூடம் | | |
| பெறுகை குறித்த பயிற்சித் திட்டம் | 2 | 02 நாட்கள் | 26,000.00 SDFL கேட்போர் கூடம் | | உள்நாட்டு |
| 42nd National IT Conference 2024 நிகழ்ச்சி | 1 | 02 நாட்கள் | 30,000.00 Computer Society of Sri Lanka | | |
| பெறுகை குறித்த சான்றிதழ் பாடநெறி | 1 | 02 நாட்கள் | 25,000.00 தேசிய தொழிலாளர் கற்கைகள் நிறுவகம் | | |
| தற்போதைய அலுவலக அமைப்புகள் மற்றும் அலுவலக முகாமைத்துவம் | 1 | 02 நாட்கள் | 13,000.00 SDFL கேட்போர் கூடம் | | |
| ஒழுக்காற்று நடைமுறைகள் | 1 | 02 நாட்கள் | 13,000.00 SDFL கேட்போர் கூடம் | | |

## 07.
## இணக்க அறிக்கை

| தொ.இல | தேவையை நடைமுறைப்படுத்த வேண்டும். | இணக்கத்தின் தன்மை (இணக்கப்பட்டது/ இணங்கவில்லை) | பதில் இணங்கவில்லை என்றால் சுருக்கமாக விளக்கம் | எதிர்காலத்தில் இணங்காத சூழ்நிலையைத் தவிர்க்க எடுக்கப்பட வேண்டிய பொருத்தமான நடவடிக்கை |
|---|---|---|---|---|
| **1.** | **எதிர்காலத்தில் இணங்காத சூழ்நிலையைத் தவிர்க்க சரியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்** | | | |
| 1.1 | ஆண்டு நிதி அறிக்கைகள் | இணக்கம் | | |
| 1.2 | பொது அலுவலர்களின் முற்பணக் கணக்கு | இணக்கம் | | |
| 1.3 | வர்தக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்கு (வர்தக முற்பணக் கணக்கு) | பொருந்தும் | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | | | |
| 1.5 | விசேட முற்பணக் கணக்கு | | | |
| 1.6 | மற்றவை | | | |
| **2.** | **புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பராமரித்தல் (நி.பி. 445)** | | | |
| 2.1 | 267/2018 ஆம் இலக்க பொ.நி சுற்றறிக்கயின் படி தேவையான புதுப்பித்தலுடன் நிலையான சொத்துகள் பதிவேட்டை பராமரித்தல் | இணக்கம் | | |
| 2.2 | தேவையான புதுப்பித்தலுடன் கூலி மற்றும் சம்பளப் பதிவு / கூலி மற்றும் சம்பள அட்டைகளை பராமரித்தல் | இணக்கம் | | |
| 2.3 | தேவையான புதுப்பித்தலுடன் கணக்காய்வு ஐயவினா பதிவேட்டைப் பராமரித்தல் | இணக்கம் | | |
| 2.4 | தேவையான புதுப்பித்தலுடன் உள்ளக கணக்காய்வு ஐயவினா பதிவேட்டைப் பராமரித்தல் | இணக்கம் | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்குச் சுருக்கங்களையும் தயாரித்து அவற்றை பொது திறைசேரியில் உரிய திகதியில் சமர்ப்பித்தல் (CIGAS) | இணக்கம் | | |
| 2.6 | தேவையான புதுப்பித்தலுடன் காசோலைகள் மற்றும் பண ஆணைப் பதிவேட்டைப் பராமரித்தல் | இணக்கம் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.7 | தேவையான புதுப்பித்தலுடன் இருப்புப் பதிவெடுகளை பராமரித்தல் | இணக்கம் | | |
| 2.8 | தேவையான புதுப்பித்தலுடன் கையிருப்பு பதிவேட்டைப் பராமரித்தல் | இணக்கம் | | |
| 2.9 | தேவையான புதுப்பித்தலுடன் இழப்புகள் மற்றும் சேதங்கள் பதிவேட்டைப் பராமரித்தல் | இணக்கம் | | |
| 2.10 | தேவையான புதுப்பித்தலுடன் பொறுப்புகள் பதிவேட்டைப் பராமரித்தல் | இணக்கம் | | |
| 2.11 | தேவையான புதுப்பித்தலுடன் கவுன்டரபொயில் பதிவேட்டைப் பராமரித்தல் (GA - N20) | இணக்கம் | | |
| **3.** | **நிதிக் கட்டுப்பாட்டிற்கான கடமகளை ஒதுக்குதல் ( நி.பி. 135)** | | | |
| 3.1 | நிறுவனத்திற்குள் நிதிக் கட்டுப்பாட்டிற்கான அதிகாரங்களை வழங்குதல் | இணக்கம் | | |
| 3.2 | நிறுவனத்திற்குள் நிதிக் கட்டுப்பாட்டிற்கான அதிகாரங்களை வழங்குதல் | இணக்கம் | | |
| 3.3 | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் ஒப்புதல் அளிக்கும் அதிகாரங்களை வழங்குதல் | இணக்கம் | | |
| 3.4 | 11.05.2014 திகதிய 171/2004 ஆம் இலக்க பொதுக் கணக்குச் சுற்றறிக்கை இன் படி சம்பளத்திற்கான மென்பொருள் தொகுப்பைப் பயன்படுத்தும் போது கணக்காளரின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு நடவடிக்கை எடுத்தல். | இணக்கம் | | |
| **4.** | **வருடாந்த திட்டங்களை தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந் செயல் திட்டம் தயாரித்தல் | இணக்கம் | | |
| 4.2 | வருடாந்த பெறுகை திட்டத்தை தயாரித்தல் | இணக்கம் | | |
| 4.3 | வருடாந்த உள்ளகக் கணக்காய்வு திட்டத்தை தயாரித்தல் | இணக்கம் | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்து, உரிய திகதியில் தேசிய வரவு செலவுத் திணைக்களத்திற்கு (NDB) சமர்ப்பித்தல் | இணக்கம் | | |
| 4.5 | ஆண்டு காசுப் பாய்ச்சல் அறிக்கைகளை திறைசேரி செயல்பாட்டுத் திணைக்களத்திற்கு உரிய திகதயில் சமர்ப்பித்தல் | இணக்கம் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **5.** | **கணக்காய்வு ஐயவினா** | | | |
| 5.1 | கணக்காய்வாளர் நாயகத்தால் பரிந்துரைக்கப்பட்ட திகதியில் அனைத்து தணிக்கை ஐயவினா களுக்கும் பதில்களை வழங்குதல் | இணக்கம் இல்லை | பதில்களைச் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது | |
| **6.** | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| 6.1 | நிதி பிரமாணம் 134(2) DMA/1-2019 இன் படி ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு உள் கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல் | இணக்கம் | | |
| 6.2 | ஒவ்வொரு உள் கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாதத்திற்குள் பதில்களை உருவாக்குதல் | இணக்கம் | | |
| 6.3 | 2018 ஆம் ஆண்டின் 19 அம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் இன் துணைப் பிரிவு 40 (4) இன் படி அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளையும் கணக்காய்வாளர் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல். | இணக்கம் | | |
| 6.4 | 134 (3) ஆம் இலக்க நிதி பிரமாணம் இன் படி அனைத்து உள்ளகக் கணக்காய்வின் அனைத்து அறிக்கைகளின் பிரதிகளையும் கணக்காய்வாளர் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல். | இணக்கம் | | |
| **7.** | **கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழு** | | | |
| 7.1 | 1-2019 ஆம் இலக்க DMA சுற்றறிக்கையின்படி தொடர்புடைய ஆண்டில் கணக்காய்வாளர் மற்றும் முகாமைத்துவ குழுவினால் குறைந்தபட்சம் 04 கூட்டங்களை நடத்துதல். | இணக்கம் | | |
| **8.** | **சொத்து முகாமைத்தும்** | | | |
| 8.1 | 01/2-2017 ஆம் இலக்க சொத்துகள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் படி, சொத்துகளை வாங்குதல் மற்றும் அகற்றுதல் பற்றிய விவரங்களைக் கட்டுப்பாட்டு பணிப்பாளர் நாயக அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல் | இணக்கம் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 8.2 | மேற்கூறிய சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின் விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு பொருத்தமான ஒரு அதிகாரியை நியமித்தல் மற்றும் மேற்படி அலுவலரின் விபரங்களை கட்டுப்பாட்டு பணிப்பாளர் நாயக அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல் . | இணக்கம் | | |
| 8.3 | 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின்படி கணக்கெடுப்பு சபையினால் நடத்தி உரிய அறிக்கைகளை கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல். | இணக்கம் | | |
| 8.4 | சுற்றறிக்கையால் பரிந்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் கணக்கெடுப்பு சபையினாலிருந்து வெளிப்படுத்தப்பட்ட அதிகப்படியான, குறைபாடுகளை சரிசெய்தல் மற்றும் கொடுக்கப்பட்ட பரிந்துரைகளை செயல்படுத்துதல். | இணக்கம் | | |
| 8.5 | C.F.R.772 இன் படி பயன்படுத்த முடியாத பொருட்களை அப்புறப்படுத்துதல் | இணக்கம் | | |
| **9.** | **வாகனங்களின் முகாமைத்துவம்** | | | |
| 9.1 | பூல் வாகனங்களுக்கான தினசரி இயங்கும் விளக்கப்படங்கள் மற்றும் மாதாந்த சுருக்கங்கள் தயாரித்தல் மற்றும் அவற்றை உரிய திகதியில் கணக்காளர் நாயகத்தினால் சமர்ப்பித்தல். | இணக்கம் | | |
| 9.2 | வாகனங்கள் பயன்படுத்த முடியாத திகதியிலிருந்து 06 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதியில் அகற்றல். | இணக்கம் | | |
| 9.3 | தேவையான புதுப்பித்தலுடன் வாகனங்களில் பதிவு புத்தகங்களை பராமரித்தல். | இணக்கம் | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்துக்கும் நிதி பிரமாண இல. 103, 104, 109 மற்றும் 110 தின் படி நடவடிக்கை எடுத்தல். | இணக்கம் | | |
| 9.5 | 29.12.2016 திகதிய 30/2016 இன் பொது நிர்வாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் நுகர்வை மறு ஆய்வு செய்தல். | இணக்கம் | | |
| 9.6 | குத்தகைக் காலத்தின் முடிவில் குத்தகைக்கு விடப்பட்ட வாகனங்களின் உரிமையை மாற்றுதல். | இணக்கம் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **10.** | **வங்கி கணக்குகளின் முகாமைத்துவம்** | | | |
| 10.1 | வங்கி சமரச அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் சான்றளிக்கப்பட்ட பிறகு உரிய திகதியில் அவற்றை தணிக்கைக்கு சமர்ப்பித்தல். | இணக்கம் | | |
| 10.2 | மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டு அல்லது முந்தைய ஆண்டுகளில் இருந்து கொண்டு வரப்பட்ட செயலற்ற வங்கிக் கணக்குகளைத் தீர்ப்பது. | இணக்கம் | | |
| 10.3 | சரிசெய்யப்பட வேண்டிய நிலுவைகள் மீது நிதி விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுப்பது மற்றும் வங்கி சமரச அறிக்கைகளில் இருந்து வெளிப்படுத்துவது மற்றும் அவற்றை ஒரு மாத காலத்திற்குள் அமைத்தல். | இணக்கம் | | |
| **11.** | **விதிகளின் பயன்பாடு** | | | |
| 11.1 | பரிந்துரைக்கப்பட்ட வரம்புகளை மீறாத வகையில் செலவு ஏற்பாடுகள். | இணக்கம் | | |
| 11.2 | நி.பி.94 (1) இன் படி பொறுப்புகளில் நுழைதல் எனவே<br>விதிகளைப் பயன்படுத்திய பிறகு ஆண்டின் இறுதியில் வரம்பை மீறக்கூடாது. | இணக்கம் | | |
| **12.** | **பொது அலுவலர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | வரம்புகளுக்கு இணங்க வேண்டும் | இணக்கம் | | |
| 12.2 | நிலுவையில் உள்ள கடன் நிலுவைகள் குறித்த நேரத்தை பகுப்பாய்வு செய்தல். | இணக்கம் | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன் நிலுவைகளைத் தீர்ப்பது. | இணங்கவில்லை | புத்தகங்களிலிருந்து மீட்டெடுக்க அல்லது எழுத நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | |
| **13.** | **பொது வைப்பு கணக்கு** | | | |
| 13.1 | நி.பி.571 இன் படி காலாவதியான வைப்புக்கள் மீது நடவடிக்கை எடுத்தல் | இணக்கம் | | |
| 13.2 | தேவையான புதுப்பித்தலுடன் பொது வைப்புக்கான கட்டுப்பாட்டுக் கணக்கைப் பராமரித்தல். | இணக்கம் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **14.** | **முற்பணக்க கணக்கு** | | | |
| 14.1 | மதிப்பாய்வின் கீழ் ஆண்டின் இறுதியில் பணப்புத்தகத்தின் மீதியை திறைசேரி செயல்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்புதல். | இணக்கம் | | |
| 14.2 | நி.பி.371 இன் படி வழங்கப்பட்ட தற்காலிக இடைக்காலத் முற்பணம் சம்பந்தப்பட்ட வேலை முடிந்த நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் தீர்த்தல். | இணக்கம் | | |
| 14.3 | நி.பி.371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத வகையில் தற்காலிக இடைக்காலதில் முற்பணம் வழங்குதல். | இணக்கம் | | |
| 14.4 | பொது திறைசேரி புத்தகங்களுடன் மாதந்தோறும் முற்பணக் கணக்கின் இருப்பை சரிசெய்தல். | இணக்கம் | | |
| **15.** | **வருவாய் கணக்கு** | | | |
| 15.1 | சேகரிக்கப்பட்ட வருமானத்திலிருந்து தொடர்புடைய விதிமுறைகளுக்கு இணங்க பணத்தைத் திரும்பப் பெறுதல். | இணக்கம் | | |
| 15.2 | சேகரிக்கப்பட்ட வருமானத்தை வைப்புக் கணக்கில் வரவு வைப்பதற்குப் பதிலாக வருமானத்தில் நேரடியாக வரவு வைப்பது. | இணக்கம் | | |
| 15.3 | F.R.176 இன் படி நிலுவையில் உள்ள வருமானம் குறித்த அறிக்கைகளை சமர்ப்பித்தல் | இணக்கம் | | |
| **16.** | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட வரம்புக்குள் பணியாளர்களை பராமரித்தல். | இணக்கம் | | |
| 16.2 | ஒவ்வொரு ஊழியர்களுக்கும் எழுத்துப்பூர்வமாக கடமைப் பட்டியலை வழங்குதல். | இணக்கம் | | |
| 16.3 | அனைத்து அறிக்கைகளையும் நிர்வாக சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல். | இணக்கம் | | |
| **17.** | **பொது மக்களுக்கு தகவல்களை வழங்குதல்.** | | | |
| 17.1 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி தகவல் அலுவலரை நியமித்தல் மற்றும் தேவையான புதுப்பித்தலுடன் தகவல்களை வழங்குவதற்கான பதிவேட்டை மாற்றுதல். | இணக்கம் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 17.2 | நிறுவனம் பற்றிய தகவல்கள் இணையதளம் மூலம் கொடுக்கப்பட்டு, பொது மக்களுக்கு இணையதளம் அல்லது மாற்று வழிகள் மூலம் அவர்களின் பாராட்டுகள் / குற்றச்சாட்டுகளை வெளியிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. | இணக்கம் | | |
| 17.3 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 08 மற்றும் 10ன் படி வருடத்திற்கு ஒருமுறை அல்லது இரண்டு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல். | இணக்கம் | | |
| **18.** | **பிரசைகள் பட்டயத்தை நடைமுறைப்படுத்துதல்** | | | |
| 18.1 | 05/2008 மற்றும் 05/2018 (1) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி பிரசைகள் பட்டயத்தை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல் | இணங்கவில்லை | நிறுவனத்தின் செயல்பாடுகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட குடிமக்கள் சாசனம் செயல்படுத்தப்பட்டு வருகிறது | |
| 18.2 | மேற்கூறிய சுற்றறிக்கையின் பந்தி 2.3 இன் படி பிரசைகள் /சேவை பெறுனர் பட்டயத்தை தயாரித்தல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவற்றின் மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டிற்கான ஒரு முறையைத் தயாரித்தல். | இணங்கவில்லை | | |
| **19.** | **மனித வளத் திட்டத்தை உருவாக்குதல்** | | | |
| 19.1 | 24.01.2018 திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் இணைப்பு 02 இன் அடிப்படையில் மனித வளத் திட்டத்தைத் தயாரித்தல். | இணங்கவில்லை | நிறுவனத்தின் தேவைக்கேற்ப மனிதவளத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | இலக்க 02/2018 பொது நிர்வாக சுற்றறிக்கையின் விதிமுறைகளுக்கு இணங்க மனித வளத் திட்டத்தை தயாரிப்பதற்கு சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் எடுத்தல். |
| 19.2 | மேலே குறிப்பிட்டுள்ள மனித வளத் திட்டத்தில், ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஆண்டுக்கு குறைந்தது 12 மணிநேரத்திற்குக் குறையாத பயிற்சி வாய்ப்பை உறுதி செய்தல். | இணக்கம் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 19.3 | மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் சுட்டிக்காட்டப்பட்ட மாதிரியின் அடிப்படையில் முழு ஊழியர்களுக்கான வருடாந்திர செயல்திறன் ஒப்பந்தங்களில் கையொப்பமிடுதல். | இணங்கவில்லை | பொது நிர்வாக சுற்றறிக்கை 02/2018 (ஐ* இன் படி வருடாந்திர செயல்திறன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட வேண்டிய அவசியமில்லை | |
| 19.4 | மேலே உள்ள சுற்றறிக்கையின் 6.5 வது பிரிவின்படி மனித வளத் திட்டத்தைத் தயாரித்தல், திறன் மேம்பாட்டுத் திட்டங்களை மேம்படுத்துதல், திறன் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகியவற்றுக்கான பொறுப்புகளை வழங்கும் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல். | இணக்கம் | | |
| **20.** | **கணக்காய்வுப் பந்திகளுக்கு பதில்களை உருவாக்குதல்** | | | |
| 20.1 | கணக்காய்வாளர் நாயகத்தால் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை கடந்த வருடங்களில் வழங்கப்பட்ட கணக்காய்வு பந்திகளின் மூலம் நிவர்த்தி செய்தல் | இணக்கம் | | |

ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions

විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව, මාළිගාවත්ත, කොළඹ 10
ஓய்வூதியத் திணைக்களம், மாளிகாவத்தை, கொழும்பு -10.
Department of pensions, Maligawaththa, Colombo 10

www.pensions.gov.lk